
தமிழரசு
16-10-1976 50 காசு.

# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஓரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு — வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

# தமிழரசு

16—10—1976

மலர் : 7 இதழ் : 8


## இந்த இதழில்.....


| | பக்க எண் |
|---|---|
| காடுகளையும், விலங்குகளையும் காத்திடுவோம் ! | 2 |
| வருங்காலத் தலைமுறையினருக்காக வனவிலங்குகளைக் காப்போம்! | 3 |
| வன விலங்குகளைப் பாதுகாக்க உறுதி கொள்வோம் ! | 4 |
| இன்றையத் தமிழ்நாடு | 5 |
| களக்காடு வனவிலங்குச் சரணாலயம் | 9 |
| தமிழ்நாட்டின் வனவிலங்குகளைக் காணவாரீர் ! | 13 |
| தமிழ்நாட்டின் குடும்ப நலத்திட்ட இலக்கு | 17 |
| குடும்ப நலத் திட்டத்தை ஊக்குவிக்க அரசு அளிக்கும் புதிய சலுகைகளும், சலுகை மறுப்புகளும் | 18 |
| சாதனைப் புகழை நிலை பெறச் செய்வீர் ! | 19 |
| நல்வாழ்வு-குடும்ப நலத்துறையின் நற்பணிகள் | 20 |
| படமும் செய்தியும் | 24 |
| தேசிய மக்கள் தொகைக் கொள்கை | 29 |
| வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டம்—1972 | 31 |
| பிளாஸ்டிக் பொருள்களை உருவாக்க பயிற்சி தரும் நிலையம் | 37 |
| குடும்ப நலத் திட்டத்திற்கு மதம் தடையாக இல்லை! | 40 |
| தமிழ்நாட்டில் குடும்பநல முனைப்பு இயக்கம் | 41 |
| வன உயிரினங்களைப் பாதுகாத்து நாட்டின் வளம் பெருக்குவோம்! | 45 |
| மறக்க முடியாத நினைவுகள்! | 47 |



கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பாளி அல்ல.




## நமது தேசிய விலங்கு

இந்தியாவின் தேசிய விலங்கு எது? புலிதான்!

இந்திய வன விலங்கு வாரியம் புலியை இந்தியாவின் தேசிய விலங்காக அறிவித்திருக்கிறது.

கடந்த இரண்டு நூற்றுண்டுகளாக இந்தியக் காடுகளில் உள்ள விலங்குகளில் புலி எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்து வந்துள்ளது. மறைந்து வரும் இந்த அரிய வனவிலங்கை அழிவிலிருந்து காப்பாற்றிப் பராமரிப்பதற்காகவே இதனை தேசிய விலங்காகத் தெரிந்தெடுத்து கௌரவித்திருக்கிறுர்கள்.

புலி, அறிவியல், பொருளாதாரம், கலாசாரம், உயிர் வாழ்க்கைச் சூழ்நிலை போன்ற பல துறைகளிலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதும், கண்கவர் வனப்புடன் திகழ்வதும் அதை இந்தப் பீடத்துக்கு உயர்த்தியிருக்கிறது.

இந்த நூற்றுண்டின் துவக்கத்தில் சுமார் 50,000 புலிகள் இருந்தன. ஆனுல், இன்று இந்த இனமே அழிந்து போய்விடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. புலி வேட்டையைத் தடை செய்யும் சட்டம் இந்தியாவில் இப்போது அமலில் உள்ளது.

"சுகாதாரத்துக்கும் நாம் போதிய கவனம் செலுத்த வேண்டும். சுகாதாரக்





கேடான சூழ்நிலைகளின் காரணமாகவே நோய்கள் தோன்றிப் பரவுகின்றன. ஆகவே, நம் சொந்த சுகாதாரத்தில் மட்டு மின்றி, வீடு, சுற்றுப்புறம் மற்றும் நாடு முழுதுமே சுத்தமாக இருப்பதில் கவனம் செலுத்த வேண்டும். சமீபத்திய கண்டு பிடிப்புகளின்படி, மிருகங்களைக் கொல் வது கூடக் கெடுதல்களைக் கொண்டு வருகிறது. காரணம், இயற்கைச் சம நிலையை அது பாதித்து விடுகிறது. இயற்கையில் ஒவ்வொன்றுக்கும் ஒவ் வொரு குறிப்பிட்ட பணி உண்டு. நாம் ஒதுக்கித் தள்ளும் குப்பையும், கூளமும் கூடப் பயனுள்ள உரமாகிறது. எதுவுமே வீணாகாத வகையில் உலகம் உருவாக்கப் பட்டுள்ளது. பாகுபாடின்றி மிருகங் களைக் கொல்வதைத் தடுக்க நாம் உறுதி பூண வேண்டும்.

—இந்திரா காந்தி



# வருங்காலத் தலைமுறையினருக்காக வன விலங்குகளைக் காப்போம்!

## ஆளுநர் வேண்டுகோள்

"வன விலங்குகளையும், அவை வசிக்கும் காடுகளையும் வருங்காலத் தலைமுறையினருக்காகப் பாதுகாக்க வேண்டும். பொருளாதார சமூகத் தேவைகளையொட்டி மனிதன் உணவுக்காகவும், இயற்கை வசதிகளுக்காகவும் வனங்களை ஆக்கிரமித்தான். இதனால் வனச்செல்வமும், பல அரிய விலங்கினங்களும் சேதமடையாமல் தடுப்பதற்காக விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளை மனிதன் பொருட்படுத்தவில்லை. நம் கண் முன்பே அழகு வாய்ந்த பூமியிலிருந்து அரிய விலங்கினங்கள் மறைந்துபோவதைக் காண்கிறோம்.

"உண்மை நிலையை அறிந்து நமது கடமையை நாம் இன்னும் செய்யவில்லை. வன விலங்குகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை நாம் நினைவு படுத்திக் கொள்ளவே ஆண்டுதோறும் வன விலங்கு வாரத்தைக் கொண்டாடுகிறோம். இவ்வாண்டு தமிழ் நாட்டில் நாம் இத்துறையில் தனி முயற்சி மேற்கொண்டுள்ளோம். அபூர்வ 'சிங்க வால் குரங்குகளை'ப் பாதுகாக்க நெல்லை மாவட்டம் களக்காடு 'ரிசர்வ்' காட்டில் சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். சென்னை கிண்டி பூங்கா, நாட்டிலேயே கடலோரக்காடுகளில் ஒரு பகுதியாகும். இங்கு வன விலங்குகளைப் பாதுகாக்க, இப்பூங்காவை தேசிய பூங்காவாக அறிவிக்கவும் நாங்கள் முடிவு செய்துள்ளோம். இப்பூங்காவில் கரும் மான், புள்ளி மான்கள் உட்பட பல்வேறு ரக தாவரங்களும் வன விலங்குகளும் உள்ளன. நமது வனப் பகுதிகளையும் சரணாலயங்களையும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம்.

வன விலங்குகளைப் பாதுகாப்பதில் மேலும் கவனம் செலுத்துமாறு தமிழக மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். குறிப்பாக இளைஞர்களுக்கு இந்த வேண்டுகோள் பொருந்தும், மிருகங்கள் மாத்திரமின்றி தேனீக்கள், வண்ணாத்திப் பூச்சிகள், பறவைகள், மீன், மற்றும் எல்லா விதமான உயிரினங்களிடமும் அவர்கள் அன்புகாட்ட வேண்டும். வன விலங்குகள் பற்றிய அறிவு வளர்ந்தால்தான், வன விலங்குகளிடம் அன்பு வளரும். இதில் ஆசிரியர்களுக்கு விசேஷ பொறுப்பு உண்டு. தங்களிடம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வன விலங்குகள், அவற்றின் வாழ்க்கை முறை, வாழும் இடங்கள் பற்றிய அறிவைப் புகட்ட வேண்டும்.

வன விலங்குகளுக்கான இந்திய போர்டு எடுத்துக்கொண்டுள்ள உறுதிமொழியைத் தமிழக மக்கள் நிறைவேற்ற வேண்டும்.







## வன விலங்குகளைப் பாதுகாக்க உறுதி கொள்வோம்!

வனவிலங்கு வாரத்தைக் கொண்டாடுவது, வன விலங்குச் செல்வங்களைப் பாதுகாத்து வருங்காலத் தலைமுறையினருக்கு அவற்றை விட்டுச் செல்ல வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துவதற்காகவேயாகும். நாம் வன விலங்குகளின் பாதுகாவலர்கள், அவற்றை நம் விருப்பப்படி எல்லாம் அழிக்கக்கூடாது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் வன விலங்கு வாரம் கொண்டாடப்படுவது, வன விலங்குகளை பாதுகாக்க வேண்டியதின் அவசியத்தை மக்கள் உணரும்படிச் செய்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். ஜனாதிபதி ஆட்சிக்குப் பிறகு சிங்கவால் குரங்குகளுக்காக சரணாலயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதுடன், சாத்தனூர் அணையில் முதலைப் பண்ணை ஒன்றையும் அமைக்க இருக்கிறோம். நாம் இன்னமும் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் வன விலங்குப் பாதுகாப்பின் அவசியத்தை மாநில முழுவதும் விளக்கிப் பிரச்சாரம் செய்ய உறுதி கொள்வோமாக.

—பி. கே. தவே,

ஆளுநர் ஆலோசகர்

இயற்கை தனது சட்ட திட்டப்படி இயங்குகிறது! அதை மதித்துப் பராமரிக்க வேண்டிய கடமை நமக்குள்ளது. ஈவு இரக்கமின்றி அழிக்கப்பட்டது காரணமாக பல விலங்கு, பறவை இனங்கள் அரிதாகிவிட்டன. இந்த வன விலங்குகளை அழிப்பதற்கு கூறப்படும் தார்மீக, விஞ்ஞான, பொருளாதார காரணங்கள் சரியானவை அல்ல.

வனத்துறையினர் இந்த ஆண்டு வன விலங்கு வாரவிழாவை சிறப்பாகக் கொண்டாடுவது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். வன விலங்குகளைப் பாதுகாக்க நாம் மீண்டும் உறுதி கொள்வோமாக.

—வி. கார்த்திகேயன்,

தலைமைச் செயலாளர்,

தமிழ்நாடு அரசு.



# இன்றைய தமிழ்நாடு

—K. R. நாயர்,
முன்னாள் தலைமைச் செய்தியாளர்,
பி.டி.ஐ., சென்னை.

தனது முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள பிரச்சினைகளைக் கொண்டுள்ள ஒரு நாட்டுக்கு, உள்நாட்டுக் கலகம் என்னும் அபாயத்தைச் சந்திக்க நேரும் போது அதைச் சமாளிக்க அந்நாட்டிற்கு ஒரே ஒரு வழிதான் உள்ளது. அதாவது, சட்டபூர்வமாக ஏற்படுத்தப்பட்டுள்ள அந்நாட்டின் அரசுக்குத் தனது வல்லமை முழுவதையும் பயன்படுத்தி உள்நாட்டுக் கலகத்தை அடக்குவதைத் தவிர வேறு வழி இல்லை.

ஓராண்டுக் காலத்திற்கு முன்பு நாட்டில் நிலவிய நிலைமை மிகவும் அபாயகரமானதாக இருந்தது. அரசிலா்நிலை, அழிவு ஆகியவற்றின் பாதையில் நாடு செல்லுவதை, எந்த அரசும் பார்த்துக் கொண்டு, சோம்பலுடன் உட்கார்ந்து கொண்டிருக்காது! இந்நிலை ஏற்படுவதற்குக் கருவியாக இருந்தவர்கள், நமது மக்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்ல நமது அரசியல் அமைப்பு அளித்துள்ள சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி ஒரு குழப்பமான நிலையை நாட்டில் ஏற்படுத்தினர். அந்நிலையில்தான் தங்களுடைய உச்ச வலதுசாரி பிற்போக்குக் கொள்கைகள் நிலைத்து நிற்கவும், தழைத்தோங்கவும் முடியும் என்று எண்ணினர். பிற்போக்குக் கொள்கையுடையவர்களால் விடுக்கப்பட்ட சவாலுக்கு, நெருக்கடி நிலை அறிவிப்பே தர்க்க ரீதியான பதிலாக அமைந்தது.

நெருக்கடி நிலை திடீரென்று வந்துவிடவில்லை. அது, தக்க நேரத்தில் நாட்டை முழு அழிவிலிருந்து தடுத்தது.

தமிழ்நாட்டில் நிலவிய நிலைமையோ, இருமடங்கு அபாயகரமானது. நாட்டின் வேறு சில இடங்களில் தங்களது தேர்தலில் தோல்வியுற்றதன் மூலம் குழப்பத்திற்கு உள்ளான சில அரசியல் கட்சிகள், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்து கொண்டிருந்தபோது, தமிழ்நாடு அரசு தனது பரிவு எங்கே நிலைத்துள்ளது என்பதை ஒளிவுமறைவின்றி காட்டிக் கொண்டிருந்தது. தி.மு.க. அமைச்சர்களும், தி. மு. கழகத்தின் முக்கிய செயலாளர்களும், நெருக்கடி நிலையைப் பற்றியும், பிரதமரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் பற்றியும் கீழ்த்தரமாக அடிக்கடி பேசி வந்தனர். மத்திய அரசு தலையிட்டு, இக்குறும்புத் தனத்தை நிறுத்தியிருக்க முடியும். ஆனால், மத்திய அரசு, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு எதிராகச் செயல்பட விரும்பாமல், தி. மு. க. அரசைத் தொடர்ந்து ஆட்சியில் இருக்க அனுமதித்தது. இதனால், நெருக்கடி நிலை, 20 அம்சத் திட்டம் ஆகியவற்றின் பயன்களை அனுபவிப்பதற்கு முன்பாக 7 மாத காலம், ஆளத் தகுதியற்றவர்களின் ஆட்சியில் தமிழக மக்கள் அடங்கிக் கிடக்க நேர்ந்தது.

இக்கட்டுரையின் ஆசிரியரால் பேட்டி காணப்பட்ட சென்னை நகரத்தின் மக்களும், சென்னையைச் சுற்றியுள்ள கிராமப்புற மக்களும் நெருக்கடி நிலையால் ஏற்பட்ட நன்மைகளில், நெருக்கடி நிலை ஏற்பட்டபின் நிலவி வரும் முழு அமைதியே தலையாயது என்று புகழ்ந்து கூறியுள்ளனர். நெருக்கடி நிலை அறிவிக்கப்படுவதற்கு முன்பு, ஆளுங்கட்சியினரின் பாதுகாப்புப் பெற்றிருந்த ரவுடிகள் சுதந்திரமாக நடமாடினர். தி. மு. கழகத்தின் தலைவர்கள், தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப அலுவலர்களுக்கு-காவலர் உட்பட-ஆணையிட்டு வந்தனர். அவர்களுடைய அட்டூழியம் தற்பொழுது அறவே ஒழிந்துவிட்டது. குழப்பம் விளைவிக்க வேண்டும் என்ற நோக்குடன், மக்கள் உணர்ச்சிகளைக் கிளறி விடும் சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்ளும் பொதுக்கூட்டங்கள், கெட்ட கனவைப்போல் மறைந்துவிட்டன.

இந்தக் கட்டுரையின் ஆசிரியர் கிராமப்புறத்தில் சந்தித்த ஒரு விறகுக் கடை வியாபாரியும், ஒரு விவசாயியும் தவறானவைகளையே செய்து கொண்டிருந்தவர்களின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தவும், தி. மு. க. ஆட்சியில் தழைத்தோங்கிய ரவுடித்தனத்தை அறவே ஒழிக்கவும் பிறப்பிக்கப்பட்ட மிசா சட்டத்தை வரவேற்றனர்.

### விலைவாசி

ஏறுமுகமாகவிருந்த இன்றியமையாப் பொருள்களின் விலைவாசி இறங்குமுகமாக மாறியதும், அவ்விலைவாசி நியாயமான நிலையில் நிலவியதும், நெருக்கடி நிலையினால் ஏற்பட்ட இரண்டாவது மற்றும் சம முக்கியத்துவம் வாய்ந்த, நன்மையாகும். அரசாங்கப் புள்ளிவிவரங்கள் இதைத் தெளிவுபடுத்துகின்றன. அரிசி கொள்முதல் 8.5 இலட்சம் டன்கள் அளவை எட்டியது; விலைவாசி, 30 முதல் 40 சத அளவுக்குக் குறைந்தது. தாவர எண்ணெய் மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றின் விலையும், அவை கிடைப்பதும் நல்ல கட்டுப்பாட்டில் உள்ளது. உணவு தானியங்களில் பற்றுக்குறையே இல்லை. வியாபாரிகள் தாங்களே மனமுவந்து விலைவாசியைக் குறைத்துள்ளனர்.

### புதிய ஒழுக்கம்

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் நெருக்கடி நிலை சிறந்த விளைவினை ஏற்படுத்தியுள்ளது. தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகியுள்ளது. தொழிலாளர்-நிருவாகத்தினருக் கிடையே இருக்க வேண்டிய உறவை முன்பு அச்சுறுத்தி வந்த வேலைநிறுத்தங்களும், கதவடைப்புகளும், 'கெரோ'க்களும், மிரட்டல்களும் தற்பொழுது இல்லை. 'எப். ஐ. சி. ஐ.'யின் தலைவரான திரு எம்.வி. அருணாசலத்தின் கருத்துப்படி, நெருக்கடி நிலை நல்ல நம்பிக்கையை உருவாக்கியுள்ளதுடன் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரத்தன்மை, முன்னேற்றப் பாதையில் திட்டமிடவும், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதி ஒதுக்கிடவும் உதவியுள்ளது. அவருடைய கருத்துப்படி, பணவீக்கத்துக்கு எதிராக வெற்றிகரமாகப் போராடியதே, நெருக்கடி நிலையால் ஏற்பட்ட மிக முக்கியமான பொருளாதார இலாபமாகும். நெருக்கடி நிலை மட்டும் இல்லாதிருக்குமானால், வளர்ச்சி விகிதத்தில் அபாயகரமான வீழ்ச்சி ஏற்பட்டிருக்கும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள இந்திய அரசின் வலியுறுத்தி நடைமுறைப் படுத்தும் ஏஜன்சிகள் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி, பல்வேறு பொருளாதாரக் குற்றங்களைக் கண்டு பிடித்துள்ளன. வருமான

வரித் துறையின் செயல் திட்டங்களில் சிறப்பான ஒன்று, வருமானம் பற்றிய சுய அறிவிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் அறிவிக்கப்படாத வருமானம் மற்றும் செல்வம் பற்றிய 12,307 அறிவிப்புகள் வெளிவந்தன. இவ்வாறு தெரிவிக்கப்பட்ட வருமானத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 163 கோடியாகும். அதிலிருந்து கிடைத்த வருமானவரி ரூபாய் 19 கோடியாகும். இவ்வகையில் இந்த ஆண்டில் கூடுதல் வரியாக ஏறத்தாழ 50 கோடி ரூபாய் கிடைக்கும்.

கள்ள மார்க்கெட்காரர்கள், பதுக்கலில் ஈடுபட்டுள்ளவர்கள், சமுதாயத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் ஆகியவர்களிடம் வருமானவரி வேட்டையைத் தொடர்ந்து நடத்தி அவர்களைக் கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந்ததின் காரணமாகவே, நாடெங்கிலும் வருமானம் பற்றிய சுய அறிவிப்புகள் நிகழ்ந்தது போலவே, தமிழ்நாட்டிலும் நடைபெற்றுள்ளன என்று வருமானவரித் துறையைச் சார்ந்த ஒரு அலுவலர் இக்கட்டுரை ஆசிரியரிடம் கூறியுள்ளார். சுய அறிவிப்புத் திட்டத்தின்கீழ் தங்களுடைய உண்மையான வருமானம், மற்றும் செல்வம் பற்றித் தெரிவிக்க முன்வராதவர்களைப் பற்றிய உளவுகளைச் சேகரித்துக் கொண்டு, வருமானவரி வேட்டையாடுவதில் வருமானவரித் துறை கவனம் செலுத்தி வருகிறது. ஆடம்பர பங்களாக்களின் சொந்தக்காரர்கள், அப் பங்களாக்களைக் கட்டுவதற்குச் செலவிட்ட தொகையை முழுமையாகத் தெரிவிக்கவில்லையெனில், அந்த ஆடம்பர பங்களாக்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டன என்றும் அவ்வலுவலர் கூறினர். சுய அறிவிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்ட காலத்தில், இந்த ஆய்வு நிறுத்தி வைக்கப்பட்டது.

வருமான வரித்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் காரணமாக, புதிதாக வருமான வரிச் செலுத்துபவர்கள் தோன்றியுள்ளார்கள் என்றும், வருமான வரிச் சட்டத்தை மீறுவதால் பற்பல தீமைகள் ஏற்படக்கூடும் என்ற பயத்தின் காரணமாகப் பலர், தங்களுடைய வருமானம் பற்றிய விவரங்களைத் தாமாகவே தெரிவிக்க முன்வந்துள்ளனர் என்றும் அவ்வலுவலர் மேலும் கூறினர்.

வருமானவரி விதிப்பு பற்றிய அதிகாரம் பெற்றவர்களுடன்கூட சுங்கம், மத்தியத் தீர்வை, வலியுறுத்தி நடைமுறைப்படுத்தும் இயக்ககம், மத்தியப் புலனாய்வுத் துறை மற்றும் மாநில இலஞ்ச ஒழிப்புப் பிரிவு ஆகியவைகளும் சுறுசுறுப்பாக இயங்கின. அவர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளினால் ஏற்பட்ட முக்கிய விளைவு கள்ளத்தனமாகவும் வஞ்சகமாகவும் கிடைத்த வருவாய்க்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட துறைகளின் மூலமாகப் பெருமளவுக்கு அந்நிய நாட்டுப் பணம் நம் நாட்டிற்குக் கிடைத்தாகும்.

அயல்நாட்டுப் பொருள்களைக் கடத்தி வந்தவர்களுக்கு எதிராக சுங்கத்துறையினர் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, அத்தகைய பொருள்கள், விற்பனைக் கூடங்களில் கிடைப்பது குறைந்து விட்டன. நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகு 11 மாத காலத்தில் 4,985 கடைகளும், ஸ்டால்களும், கிடங்குகளும், வீடுகளும் சோதனையிடப்பட்டு ரூபாய் 8.61 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டன. நெருக்கடி நிலை அறிவிக்கப்படுவதற்கு முன்பாக அதே காலத்தில் 1,827 சோதனைகள் செய்யப்பட்டு, ரூபாய் 12.47 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று சுங்கத்துறை அலுவலர் ஒருவர் சென்னையில் குறிப்பிட்டுள்ளார். நெருக்கடி நிலைமை அறிவிக்கப்படுவதற்கு முன்பு 127 கப்பல்களே சோதனையிடப்பட்டிருக்க, நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பிறகு 294 கப்பல்கள் சோதனையிடப்பட்டுள்ளன. அக்கப்பல்களிலிருந்து கைப்பற்றப் பெற்ற பொருள்களின் மதிப்பு ரூபாய் 8.45 இலட்சத்திலிருந்து ரூபாய் 7.95 இலட்சமாகக் குறைந்துள்ளது. கள்ளக் கடத்தலை ஒடுக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தாலும், கைப்பற்றப் பெற்ற பொருள்களின் மதிப்பு குறைந்துள்ளன என்று அவர் சுட்டிக் காட்டினர். இது, கடத்தல் பொருள்கள் நம் நாட்டிற்கு வருவது பெருமளவில் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகின்றது.

அந்நியச் செலாவணியைத் தவருகப் பயன்படுத்துவோர் (சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்) சட்டத்தின்கீழ், நோட்டீஸ் அனுப்புவதற்காக 24 பேர்களின் சொத்து மதிப்பு விவரங்கள், இதுபற்றி முடிவெடுக்கும் அதிகாரம் பெற்றவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தென் ரயில்வேயைப் பொறுத்தவரையில், நீண்ட தூரம் செல்லும் ரயில்களின் காலத்தவருமையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், நெருக்கடி நிலைமையால் ஏற்பட்டுள்ள நேரடிப் பயனுகும். 1974-75 ஆம் ஆண்டில் 84.1 சதமாக இருந்த காலந்தவருமை, 1975-76-ஆம் ஆண்டில் 91.4 சதமாக உயர்ந்துள்ளது. டிக்கட் இல்லாமல் பயணம் செய்வோர்களைத் தடுக்கவும், தண்டிக்கவும் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

முன்பே குறிப்பிட்டுள்ளது போல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்த பிறகுதான் நெருக்கடி நிலையின் பயன்கள் முழு அளவில் உணரப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கல்வி நிறுவனங்களில் அடிக்கடி அமைதியின்மையை ஏற்படுத்தி வந்த மாணவர் ஒழுங்கீனம், நெருக்கடி நிலைமை ஏற்பட்டவுடன் மறைய ஆரம்பித்தன. வேலைநிறுத்தங்கள், 'ரேக்கிங் (Ragging) போன்ற கொடிய விளையாட்டுக்கள் ஆகியவைகளை எல்லாம் மறந்து, மாணவர்கள் ஒழுக்கத்துடன் நடந்து கொள்கின்றனர்.

20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தைச் செயல்படுத்துவது காலங்கடந்த நிலையிலேயே தமிழ்நாட்டில் துவக்கப்பட்டது. ஏனென்றல், தி. மு. க. அரசு, ஆட்சிப் பொறுப்பில் இருந்து அகற்றப்படும் வரை 20 அம்சத் திட்டத்தில் புதிதாக ஒன்றும் இல்லை என்றும், உண்மையில் அவர்கள் செய்து முடித்த திட்டமே 20 அம்சத் திட்டம் என்றும் சாதித்து வந்தனர். இந்தச் சூழ்நிலையில், மாநில நிருவாக அமைப்பில் நிலவிய நிலைமையை-பிப்ரவரி 1-ஆம் நாள் பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது ஆளுநர் ஆலோசகர்கள் கண்ட நிலைமையை-ஆராய்வது அவசியமாகும்.

தி. மு. க. ஆட்சி, நிருவாகத்தை முறையற்றதாகவும், ஒழுங்கற்றதாகவும் ஆக்கியிருந்ததை ஆலோசகர்கள் கண்டனர். இலஞ்சம் கீழ்மட்டத்திலிருந்தே-அதாவது கிராம அதிகாரிகள், முறைகாவல் பணிக்காகச் செல்லும் காவலர் ஆகியோர் நிலையிலிருந்தே காணப்பட்டது. முடிவு எடுக்கும் உயர்மட்ட நிலையில், அதிகாரிகள் கீழ்ப்படிவோராக ஆகினர். உயர் பதவியில் அமர்த்தப்பட்டிருந்த அலுவலர்கள்கூட சட்டப்புறம்பான செயல்களுக்கு வழிகோலும் இலஞ்சம், உறவினர்களுக்குக் காட்டும் தனி ஆதரவு, சாதக

மாக நடத்தல் போன்ற செயல்களில் இணைந்து காணப்பட்டனர். சிபாரிசு செய்யக் கூடாதென்றும் ஆனால் உண்மை நிலவரத்தை மட்டுமே தெரிவிக்க வேண்டும் என்றும் அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அலுவலர்கள், மாற்று யோசனைகளைத் தெரிவித்து, அவற்றில் எது உகந்தது என்பதைத்தான் கேட்கலாம். இது கேலிக்குரிய நிலையாகும். இதனால் எப்பொழுதும் திறமையில் சிறந்து விளங்கிய அலுவலர்களும், இந்திய அரசு நிலையில் தலைசிறந்து விளங்கிய அலுவலர்களும்கூட தங்களுடைய ஆர்வத்தை இழந்து மந்தமாயினர்.

தி. மு. க. அரசு, மாநில நிதி ஆதாரங்களை மோசமான நிலைக்குத் தள்ளியது. ஆதாரங்களைப் பெருக்க, திட்டக்குழுவிற்கு அளித்த உறுதிமொழிகள் காப்பாற்றப்படவில்லை. அது, நிதி நிறுவனங்களில் இருந்து உதவி பெறலாம் என்ற நம்பிக்கையுடன், குறைந்தபட்சப் பங்குத் தொகையுடன், கார்ப்பரேஷன் அல்லது வாரியத்தைத் தோற்றுவித்தது. அத்தகையவை 48 இருந்தன. ஆனால் அவைகள் தங்களுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதில், பெயருக்கேற்பச் செயல்படவில்லை.

எதுவும், நெருக்கடி நிலை உணர்வுடன் செய்யப்படவில்லை. பொதுமக்களிடையே புகழ்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் தி. மு. க. ஆட்சி, பல திட்டங்களைத் துவக்கியது. ஆனால் அவைகளுக்குரிய மூலதன வசதிகளையோ அல்லது அவைகளை நிறைவேற்றுவதற்குரிய நிறுவனம், விருப்பம், உறுதி ஆகியவைகளையோ பெற்றிருக்கவில்லை.

மதுவிலக்கை மீண்டும் கொண்டு வரவும், குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவும் தி. மு. க. ஆட்சி எடுத்த முடிவு வெறும் கொள்கை முழக்கமே என்பதையும் ஆலோசகர்கள் அறிந்தனர். மதுவிலக்கு மீண்டும் புகுத்தப்பட்டபொழுது குடிப்பதற்குத் தகுதியற்ற தன்மையுடைய ஸ்பிரிட் உற்பத்தி செய்வதற்கான உரிமம் (Denatured Spirit) இலவசமாக வழங்கப்பட்டது. அந்த ஸ்பிரிட் உண்மையிலேயே குடிப்பதற்குத் தகுதியுடையதாகும். அது கள்ளச்சாராய வணிகர்களுக்கு உதவியது. தீர்வை வரியும் ஏமாற்றப்பட்டது. குதிரைப் பந்தய ஒழிப்பிற்குப் பின்னால் உள்நோக்கம் உள்ளது. ஆகவே, இவ்விரு வகையிலும் அரசு மேற்கொண்ட முடிவு, வெளித்தோற்றத்திற்கு முன்னேற்றமானவையாகத் தோன்றினாலும், கோட்பாடில்லாததாகும்.

அரசின் ஆதாரங்களிலிருந்து 20 அம்சத் திட்டத்தைப் பொறுத்த வரையில் வெளி வேஷமே போடப்பட்டு வந்துள்ளது. இத்திட்டத்தில் சில அம்சங்கள், இத்திட்டம் அறிவிக்கப்பட்ட பிறகுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், மாநில அரசு வேண்டுமென்றே அவற்றைப் பற்றிய குறிப்பைத் தவிர்த்ததுடன் அவைகளைப் பிரபலப்படுத்துவதில் மத்திய அரசின் தலைமையை ஏற்க மறுத்தது.

கோயம்புத்தூர் மாநாட்டில் கட்சி நிறைவேற்றிய தீர்மானங்கள், அதனுடைய பிரிந்து போகும் மனப்பான்மையை வற்புறுத்திய பிறகே, மத்திய அரசு இதுபற்றி முடிவு எடுக்க வேண்டி வந்தது.

நிருவாகத்தை மேம்படுத்துவதில் தற்பொழுது ஆலோசகர்கள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். 20-அம்சத் திட்டத்தை முழு மூச்சுடன் நிறைவேற்ற நிருவாக இயந்திரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## குழந்தைகளுக்கு வேண்டுகோள்

பெரும்பாலான மற்ற இந்தியர்களைப் போலவே நானும் முதலில் பறவைகளை அவ்வளவாக லட்சியம் செய்யவில்லை. பின்னர் திரு. ஸலீம் அலியின் ரசமான புத்தகத்தை டேராடூன் சிறையிலிருந்து என் தந்தையார் அனுப்பிய போதுதான், முற்றிலும் புதிய உலகம் ஒன்று இருப்பது என் கண்ணுக்குப் புலனாயிற்று. எவ்வளவு அரிய விஷயங்களை அறியத் தவறி விட்டோம் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன்.

பயனுள்ள காரியங்களுள் ஒன்று பறவை ஆராய்ச்சி. அதில் நம் உள்ளம் லயித்து விடுகிறது. பல்வேறு பட்சி வகைகளையும், அவை கூடுகட்டி வாழும் முறைகளையும், அவற்றின் குரல் வகைகளையும் முதலில் தெரிந்து கொள்கிறோம். பிறகு அவை எல்லாம் சின்னஞ் சிறு தனி நபர்கள் என்பதையும், ஒவ்வொரு பட்சிக்கும் சொந்தமான குண விசேஷங்கள் உண்டு என்பதையும் படிப்படியாக உணர்கிறோம்.

ஆரம்ப கட்டத்தில் பறவைகளை முன் மாதிரியாகக் கொண்டே மனிதர்கள் பறப்பதற்கு முயற்சிகள் செய்தனர். இவ்விஷயத்தில் அவற்றுக்கு நவீன நாகரிகம் கடன்பட்டிருக்கிறது.

இன்னமும், நமது நகரங்களில் கூட, பறவைகள் காணப்படுகின்றன. அவற்றுடன் கூடி வாழ நமக்குக் கொடுத்து வைத்திருக்கிறது. மற்ற நாடுகளில் ஏதாவது பறவையைப் பார்க்க வேண்டுமானால் கிராமங்களுக்குத்தான் போகவேண்டும். பறவைகளை இனங் கண்டு அவற்றுடன் நட்புக் கொள்ள நம் குழந்தைகள் தெரிந்து கொள்ளவேண்டும்.

—இந்திரா காந்தி

இவ்வகையில் முன்பே நடைபெற்றுள்ள பணிகளையும், இனி நடைபெறவிருக்கும் பணிகளையும் பற்றி அரசு ஆதாரங்கள் அளித்துள்ள விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் 3,600 கிராமங்களில் வறட்சி நிலவுவதால், நீர்ப்பாசனத் திட்டங்களை விரைவாக நிறைவேற்ற வேண்டியது புதிய வேகம் பெற்றுள்ளது. இந்த ஆண்டில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்குரிய மொத்த ஒதுக்கீடு ரூபாய் 350 இலட்சத்திலிருந்து ரூபாய் 500 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. 5 நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும். அவைகளில் 3, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும்-மதுரை மாவட்டத்தில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டத்தில் இரண்டுமாக-வறட்சியால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் தருமபுரி மாவட்டத்தில் 2-மாக நிறைவேற்றப்படும். இத்திட்டங்கள் 20,000 ஏக்கர்களுக்குப் பாசனமளிக்கும். இத்திட்டங்களுக்கு ரூபாய் 950 இலட்சம் செலவாகும்.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் விரைவாக நடந்து வருகிறது. கடந்த பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் 500 ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப் பெற்றன. இத் திட்டத்தின்கீழ் ஜுலை வரை மேலும் 2,400 குழாய்க் கிணறுகள் தோண்டப் பெற்றன. செப்டம்பர் முடிவதற்குள் மேலும் 3,300 குழாய்க் கிணறுகள் தோண்டப் பெறும். இத் திட்டத்திற்காக முன்பே ரூபாய் 290 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. செப்டம்பர் மாதத்திற்குள் இலங்கையில் செலவிடுவதற்காக மேலும் ரூபாய் 300 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டம் சோமங்கலத்தில் ஊரகச் சீரமைப்புத் திட்டப் பணிகள், முன்னோடி அடிப்படையில், முன்னேறி வருகின்றன.

கடந்த பிப்ரவரிக்கும் ஏப்ரலுக்கும் இடைப்பட்ட காலத்தில் 1092 ஏக்கர் நிலம் உபரியாக அறிவிக்கப்பட்டது. 3,757 ஏக்கர் நிலத்தை உடைமையாக அரசு ஏற்றுக் கொண்டது; 4,293 ஏக்கர் நிலம், ஒப்படை செய்யப்பட்டது. இதனால் மொத்தம் 6,149 பேர்கள் பயனடைந்துள்ளனர். 1976 ஏப்ரல் இறுதியில் 19,304 ஏக்கர் நிலம் நிலப்பட்டா வழங்குவதற்காகக் கிடைத்தது. நிலப்பட்டா வழங்கும் பணியை விரைவு படுத்துவதற்காக, வருவாய் வாரியம் ஒரு முனைப்பு இயக்கத்தைத் துவக்கியுள்ளது.

பிப்ரவரி முதல் மே மாதம் வரையான காலத்தில் 32,763 வீட்டுமனைகள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. இக்காலத்திற்கு முந்திய 3 மாதத்தில் 11,840 வீட்டுமனைகள் மட்டுமே ஒப்படை செய்யப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடந்த ஆண்டில், அரிசன மக்களுக்கு வீட்டுமனை வாங்குவதற்காக ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, இந்த ஆண்டிற்கு (1976-77) ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 2,400 பேர்கள் கொத்தடிமையிலிருந்து விடுபட்டுள்ளனர். அவர்களில் 579 குடும்பங்களுக்கு நிலமும், உழவு மாடு, கலப்பைகள் முதலியன வாங்க நிதி உதவியும் அளிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு நிறுவனங்களால் அளிக்கப்பட்டு வந்த கிராமப்புறக் கடன்வசதிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன. நகைக்கடன் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 350 இலட்சத்திலிருந்து ரூபாய் 1500 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

சிறுவிவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகளல்லாதோர் ஆகியோர்களிடமிருந்து 1977 ஜனவரி வரை கடன் வசூலிப்பதை நிறுத்தி வைப்பதற்காக கொண்டு வரப்பட்ட தடைச் சட்டம் அவர்களின் பெரும் துயரைத் தீர்த்துள்ளது.

அரிசன, பிற்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகளில் தங்கி, நுகர்பொருள்துறை மூலம் குறைந்த விலையில் உணவு தானியங்களையும், இதர நுகர்பொருள்களையும் பெறும் திட்டத்தினால் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை, 36,523-லிருந்து 37,522-க்கு உயர்ந்துள்ளது. கல்லூரிகளுடன் இணைந்துள்ள 246 விடுதிகளில், 204 விடுதிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களால் பயனடைகின்றன. மீதியுள்ள விடுதிகளும் விரைவில் இவ்வகையில் பயனடையும்.

பாடப்புத்தகங்கள் மற்றும் எழுதுபொருள்களை மலிவு விலையில் வழங்கும் திட்டத்தின் முக்கியத்துவத்தை மனத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு பாட நூல் நிறுவனம், 1 முதல் 11 வரையான வகுப்புகளுக்குரிய பாடப் புத்தகங்களை வெளியிடுகிறது. அடக்கவிலையைப் போல் 3 மடங்கு விலையில் தனி வெளியீட்டாளர்களால் விற்கப்படும் போது, தமிழ்நாடு பாட நூல் நிறுவனம் பாட நூல்களை, அடக்கவிலையைப் போல் 1.5 மடங்கு விலையில் விற்கின்றன. குடியரசுத் தலைவர் ஆட்சிக்குப் பிறகே குறைந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்ததிலிருந்து பாராட்டிற்குரியபணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவைகளில் முக்கியமானவை:

(1) பயிரிடும் சாகுபடியாளர்களை பாதுகாப்பதற்காக ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அச்சட்டம் சொந்த சாகுபடி செய்வதற்கென்று கூறி, பயிரிடும் சாகுபடியாளரிடமிருந்து நிலத்தைத் திரும்பப் பெறுவதில் நிலச்சுவான்தாரருக்குள்ள உரிமையை ரத்து செய்து விட்டது.

(2) கிராமப்புறக் கைவினைஞர்களுக்கும் குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குவதற்குரிய சட்டத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

(3) நில டிரிபியூனல்களில் முடிவு பெறாமல் உள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை விரைவில் விசாரித்து முடிவு எடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீதிமன்றங்களின் தடை ஆணைகளால் 15,000 ஏக்கர் நிலம் பற்றி முடிவு செய்ய முடியாத நிலையிலுள்ளது.

நெருக்கடி நிலையின் காரணமாக அரசு ஊழியர்களிடம் நல்ல உணர்வு எழுந்துள்ளது. அவர்கள் உண்மையிலேயே பொதுமக்களின் ஊழியர்களே என்பதையும், அவர்களுடைய முழுத்திறமையையும் பயன்படுத்தி பொதுமக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதையும் நெருக்கடி நிலை உணரச் செய்துள்ளது. அலுவலகத்திற்குத் தவறாது வரும் ஊழியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தகுந்த வகையில் முன்னேறியுள்ளது. எல்லா அரசு அலுவலகங்களிலும், காலந்தவறாமையே ஊழியர்களின் கண்ணோட்டமாக உள்ளது.

இருபது அம்சத் திட்டம், மனிதாபிமான நடவடிக்கையின் எல்லா அங்கங்களையும் தொட்டுள்ளது. எனவே தமிழக மக்கள் அனைவராலும் வறுமையை வென்றிட உதவும் ஒரு சக்தி வாய்ந்த கருவியாக இருபது அம்சத் திட்டம் வரவேற்கப்பட்டுள்ளது.

**[நன்றி : 'யோஜனா' 1-9-1976 தேதிய இதழ்].**



# களக்காடு வனவிலங்குச் சரணாலயம்


**பி. கந்தசாமி, ஐ.ஏ.எஸ்.,**
செயலாளர்,
வனத்துறை மற்றும்
மீன்வளத்துறை,
தமிழ்நாடு அரசு.


**1972**-ஆம் ஆண்டு வனவிலங்குப் (பாதுகாப்பு) சட்டம் தமிழ்நாட்டில் 1974 ஜனவரியில் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தின் 18-வது பிரிவின்கீழ் அறிவிக்கப்பட்ட முதல் சரணாலயம் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள களக்காடு வனவிலங்கு சரணாலயமாகும். 1976 மார்ச் 6-ஆம் தேதி வனங்கள் மற்றும் மீன் வளத்துறை அரசு ஆணை எம். எஸ். எண். 183-ன் கீழ் இது அரசிதழ் மூலம் அறிவிக்கப்பட்டது. களக்காடு 'ரிசர்வ்' காடுகள் முழுவதும் சரணாலயம் ஆகியது. சிம்மவால்களைக் கொண்ட கருங்குரங்குகளைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கம்.

சாலைகளும், கிராமங்களும் இல்லாமல் மனித சஞ்சாரமும் இல்லாமல் வன விலங்குச் செல்வங்கள் நிறைந்த காடுகள் இந்தியாவில் மிகச் சிலவே எஞ்சியுள்ளன. இந்த மாதிரி அரிய இடங்களில் களக்காடு 'ரிசர்வ்' காடுகளும் அவற்றின் பக்கத்திலுள்ள வீரப்புலி 'ரிசர்வ்' காடுகளும் அடங்கும். சிங்கம்பட்டி காடு ஏற்கெனவே புலிகளுக்கான வனவிலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு உச்சிச் சரிவில் களக்காடு வனம் அமைந்துள்ளது. இந்த இடத்தில்தான் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் சந்திக்கின்றன. அடிமலைப் பகுதி பாறுங் கற்கள் நிறைந்தது. கூர்மையான தாள்களைக்கொண்ட புற்கள், முட் புதர்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் கரடி, சிறுத்தை, கடமான்கள், மலைப் பாம்பு முதலியவை வசிக்கின்றன. பெரிய பாறைகளுக்கு மத்தியில் வற்றாத நீரோடைகள் ஓடிக்

கொண்டிருக்கின்றன. நீர் வீழ்ச்சிகளிலிருந்து தண்ணீர் பாய்கின்றது. நீரோடைகளின் இரு புறமும் மாமரங்கள், நாவல் மரங்கள் அடர்ந்து காணப்படுகின்றன.

ஒருவர் அறுநூறு மீட்டர் உயரத்திற்கு மேலே சென்று பார்த்தால் எல்லாம் மாறிவிட்டதைப் போன்று காட்சி அளிக்கும். பள்ளத்தாக்கில் ஓடிக் கொண்டிருக்கும்நீரோடைகளைச் சுற்றிமட்டும் பச்சைப் பசேல் என்ற வனங்கள் காணப்படுவதில்லை. குன்றுப் பகுதிகள் எங்கும் வெட்பப் பிரதேச மரஞ் செடிகள் நிறைந்து உள்ளன. நாம் மேலே இருண்ட சோலைக்குச் செல்லச் செல்ல மிக அடர்த்தியான காடுகள் பரவிக் கிடப்பதைக் காண முடிகிறது. 800 மீட்டர் உயரத்தில், அழகான நீரோடை, பச்சைப் பசேலென்ற சோலைகள் அருகே செங்கல்தேரி ஓர் ஓய்வு இல்லமாகத் திகழ்கிறது.

தற்போதுள்ள எல்லாச் சோலை வனங்களும், நெருங்க முடியாத காடுகளும் வனாந்திரப் பிரதேசத்தின் கீழ் வரலாம். இந்தப் பகுதிகள் தொடர்ச்சியாக இல்லை. ஆங்காங்கே தனித்த பகுதிகளாகச் சிதறிக் கிடக்கின்றன. இவைகளை அப்படியே பாதுகாக்க வேண்டும். பூஞ்சோலைகளாகக் காட்சி தரும் இந்தப் பகுதி அதன் தொன்மைக்கு ஒரு சான்று என்பதில் சந்தேகமில்லை. நீண்ட நெடுங் காலத்துக்கு முன்னரே பல வகைச் செடிகள் மற்றும் விலங்குகளின் பரிணாம வளர்ச்சிப் பகுதியாக இது காட்சி தருகிறது. தொடர்பே இல்லாத இனங்களின் தோற்ற ஒற்றுமை மற்றும் பல்வேறு உடற்கூறு கொண்ட இனங்களுடன் ஒட்டுறவு கொண்டது போன்ற உயிரின வகைகள் இங்குக் காணப்படுகின்றன. சிம்மவால் கருங்குரங்கு நீலகிரிக் குரங்கு ஆகியவை நிறத்தைப் பொறுத்த வரை ஒரு வகையில் மலபார் ராட்சத அணில்களின் தோற்ற ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன.



சிம்மவால் கருங்குரங்கு மளமளப்பான முதுகும், வெள்ளை நிறப் பிடரியும் கொண்டது. தென்னிந்தியாவில் வெப்பப் பிரதேசங்களிலுள்ள ஈரம் நிறைந்த பச்சைப் பசேல் காடுகளில் பண்டைக்காலம் இது சாதாரணமாகக் காணப்பட்டது. ஆனால் அண்மைக்காலத்தில் இது மிகவும் அரிதாகிப் போய்விட்டது. இதற்குக் காரணம் இதன் இறைச்சி தாது புஷ்டி மருந்துகள் தயாரிப்பதற்குச் சிறந்த ஒன்று என்ற கருத்தில் இது வேட்டையாடப்பட்டது. இதன் கறுப்பு நிற மளமளப்பான மயிருக்கு நல்ல கிராக்கி இருப்பதாலும் இது கொல்லப்பட்டது.

இந்த அரிய விலங்கினத்தைப் பாதுகாக்கும் வகையில் களக்காடு 'ரிசர்வ்' காடுகளில் ஒரு சரணாலயம் அமைப்பதில் மத்திய அரசும் தமிழ்நாடு அரசும் தீவிர அக்கறை எடுத்துக் கொண்டன.

வெப்பப் பிரதேசங்களிலுள்ள ஈரமான பகுதிகளில் எப்போதும் பச்சைப் பசேல் என்றிருக்கும் அடர்ந்த காடுகளில் இந்த சிம்மவால் கருங்குரங்குகள் வாழுகின்றன. இத்தகைய காடுகள் 650 மீட்டர் முதல் 1,100 மீட்டர் வரை உயரமுள்ள பகுதிகளில் காணப்படுகின்றன. இந்தக் காடுகள் தீபகற்ப இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கர்ணாடகத்தின் வடக்கு கனரா முதல் தமிழ்நாட்டின் கன்னியாகுமரி வரை மட்டுமே உள்ளன.

சிம்மவால் கருங்குரங்கு இருண்ட நிறமும், வெட்கப்படும் தன்மையும் கொண்டது. எனவே வெளியே அதிகமாக வராது. அப்படியே வந்தாலும் சாதாரணமாகப் பார்த்தால் கண்ணுக்குத் தென்படாது. எனவே இதைப் பார்ப்பதோ அல்லது இதைப் பார்த்ததாகக் கூறப்படுவதோ மிகவும் அரிது.

தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் தயாரிக்கப்படும் பிரபலமான கருங்குரங்கு இரசாயனம் இதன் இறைச்சியிலிருந்து தான் செய்யப்படுகின்றன. இந்த நோக்கத்திற்காக ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான குரங்குகள் ஆதிவாசி மக்களால் கொல்லப்படுகின்றன.

கியோட்டோ பல்கலைக் கழகத்தின் மானிடவியல் ஆய்வுக் கூடத்தைச் சேர்ந்த ஜப்பானிய நிபுணர் திரு. இகுமாரு சுகியாமா 1961-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1963-ஆம் ஆண்டு பிப்ரவரி வரையான காலத்தின் முன்

னேடி ஆய்வு ஒன்றை நடத்தினர். சிம்மவால் கருங்குரங்குகள் 1963-ல் சுமார் 1,600 தான் வாழ்கின்றன என்று அந்த ஆய்வின் மூலம் கணக்கிடப்படுகிறது. எனவே சிம்ம வால் கருங்குரங்கு விலங்கினம் அழிந்து போய்விடக் கூடிய சாத்தியக் கூறு உள்ளது. களக்காடு, பாபநாசம், வீரப்புலி 'ரிசர்வ்' காட்டுப் பகுதிகளில் இத்தகைய குரங்குகளின் எண்ணிக்கை தற்போது சுமார் 400 மட்டுமே. மலைச் சாரல் பகுதியின் சிறப்பான கூறுகளும், காடுகளின் தன்மைகளும் இந்த வகை வன விலங்குகள் வாழ்வதற்கு மிகவும் ஏற்றவைகளாகும். எனவே தற்போது பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதால் இதன் எண்ணிக்கை வேகமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வனப் பகுதியில் வாழும் மற்ற மிருகங்கள் பல வகையானவை. மாமிசத்தைத் தின்று வாழும் புலி, வேங்கை, கருஞ் சிறுத்தை, குள்ள நரி மற்றும் காட்டு நாய்கள் இங்கே வாழ்கின்றன. இலை, தழைகளைத் தின்று வாழும் யானைகள், கடமான்கள், 'சீத்தல்' மான், எலி மான், குரைக்கும் மான், மற்றும் 'நீலகிரி' மான் வகைகளும் வசிக்கின்கின்றன. இவை தவிர மலைப் பாம்பு, ராஜ நாகங்கள், மற்றும் உடும்பு வகைகள் முதலிய ஊர்வனவைகளும் வாழ்கின்றன. வகை வகையான பல்வேறு இனப் பறவைகளும் இங்கே ஏராளமாக வாசம் செய்கின்றன.

எல்லா இன விலங்குகளுக்கும் தேவையான உணவு மற்றும் தண்ணீர் இங்கு பெருமளவு உள்ளது. ஆனல் இந்தப் பகுதிகளில் ஊடுருவி ஆக்கிரமிப்புச் செய்வதும் ஆடுமாடுகளை மேய்ப்பதும் விலங்கினங்கள் பெருக்கத்துக்குத் தடையாகக் காணப்படும் அம்சமாகும்.

சிம்மவால் கருங்குரங்குகள் வழக்கமாக 12 முதல் 20 பிராணிகள் கொண்ட கூட்டமாகத் தான் எங்கும் செல்கின்றன. சில வேளைகளில் ஆண் குரங்குகளையோ அல்லது காதல் ஜோடிகளையோ தனியாகக் காண முடியும். தற்போது களக்காடு ரிசர்வ் காட்டுப் பகுதியில் சிம்மவால் இனத்தைச் சேர்ந்த 100 குரங்குகள் வசிக்கலாம். இது வரை எந்தத் திட்டவட்டமான கணக்கெடுப்பும் நடத்தப்படவில்லை. இங்குள்ள குரங்குகளில் இரண்டு அல்லது மூன்று பிரிவுகள் இருக்கலாம். அவை நிச்சயமாக ஐன்றுக்கொன்று விரோத உணர்வு கொண்டதாக இருக்கும். ஒரு ஆணுக்கு 3 பெண் குரங்குகள் என்ற வகையில் ஆண்-பெண் இனங்களின் விகிதம் காணப்படுகிறது. இனப் பெருக்கம் மற்றும் மொத்த எண்ணிக்கை வளர்ச்சி ஆகியவை பற்றி இனிமேல்தான் ஆய்வு நடத்தப்பட வேண்டும். இந்த விலங்கினங்களின் ஆயுட்காலம் மற்றும் இறப்பு விகிதம் ஆகிய விவரங்கள் தெரியவில்லை.

இந்த விலங்குகள் பயிர்களை அழிப்பதில்லை. இருப்பினும் அவை வேட்டையாடப்படுகின்றன. கேரளாவைச் சேர்ந்த ஆதிவாசி மக்கள் இந்த விலங்குகளை அவற்றின் இறைச்சிக்காக வேட்டையாடுகின்றனர். அண்மைக்காலத்தில் வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் இந்த விலங்கினத்துக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்து வருகிறது. இந்த விலங்குகளை அரசாங்கம் அறிவித்துள்ள நிலத்துக்கு வெளியே அல்லது உள்ளே எங்கு கண்டாலும் வேட்டையாடக் கூடாது. ஏனெனில் இவை வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் முதல் பட்டியலில் காணப்படும் விலங்கினங்களைச் சேர்ந்தவை.

**நிர்வாகத்தின் நோக்கம் :**

1. சரணலயத்தில் காணப்படும் சிம்மவால் குரங்கு இனத்தைச் சேர்ந்த விலங்குகளைப் பாதுகாத்து அவற்றை அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தேயிலைச் சாகுபடி, தோட்டப்பயிர் சாகுபடிகளுக்காகக் காட்டு மரங்களை வெட்டுவது, காடுகளை அழித்துத் திருத்துவது ஆகியவற்றின் மூலம் இத்தகைய வனவிலங்குகளின் இருப்பிடங்களை அழித்தொழிப்பது இனி மேல் தடுக்கப்படும்.

3. விளையாட்டு அல்லது மருந்து அல்லது ஆராய்ச்சி முதலிய எந்த நோக்கத்துக்காக இருந்தாலும் இந்த வகை மிருகங்களை வேட்டையாடுவதைத் தடை செய்து, அவற்றுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

4. இந்தவகை விலங்கினத்தின் வாழ்க்கை வரலாறு, உடற்கூறு, உணவுப் பழக்கங்கள் மற்றும் இனப் பெருக்கத் தன்மைகள் குறித்து ஆய்வு நடத்தப்படும்.

இவ்வாறு அழிந்து போகக் கூடிய அபாயம் உள்ள விலங்கினங்களின் ஒன்று இனிமேல் பாதுகாக்கப்படும். இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மூலம் களக்காடு மலையுச்சிச் சரிவுகளின் உள்ள இந்த அரிய சரணலயத்தின் மூலம் அவ்விலங்குகள் மறைந்துவிடாமல் காப்பாற்றப் படும். இதனல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, தாமிரபரணி ஆறுகளின் பள்ளத்தாக்குகளும் மற்றும் நீர் வடி பரப்பும் காக்கப்படும்.



# அஞ்சலக வங்கியின்
# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆரும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால் உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெறுதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலேயத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்.**

தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,

சென்னே-600 002.



# தமிழ்நாட்டின் வனவிலங்குகளைக் காண வாரீர்!


டி. ஜெய தேவ்,
ஐ. எப். எஸ்.,
வனத்துறைத் தலைமை அலுவலர்,
தமிழ்நாடு.


"அமைதி தவழும் தமிழ்நாட்டுக்கு வருக" என்று சுற்றுலா வளர்ச்சிக்கான சுவரொட்டிகள் மக்களை அழைக்கின்றன. தமிழ் மக்களின் அன்பார்ந்த உணர்வு, தமிழ் நாட்டின் அமைதியான சூழ்நிலை ஆகியவற்றுடன் தமிழ்நாட்டில் சுற்றுலா வருவோருக்கு மிகவும் அமைதி நிறைந்த இடங்களாக, வனப்பு மிகுந்த வன விலங்குகள் வாழும் பகுதிகள் விளங்குகின்றன. இந்தியாவின் ஒவ்வொரு வட்டாரமும் தனக்கே உரிய சிறப்புடன் உள்ளது. தமிழ் நாட்டிலுள்ள வன விலங்கு வாழும் இடங்கள் தமக்கெனத் தனிச் சிறப்புகளுடன் விளங்குகின்றன.

எந்த வகையான சுற்றுலாவையும் அபிவிருத்தி செய்வதற்கு, சுற்றுலாப் பயணிகளை குறிப்பிட்ட இடங்களுக்குச் சுற்றுலா செல்லுமாறு கோரி பெருமளவில் விளம்பரம் செய்யப்படுவதுடன் அப்பகுதிகளும் உள்ளீடான சிறப்புத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். அதாவது அப்பகுதிகள் அழகு கொஞ்சும் இடங்களையும் கலாச்சாரச் சிறப்புள்ளதாகவும், நில நூல் அமைப்புள்ளதாகவும், சுகமான சூழ்நிலை உள்ளதாகவும், செடி கொடிகள், பறவை விலங்கினங்களின் சிறப்புப் பெற்றதாகவும் விளங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடம் சுற்றுலாப் பயணிகளை ஒரு முறை கவர்ந்து விட்டால்—அவர்கள் அந்த இடத்தின் உள்ளீடான சிறப்பை உணர்ந்து விட்டால் அதன் தொடர்ச்சியாக அவ்விடத்திற்குச் சுற்றுலா வருவோர் எண்ணிக்கை பெருமளவில் வளர்ச்சியடையும். அதற்கு அப்பகுதியில் பயணிகளுக்கான வசதிகள் தொடர்ந்து கிடைக்கச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் பல்வேறு வன விலங்குகளையும் கண்டு களிப்பதற்குச் சுற்றுலா வருவோர்க்கு ஓரளவு வசதிகளை தமிழ்நாடு வனத்துறை செய்து கொடுத்துள்ளது. நீர்ப் பறவைகளின் வாழ்க்கையை ஆராயும் சுற்றுலாக்காரர்களுக்கு வேடந்தாங்கலில் நீர்ப் பறவைகள் சரணாலயம் உள்ளது. சென்னை விமான நிலையத்திலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த இடத்தில் வேடந்தாங்கல் இல்லம் என வன ஓய்வு விடுதி ஒன்று உள்ளது. இது சரணாலயத்திற்கு மிக அருகிலேயே கட்டப்பட்டுள்ளது. பரந்து விரிந்து கிடக்கும் ஏரியில் உள்ள மரங்களில் கூடு கட்டி வாழும் பறவைகளைக் கண்டு மகிழ்ந்த பின் இந்த இல்லத்தில் தங்கி சுற்றுலாக்காரர்கள் களைப்பாறலாம். நகரத்துச் சந்தடிகளிலிருந்து விலகியுள்ள இந்த இடத்தில் அதிகாலையிலும், அந்தி சாயும்போதும் பறவைகள் அலை அலையாகப் பறந்து செல்வதையும் வருவதையும் கண்டு களிக்கலாம்.

ரம்யமான சூழ்நிலையை ரசிப்பதில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் தென்னிந்தியக் காடுகளின் அடர்ந்த பகுதிகளில் உள்ள விலங்குகளைக் காண விரும்புவோர்க்கும் முதுமலை வனவிலங்கு சரணாலயம் உள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள இந்த முதுமலை சரணாலயத்தில் யானைச் சவாரியும், ஜீப் வசதியும், முகாமிடும் ஏற்பாடுகளும் உள்ளன. 4 வன ஓய்வு விடுதிகள், 2 மர வீடுகள், கூடாரங்கள், தங்கும் வசதிகள் போன்றவை உள்ளன.

சென்னை நகரின் மையப் பகுதியில் மனங்கவரும் ஒரு மான் பூங்கா உள்ளது. 1972-ஆம் வருட வன விலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் கீழ் இதை ஒரு தேசியப் பூங்காவாக்கும் உத்தேசமும் உள்ளது. கருநிற மான்களும்

புள்ளி மான்களும் இப்பூங்காவின் தனிச் சிறப்புகளாகும். அதற்குள் உள்ள குழந்தைகள் பகுதியும், சென்னை பாம்புப் பண்ணையும் சுற்றுலாப் பயணிகளை மேலும் கவர்வன ஆகும்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முண்டந்துறை புலிகள் சரணாலயமும், கிழக்குக் கடற்கரையில் தஞ்சை மாவட்டத்தில் கோடிக் கரையில் கருநிற மான், புள்ளி மான், நீர்ப் பறவைகள் ஆகியவற்றிற்காக உள்ள சரணாலயமும் முக்கியமானவைகளாகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சமீபத்தில் அமைக்கப்பட்ட, ஆனைமலை வன விலங்கு சரணாலயம் அப்பகுதிக் காடுகளை உள்ளடக்கியுள்ளது. இந்த சரணாலயம் 958 கிலோ மீட்டர் பரப்புள்ளது. காட்டு மாடுகள், சிறுத்தைகள், காட்டுப் பன்றிகள், மான்கள், கருங்குரங்குகள் முதலிய பல்வேறு வகை விலங்குகளை இங்கு கண்டு களிக்கலாம்.

தமிழ்நாட்டில் சமீபத்தில் ஏற்படுத்திய சரணாலயங்களில் களக்காடு வன விலங்கு சரணாலயமும் ஒன்றாகும். இது திருநெல்வேலி ரயில் நிலையத்திலிருந்து 55 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது. சிங்கவால் குரங்கு எனப்படும் ஒரு வகைக் குரங்கு







இனத்தின் பாதுகாப்புக்காகவே இந்தச் சரணாலயம் அமைக்கப்பட்டது. இந்த இனக் குரங்குகள் அழிந்து வருவதைத் தடுக்க இம் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

வன விலங்குகளைக் காணும் சுற்றுலாவால் தமிழ்நாட்டுக்குப் பெருமளவில் வருமானம்கிடைக்க வாய்ப்புள்ளது. நாட்டுக்கு அன்னியச் செலாவணியும் கிடைக்கும். சுற்றுலா வளர்ச்சியால் பொருளாதாரம் பொதுவாக சீரடையும். வன விலங்குச் சுற்றுலா அபிவிருத்தி மூலம் வறுமையின் எல்லையிலே வாடும் பகுதிகளில் மக்களின் பொருளாதார வளம் பெருக வழி வகை ஏற்படும். வன விலங்குச் சரணாலயங்கள் தூர நாடுகளிலிருந்து சுற்றுலாக்காரர்களைத் தமிழ்நாட்டுக்கு ஈர்த்துள்ளது. சரணாலயத்தைச் சுற்றிலும் வாழும் மக்கள் வசதிகளைப் பெற இது உதவியுள்ளது. தமிழ்நாட்டில் வன விலங்குச் சுற்றுலா வளர்ந்து வரும் நிலையில் உள்ளது. தமிழகத்தில் செடி கொடிகள், பறவை வன விலங்குகளைக் காண வருமாறு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தனி முயற்சிகள் தேவை. அரசின் சுற்றுலா, வனத்துறைப் பிரிவுகளின் இடைவிடா முயற்சியின் அடிப்படையில் சுற்றுலாக்காரர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். வன விலங்குகளைப் பாதுகாப்பதன் அவசியத்தை மக்கள் இப்போது அதிக அளவில் உணர்ந்துள்ளனர். வன விலங்குகளுக்கு ஏற்படக் கூடிய அபாயங்களை மக்களுக்கு உணர்த்தும் வகையில் வனவிலங்கு வாழும் பகுதிகளுக்கு அவர்கள் சுற்றுலா செல்ல ஊக்கம் அளிக்க வேண்டும். இதன் மூலம் வன விலங்குகளுக்கு ஏற்பட்டுள்ள அபாயங்களை அவர்கள் தெரிந்து கொள்ள முடியும். அதே சமயத்தில் அழகு தவழும் பகுதிகளில், அமைதியான சூழ்நிலையில் உண்மையான பொழுதுபோக்கு வசதியையும் மக்கள் பெற வாய்ப்பு ஏற்படும்.

## வன விலங்குகளைப் பாதுகாக்க நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய உறுதிமொழி

*இயற்கைச் சக்தியை அடிப்படையாகக் கொண்டே மனித சமுதாயம் இயங்குகிறது. எனவே இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்க வேண்டியதன் அடிப்படை முக்கியத்துவத்தை உணர்ந்து, மறைந்து வரும் வன விலங்குகளைக் காக்கவும், குறைந்து வரும் வனப்பகுதிகளைப் பேணவும் முழுமனதுடன் உறுதி ஏற்கிறேன்.*

# இணைபிரியாதவை, இணையற்றவை!
# தீபாவளியும், கோ-ஆப்டெக்ஸ் துணிவகைகளும்!



தீபாவளிப் பண்டிகை விழாவுடன்
இணைந்ததே கோ-ஆப்டெக்ஸ்.
இந்தத் தீபாவளிக்கு உங்கள்
குடும்பத்தினர் அனைவருக்கும்
உகந்த ஏராளமான துணிவகைகள்
கோ-ஆப்டெக்ஸில்!
இப்பொழுதே சென்றிடுவீர்,
இனிதே வாங்கிடுவீர்!

---

கோ-ஆப்டெக்ஸில் எத்தனை
எத்தனையோ எழில் வண்ணத்
துணிகள்!

---

காஞ்சிபுரம், ஆரணி மற்றும்
கும்பகோணம் அசல் பட்டுச்
சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம், மதுரை
கைத்தறி நூல் சேலைகள்,
சுங்கடி பிரிண்டுகள்
மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்,
வேட்டிகள், துவாலைகள்,
லுங்கிகள், அலங்காரத்துணிகள்,
சட்டைத் துணிகள்,
உடுப்புகளுக்கான துணி
வகைகள்.

நீங்களும் — கோ-ஆப்டெக்ஸூம் •
உங்கள் குடும்பமும் —
வண்ணத்துப் பூச்சியும் •
தரமேன்மையும் — நியாய
விலைகளும் (கோ-ஆப்டெக்ஸில்) •
பண்டைச் சிறப்பும் —
நவீன நளினமும் •
கோ-ஆப்டெக்ஸூம் —
தீபாவளியும்
இணைபிரியாதவையன்றோ!

**தீபாவளி
சிறப்புத் தள்ளுபடி
பருத்தி 10%
பட்டு 15%**

**22-9-76 முதல்
23-10-76 வரை**



கோ-ஆப்டெக்ஸ்

தீபாவளி வரையில்
ஞாயிற்றுக் கிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும்
விற்பனை உண்டு.



நாட்டினுடைய நலத்தையும் வளத்தையும் பெருக்க நாம்கையாளும் உத்திகளிலெல்லாம் இன்றியமையாதது குடும்ப நலத்திட்டமேயாகும். நிறைவான நல்வாழ்வு அனைவருக்கும் கிட்டவேண்டுமென்பதுதான் குடும்ப நலத்திட்டத்தின் நோக்கம். குழந்தைகள் வேண்டவே வேண்டாம் என்பதற்காகக் குடும்ப நலத்திட்டத்தை நாம் வற்புறுத்தவில்லை. ஆனால் பிறந்துவிட்ட ஒவ்வொரு குழந்தையும் சிறந்த வாழ்வு பெறுவதற்கான வாய்ப்புக்கள் அனைத்தையும் பெற வேண்டுமென்பதற்காகத்தான் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நாம் இன்று பெற்றுள்ள வாய்ப்பு வசதிகள், வாழ்க்கை வளம் இவற்றைவிடச் சிறந்த, வளமான வாழ்வை நமது குழந்தைகள் பெற வேண்டுமென்பதே நமது விருப்பமாகும். இதுதான் ஒவ்வொரு தாய் தந்தையரின் குறிக்கோளும், திட்டமிட்ட வளர்ச்சிக்குரிய இலக்கும் ஆகும்!

—*பிரதமர் இந்திரா காந்தி*

# தமிழ்நாட்டின் குடும்பநலத் திட்ட இலக்கு!

தமிழ் நாட்டிற்கான *1976-77*-ஆம் ஆண்டு குடும்ப நல இலக்கு, *1975-76*-ஆம் ஆண்டுக்குரிய இலக்கு போல் இரு மடங்கு ஆக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழ் நாடு இந்த ஆண்டு 6 இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென்றும், 40,000 தாய்மார்களுக்குக் கருத்தடை வளையம் பொருத்த வேண்டுமென்றும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய மாவட்டவாரியான விவரம் பின்வருமாறு :

**1976—77-ஆம் ஆண்டிற்கான இலக்கு**

| மாவட்டம் | நடப்பு ஆண்டில் நடத்தி முடிக்க வேண்டிய அறுவைச் சிகிச்சைகள் | நடப்பு ஆண்டில் கருத்தடை வளையம் பொருத்தப் படவேண்டிய தாய்மார்கள் |
|---|---|---|
| செங்கல்பட்டு (வடக்கு) | 22,500 | 1,490 |
| செங்கல்பட்டு (தெற்கு) | 19,840 | 1,330 |
| கோயமுத்தூர் | 57,700 | 4,095 |
| தர்மபுரி | 20,420 | 1,765 |
| கன்னியாகுமரி | 17,800 | 1,370 |
| மதுரை | 57,360 | 3,715 |
| நீலகிரி | 7,190 | 740 |
| வட ஆர்க்காடு | 54,710 | 3,560 |
| இராமநாதபுரம் | 31,660 | 2,785 |
| சேலம் | 43,580 | 2,900 |
| தென் ஆர்க்காடு | 52,680 | 3,440 |
| தஞ்சாவூர் | 55,920 | 3,630 |
| திருச்சிராப்பள்ளி | 56,050 | 3,640 |
| திருநெல்வேலி | 26,620 | 3,080 |
| சென்னை நகரம் | 75,970 | 2,460 |

# குடும்பநல திட்டத்தை ஊக்குவிக்க அரசு அளிக்கும் புதிய சலுகைகளும், சலுகை மறுப்புகளும்

தமிழ்நாடு அரசு குடும்ப நலத் திட்டத்தினை ஏற்போருக்கு ஊக்குவிப்புச் சலுகையும், ஏற்காதோர்க்கு சலுகை மறுப்பினையும் கொண்ட மற்றொரு பல்நோக்கு உத்தியினை ஏற்றுக்கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறு முடிவெடுக்கப்பட்டுள்ள ஊக்குவிப்புச் சலுகையும், சலுகை மறுப்பும் பின் வருமாறு:

**அரசு ஊழியர்களுக்கு**

1. இரண்டு அல்லது அதற்குக் குறைவான குழந்தைகள் உள்ள ஊழியர்களுக்கும், ஊழியரோ அன்றி அவர் தம் கணவர் அல்லது மனைவி அறுவைச் சிகிச்சை செய்திருந்தாலும், அவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தால் வீடு ஒதுக்கீடு செய்வதிலும், வீட்டு மனை வழங்குவதிலும், கார், ஸ்கூட்டர் போன்றவைகள் வாங்குவதிலும், வீடு கட்டுவதற்கான அரசின் கடன் பெறுவதிலும் முன்னுரிமை வழங்கப் பெறும். இரண்டு குழந்தைகள் அன்றி அதற்குக் குறைவாக குழந்தை உள்ள அரசு ஊழியர் இத்தகைய சலுகையைப் பயன் படுத்திக் கொண்ட பிறகு, மூன்றுவது குழந்தை பெற்றெடுத்தால், அவர் வாங்கிய, கடன் அல்லது முன் பணத் தொகைக்கு தண்டனைக் குரிய அதிகப்படியான தொகை வசூலிக்கப் படும்.

2. அரசுத் துறை பெண் ஊழியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய பேறு கால விடுமுறை, முதல் மூன்று குழந்தைகளுடன் கட்டுப்படுத் தப்படும்.

3. தமிழ்நாடு மருத்துவ வசதிகள் அளிப்பது பற்றிய விதிகளின்படி, (Tamil Nadu Medical Attendance Rules) பெண் ஊழியர்களுக்கோ அன்றி ஊழியர்களின் மனைவியர்க்கோ உரித்தான பேறுகாலச் சலுகைகள், முதல் மூன்று குழந்தைகளுடன் கட்டுப்படுத்தப்படும்.

4. தமிழ்நாடு மருத்துவ வசதிகள் அளிப்பது பற்றிய விதிகளில் (Tamil Nadu Medical Attendance Rules) வரையறுக்கப்பட்டுள்ள, நோயினின்றும் பாதுகாப்புப் பெறும் இலவச மருத்துவ வசதி, முதல் மூன்று குழந்தைகளுடன் கட்டுப்படுத்தப்படும். இருப்பினும், இந்த ஆணை பிறப்பிக்கப்படும் தேதியில் எவருக்கேனும் மூன்று குழந்தைகளுக்கு மேல் இருந்தால், அவருக்கு இது பொருந்தாது. அவர்களுடைய நிலையில் இச்சலுகை, இருக்கக்கூடிய எல்லாக் குழந்தைகளுக்கு மட்டும்தான் பொருந்தும். இந்த ஆணை பிறப்பிக்கப்படும் தேதியில், மூன்று குழந்தைகளோ அன்றி, அதற்குக் குறைவாகவோவுள்ள அரசு ஊழியர்களுக்கு, இச்சலுகை, முதல் மூன்று குழந்தைகளுடன் மட்டும் வரையறுக்கப்படும்.

5. இரண்டு குழந்தைகளோ அன்றி அதற்குக் குறைவாகவோ உள்ள அரசு ஊழியர்களுக்கு, இடமாற்றப் பயணச் செலவுப்படி, முதல் இரண்டு குழந்தைகளுக்கு அளிக்கப் பெறும். மற்ற அரசு ஊழியர்களுக்கு, இருக்கக்கூடிய எல்லாக் குழந்தைகளுக்கும் உண்டு. ஆனல் இச்சட்டம் வெளியிடப்பட்ட ஓராண்டிற்குப் பிறகு இடமாற்றப் பயணச் செலவுப் படி ஓராண்டிற்குப் பிறகு பிறந்த குழந்தைக் குக் கிடைக்காது.

6. புதிதாக அரசுப் பணியில் சேருபவர்களிடமிருந்து, இரண்டு குழந்தைகளுடன் தம் குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதாய், உத்தரவாதம் பெற்றுக் கொள்ளப்படும். ஆனல் இரண்டு குழந்தைகளும் ஆணுகவோ அன்றிப் பெண்ணுகவோ உள்ள ஊழியர்களிடம் உத்தரவாதம் பெறப்பட மாட்டாது. அவர்கள் மற்றுமொரு குழந்தை பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் ஆண்டுதோறும் தம் தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை தரும் படி எதிர்பார்க்கப்படுகின்றனர்கள்.

**பொதுமக்களுக்கு**

1. நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் நிலப்பங்கீடு செய்வதிலும் சாகுபடிக்காக அரசின் தரிசு நிலங்களை ஒதுக்கீடு செய்வதிலும், மூன்று அல்லது அதற்குக் குறைவாகக் குழந்தைகள் உள்ளவர்களுக்கும் மற்றும் கணவன் அல்லது மனைவி அறுவைச் சிகிச்சை ஏற்றுக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பெறும்.

2. குடிசை மாற்று வாரியத்தின் கீழ் கட்டப் பெற்றுள்ள குடியிருப்புக்களின் அடித் தளப் பகுதி மூன்று அல்லது அதற்குக் குறைவாக குழந்தைகள் உள்ளவர்களுக்கும் கணவன் அல்லது மனைவி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தாலும், அவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்பெறும். இந்தச் சலுகை வசதியினைப் பயன்படுத்திக் கொண்ட நபர், நான்காவது குழந்தையினைப் பெற்றால், உடன் அச்சலுகை திரும்பப் பெறப்படும். எனினும், இந்த அரசு ஆணை பிறப்பிக்கப் பெறும் தேதியில், குழந்தையின் கரு 20 வாரங்களுக்கு மேற்படின், அப்படிப்பட்ட நிலைமைகளை அரசு அனுதாபத்துடன் கவனிக்கும்.

3. பேறு காலத்திலோ அன்றி பேறு காலத்திற்குப் பிறகோ அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள ஒப்புக் கொள்ளாத, மகப் பேறு விடுதிகளில் பிரசவிக்கும் எல்லாத் தாய்மார்களிடமிருந்தும் அவர்களின் நான்காவது அல்லது அடுத்தடுத்த பிரசவங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள மகப்பேறு செலவினங்கள் அதிகமாக வசூலிக்கப்படும்.

**ஆசிரியர்களுக்கு**

ஆசிரியர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்துவதென அரசு முடிவெடுத்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ஒவ்வொரு ஆசிரியரும் குறைந்தது இரண்டு நபர்களையாவது அறுவைச் சிகிச்சைக்குக் கொண்டு வர வேண்டும். விதிக்கப்பட்ட இலக்கினைப் பூர்த்தி செய்தவர்களின் நன்னடத்தைப் பட்டியலில் பாராட்டுக் குறியீடு இடப்படும். ஒப்பற்ற முறையில் திட்டத்திற்கு உதவியவர்களுக்குத் தகுதிச் சான்றிதழும் பணிக்காலக் குறிப்பும், பொருத்தமான ரொக்கப் பரிசும், உரிய காலத்திற்கு முன் ஊதிய உயர்வும், மிக அதிக அளவில் இலக்கினை அடைந்தவர்க்கு மாநில அளவில் பரிசும் போன்ற ஊக்குவிப்புச் சலுகைகள் வழங்கப்பெறும். ஊக்குவிப்புச் சலுகை அளித்து விதிக்கப்பட்ட இலக்கினை எய்தும் வகையில், ஆசிரியர் ஊக்குவிக்கப்படுவார்களேயன்றி, இலக்கினைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்களுக்குத் தண்டனையாக சலுகைக் குறைப்பு ஏதும் செய்யப்பட மாட்டாது.

# சாதனைப்புகழை நிலைபெறச்செய்வீர்!

—பி. முராரி, ஐ. ஏ. எஸ்.,
செயலாளர்,
நலவாழ்வு—குடும்ப நலத் துறை
தமிழ்நாடு.

குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு செம்மையாக செயல்படும் மாநிலமாகும். தமிழ்நாடு இந்திய அரசு வகுத்தளுத்தபடி குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் மாநிலங்களுள் ஒன்று என்ற புகழைத் தக்க வைத்துக் கொண்டுள்ள மாநிலமாகும்! கடந்த ஐந்தாண்டுகளில் தொடர்ந்து 140 அல்லது 136 விழுக்காடு எனச் சாதனைகளை ஏற்படுத்தி, குடும்ப நலச் சிகிச்சைத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வரும் மாநிலமாகும். தமிழ் நாட்டின் சிறந்த சாதனைகளைப் பாராட்டி இந்திய அரசு தேசிய விருதுகளையும், பரிசுகளையும் வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்!

இவ்வாண்டு தமிழ்நாடு 5 இலட்சம் பேர்களை நிரந்தரமாகக் குடும்ப நலச் சிகிச்சை ஏற்கச் செய்ய வேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. தமிழ்நாடு அரசு 6 இலட்சம் பேர்களை இச்சிகிச்சை ஏற்கச்செய்ய ஆவன செய்து வருகிறது. இந்திய அரசு தந்துள்ள 5 இலட்சம் குடும்ப நலச் சிகிச்சைகள் என்ற இலக்கு, கடந்த ஆண்டு தமிழகத்திற்குத் தரப்பட்ட இலக்கைக் காட்டிலும் இரு மடங்கு ஆகும். பரப்பிலும், மக்கள் தொகையிலும் தமிழ் நாட்டை விடப் பெரியவை எனக் கருதத் தக்க மாநிலங்களுக்குத் தரப்பட்டிருக்கும் நடப்பு ஆண்டு இலக்கைக் காட்டிலும், தமிழகத்திற்குத் தரப்பட்டுள்ள இலக்கு அதிகமானது என்பது குறிப்பிடத் தக்கதாகும்!

நல்வாழ்வு குடும்ப நலத்துறையினரின் நெருங்கிய ஒத்துழைப்புடன், உள்ளாட்சித் துறையினர், கல்வித் துறையினர் ஆகியோரும், மற்ற அனைத்துத் துறையினரும் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கீழ் ஒருங்கிணைந்து செயல்பட்டு இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த முனைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இந்திய அரசு அண்மையில் வெளியிட்ட தேசிய மக்கள் தொகைக்கொள்கைப்படி, குடும்ப நலச் சிகிச்சை செய்துகொள்வோருக்கான ஈட்டுத் தொகை உயர்த்தி வழங்கப்படுகிறது. சமுதாயம் முழுவதையும் இதில் ஈடுபடுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கில் அரசு ஊக்குவிப்புச் சலுகைகளையும், சலுகை மறுப்பையும் அறிவித்துள்ளது.

சாதி, சமய, இன வேறுபாடு இன்றி குடும்ப நலத் திட்டம் பலராலும் ஏற்கப்படுகிறது. தமிழ் நாட்டில் இது வரை (6-10-76 வரை **2,34,515** குடும்ப நலச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதில் **83,863** பேர் தாய்மார்களாவர். தாய்மார்கள் குடும்ப நலத் திட்டத்திற்குப் பெருத்த ஆதரவு காட்டி வருகிறார்கள் என்பதை இது விளங்குகிறது. கடந்த மாதம் குடும்ப நல இரு வார விழா சீரும் சிறப்புமாக எடுக்கப்பட்டது. இந்த இரு வார விழா குடும்ப நலத் திட்ட இலக்கை எட்டப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது எனலாம். செப்டம்பர் மாதத்தில் செய்யப்பட்ட தீவிரப் பிரச்சாரப் பணியின் காரணமாக **1,03,094** பேர்கள் குடும்ப நலச் சிகிச்சை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். சமுதாயம் இத்திட்டத்தின் அவசியத்தைப் பெரிதும் உணர்ந்து வருகிறது. நாட்டில் பக்குவமான சூழ்நிலை இருக்கிறது. இச்சூழ்நிலையைப்பயன் படுத்திக்கொண்டு இலக்கு மீறிய சாதனையை ஏற்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு நல்கி வெற்றி ஈட்ட வேண்டும். அதன் வழி தமிழ்நாடு தன் சாதனைப் புகழை நிலை பெறச் செய்ய வேண்டும். அதற்கு அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறேன்.

**குடும்ப நலம் ஏற்பீர்!**

**குழந்தை நலம் காப்பீர்!!**

## பொறுப்புள்ள குடிமகனின் கடமை!

நம் நாடு விடுதலை அடைந்ததற்குப் பின்னால் 25 கோடி மக்கள் சேர்ந்துள்ளனர். இது நம் நாட்டைவிட 6 மடங்கு நிலப்பரப்புடைய சோவியத் ரஷ்யா நாட்டின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் அதிகரிக்கும் மக்கள் தொகை, நம் நாட்டைவிட 2½ பங்கு பெரியதான ஆஸ்திரேலியாவின் மக்கள் தொகைக்குச் சமமாகும். தற்போது உள்ள மக்கள் பெருக்க விகிதம் தடுக்கப்படாமல் தொடர்ந்தால், இந்த நூற்றாண்டின் முடிவில் சுமார் 100 கோடியினை எட்டிவிடும்! இதை எண்ணும் போதே தலை சுற்றுகின்றது! மக்களுடைய பொது நலத்திற்காக, அரசு எவ்வளவு தான் வசதி செய்து கொடுத்தாலும் கூட அது அவர்களின் அடிப்படைத் தேவையினைக் கூட பூர்த்தி செய்ய இயலாது. எனவே, சிறுகுடும்ப நெறியினை, தன் சொந்த நலத்திற்காகவும், நாட்டு நலத்திற்காகவும் ஒவ்வொரு பொறுப்புள்ள குடிமகனும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.



# நல்வாழ்வு— குடும்ப நலத் துறையின் நற்பணிகள்


டாக்டர் சி.ஏ.கே. சண்முகம்,
இயக்குநர் (பொறுப்பு),
நல்வாழ்வு, குடும்ப நலத்துறை,


நல்வாழ்வு பற்றிக் கருத்து அறிவித்த அண்ணல் காந்தியடிகள் "It is health which is real wealth not pieces of silver and gold" என்றார். ஆம், நல்வாழ்வு என்பது தான் ஒருவனது உண்மையான சொத்தாகும். வெள்ளியாலும் தங்கத்தாலும் ஆன ஆபரணங்களைவிடச் சிறந்த சொத்து அது! அவ்வளவு அற்புதமான ஒன்று எனத் தேசத் தந்தையால் போற்றப்பட்டது சுகாதாரம்! அச்சுகாதாரம் அனைத்திற்கும் அடிப்படையானதாகும்!

நாடு இன்று முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது. நமது அன்பிற்குரிய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் தந்துள்ள 20 அம்சப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தால் நல்ல பல பலன்கள் உருவாகியுள்ளன. கட்டுப்பாடும், ஒழுங்கும் ஓங்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பண வீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கள்ளக் கடத்தல், கொள்ளை வாணிபம், கருப்புச் சந்தை போன்றவை ஒழிக்கப்பட்டுள்ளன. சமுதாயம் முழுவதும் கடமை உணர்வுடன், புரட்சிக் கவி பாரதியின் 'காலம் கழியேல்' என்ற புதிய ஆத்தி சூடி உணர்ந்து செயல்பட்டு வருகிறது. உழைப்பு, உழைப்பு என்பதே நாட்டில் மூச்சாக இருந்து வருகிறது. அப்படிப்பட்ட உழைப்பை நல்கிட நாட்டிலுள்ளோர் அனைவரும் உடல் நலம், உள்ள நலம் பெற்றவராய் இருந்திடல் வேண்டும். அதுதான் தலையாய சொத்து. மக்கள் அந்த நலனைப் பெற்று, பொருளாதார மேம்பாட்டை உருவாக்கிடத் தக்க துணையாய் இருந்து உதவி வருவது தமிழ்நாடு அரசின் நல்வாழ்வு குடும்ப நலத் துறையாகும்.

நல்வாழ்வை ஏற்படுத்த இத்துறை மும்முனைகளில் செயல்பட்டு வருகிறது. ஒன்று நோயே ஏற்படாமல் தவிர்ப்பது (Preventive Aspect), மற்றொன்று ஏற்பட்டுவிடும் நோயைக் குணப்படுத்துவது (Curative Aspect), சிறப்பாக சமுதாயத்தைச் சிறு குடும்ப நெறி ஏற்கச் செய்வது என்பது பிறிதொன்றாகும். இவ்வழிகளின் வாயிலாக பெரும்பாலும் கிராமங்களில் வசிக்கும் 80 சதவிகித மக்களுக்கு கிராமங்களிலேயே இருந்து பணியாற்றும் நல்வாழ்வு குடும்ப நலத் துறை ஊழியர்கள் வாயிலாக இப்பணிகள் கிட்டி வருகின்றன. கிளை நிலையங்கள் (Sub Centres), ஆரம்பச் சுகாதார நிலையங்கள் (Primary Health Centres), மருந்தகங்கள் (Dispensaries) வட்ட மருத்துவ மனைகள், மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் ஆகியவை படிப்படியான அமைப்புக்களாக இருந்து பணியாற்றி வருகின்றன. 80 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனத் தமிழ் நாட்டின் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சில ஒன்றியங்களில் இரண்டு செயல்பட்டுவருகின்றன. இப்படி மொத்தம் 382 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2,880 கிளை நிலையங்கள் (Sub Centres) இவற்றின் துணை அமைப்புக்களாக இருந்து பணியாற்றி வருகின்றன.

பல முனை நல்வாழ்வுப் பணியாளர் திட்டம் (Multi purpose Health Worker's Programme) என்ற ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறது அரசு. நல்வாழ்வு-குடும்ப நலப் பணிகள் அனைத்தையும் ஒவ்வொரு நல்வாழ்வு ஊழியரும் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்துவர்.

இதற்கான பயிற்சி, மருத்துவர்களுக்கும், மற்ற ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. மருத்துவர்களால் மட்டும் ஆற்றப்பட்டு வந்த சிகிச்சையளிக்கும் பணி (Curative Services) இத்திட்டத்தின் கீழ் நல்வாழ்வுப் பணியாளர்களாலும் செயல்படுத்தப்படும். இதோடு கூட சமுதாயப் பணியாளர் திட்டம் (Community level workers programme) என்ற ஒன்றையும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சிறிய அளவில் தோன்றும் வியாதியினைக் குணப்படுத்த ஆசிரியர்கள், கிராம சேவக்குகள், கல்வி கற்ற பெண்கள் பயிற்றுவிக்கப்படுவர். இந்தத்



திட்டத்தின் வாயிலாக ஐந்து ஆயிரம் மக்களுக்கு ஒரு நல்வாழ்வு ஊழியர் என்ற நிலை பிறக்கும். நல் வாழ்வுப் பணிகளால் மக்களுக்கு அதிக அளவு நன்மை கிட்டும். இத் திட்டம் செயல்படும்போது தமிழ்நாட்டில் மட்டும் 60 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுவர். இவர்கள் பல முனை நல்வாழ்வுப் பணியாளர்களின் மேற்பார்வையிலும் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களது கண்காணிப்போடும் இயங்குவர். இதையொத்த (Bare foot Doctors) திட்டம் சீனவில் வெற்றியடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் 14 மாவட்டத் தலைமை மருததுவ மனைகள் இயங்கி வருகின்றன. மாவட்ட அளவில் முழுமையான மருத்துவ வசதி மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்பது மாநிலத் திட்டக் குழு அளித்துள்ள பரிந்துரைகளில் ஒன்ருகும். இதற்கு, ஏற்கனவே இயங்கி வரும் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளை 400 முதல் 650 படுக்கை வசதி கொண்டவைகளாக உயர்த்த வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இப்போது 50 படுக்கைகள் முதல் 544 படுக்கைகள் வரை பெற்று மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் பணியாற்றி வருகின்றன.

கிராமப் புறப் பகுதிகளில் அருமையாக இருந்து வரும் மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டும்—விரிவு படுத்த வேண்டும். அதற்காக வட்ட மருத்துவ மனைகளின் நிலை 90 படுக்கைகள் கொண்டவையாக உயர்த்தப்பட வேண்டும் என மாநிலத் திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது. தமிழ் நாட்டில் இப்போது 105 வட்ட மருத்துவ மனைகள் உள்ளன. ஐந்தாவது திட்டக் காலத்தில், 90 படுக்கை வசதி கொண்டவையாக இவற்றைப் படிப்படியாக மாற்ற வேண்டுமென்பது திட்டம்.

இவை தவிர தமிழகம் முழுவதிலும் 15 நடமாடும் மருத்துவ நிலையங்கள் (Mobile Medical Units) செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, கோவை, தர்மபுரி, மதுரை, நீலகிரி, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

நாட்டிலுள்ள மலைப் பகுதிகளை வளர்ச்சி யடையச் செய்ய வேண்டுமெனக் கருதி, இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட மருத்துவ வளர்ச்சிக்கு உதவ, மத்திய அரசு முன் வந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நீலகிரி மாவட்ட மருத்துவ வளர்ச்சிக்கென 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கலாம் என இந்திய அரசு எண்ணியுள்ளது.

பொதுவான மருத்துவ மனை வசதிகளோடு கூட, புற்றுநோய்ச் சிகிச்சை, தொழு நோய் ஒழிப்பு, காசநோய்த்தடுப்பு, கண் சிகிச்சை முகாம், குடும்ப நலத் திட்டப் பணி ஆகியவையும் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

புற்று நோய் மருத்துவத்திற்கு என காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணு நினைவுப் புற்று நோய் நிலையம் செயல்பட்டு வருகிறது. உலக நல்வாழ்வு நிறுவனத்தின் துணையோடு தமிழ்நாடு அரசு இந்நிலையத்தின் வாயிலாக புற்று நோய்த் தடுப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந் நிலையம் இயங்க மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியோடு, நார்வே, அமெரிக்க உதவிகளும் உலக நல்வாழ்வு நிறுவனத்தின் வாயிலாகக் கிட்டி வருகின்றன.

தொழு நோய் பெரு வியாதி என அழைக்கப்படும் பிணியாகும். அண்மையிலேயே வருகின்ற நோய்களிலெல்லாம் தொல்லை மிகத் தரும் நோய் இதுவாதலால் பெரு வியாதி என்றனர் போலும். இத் தொழு நோயைத் துவக்கத்திலேயே கண்டறிந்து, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதின் மூலம் மக்களுக்குச் சிறப்பான சிகிச்சை கிடைக்க அரசு ஆவன செய்துள்ளது.

இன்றைய மிகப் பெரிய சுகாதாரப் பிரச்சினை காச நோயாகும். இதை எலும்புருக்கி நோய் என்றும் சொல்வார்கள்.

இந்நோயிலிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்திய அரசு தேசியக் காச நோய்த் தடுப்பு இயக்கத்தை நடத்தி வருகிறது. அதன் அடிப்படையில் தமிழக அரசு எல்லா மாவட்டங்களிலும் காசநோய்த் தடுப்பு இயக்கத்தை முறையாக நடத்தி வருகிறது.

எல்லா அரசு மருத்துவ மனைகளிலும் காச நோய்க்கான இலவச மருத்துவ வசதிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவச் சிகிச்சைக்கான மருந்துகள் தரமானவையாக, கலப்படமற்றவையாகக் கிடைக்க நல் வாழ்வு குடும்ப நலத் துறையின் ஒரு பகுதியாக இயங்கும் மருந்துக் கட்டுப்பாடு பிரிவு உரிய கண்காணிப்புச் செலுத்திப் பணியாற்றி வருகிறது. மருந்துக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கென ஆய்வுக் கூடம் ஒன்று சென்னையிலுள்ள இயக்குநர் அலுவலகத்தில் கட்டப்பட்டுவருகிறது.

தொழிலாளர் காப்புறுதித் திட்ட மருத்துவ மனைகளும் மருந்



தகங்களும் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. நாட்டில் உற்பத்தி பெருக வேண்டுமானல் தொழிலாளர் சமுதாயம் உடல் நலம், உள்ள நலம் பெற்று இலங்க வேண்டும். அதற்கான நல்வாழ்வுப் பணிகள் அத்தனையையும் இம் மருத்துவ மனைகள் ஆற்றி வருகின்றன.

மேல் நாட்டு மருத்துவ முறையோடு கூட, நமது நாட்டுச் சித்த மருத்துவம், யுனனி, ஆயுர்வேதம் போன்ற மருத்துவக் கலைகளும் ஓமியோபதி மருத்துவமும் ஓங்க அரசு உரிய கவனம் செலுத்தி, ஆவன செய்து வருகிறது.

இவ்வளவு சிறந்த முறையில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள், மருத்துவ வசதிகள் பெருக்கப்பட்டு தமிழகம் வளர்ந்து வருவதால் கொள்ளை நோய்கள் தடுக்கப்பட்டுள்ளன. இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. 1940ஆம் ஆண்டில் 23 ஆக இருந்த சராசரி வயது இப்போது 52 ஆக உயர்ந்துள்ளது. அந்த அளவுக்குச் சராசரி வாழ் நாள்—ஆயுட் காலம் கூடியிருக்கிறது. இறப்பு விகிதத்தைக் குறைத்த வேகத்தில், பிறப்பு விகிதத்தைக் குறைக்க இயலவில்லை. எனவே மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. நாட்டில் ஏற்பட்டு வரும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினை, வளர்ச்சித் திட்டங்களால் ஏற்படும் பலன்களையெல்லாம் விழுங்கி வருகிறது எனலாம். நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் மக்கள் தொகைப் பெருக்கமும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற தொலை நோக்கில் இந்தியா 1952-ஆம் ஆண்டு முதலே குடும்ப நலத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசிடமிருந்து இத்திட்டச் செயலாக்கத்திற்கென 100 சதவிகித நிதி உதவி பெற்று மாநிலங்கள் சிறு குடும்ப நெறியைப் பரப்பி வருகின்றன. தமிழ்நாடு இத் திட்டத்தைத் துவக்கம் முதல் தொடர்ந்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. அதற்காகத் தமிழ்நாட்டிற்கு தேசிய விருதுகளும், பரிசுகளும் கிடைத்துள்ளன. 1,000க்கு 35 என்றிருந்த தாக மதிப்பிடப்பட்டுள்ள பிறப்பு விகிதத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத்திட்ட இறுதிக்குள் 1,000க்கு 30 ஆகக் குறைக்க வேண்டும். ஆருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 1,000க்கு 25 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே நோக்கம்.

தாய்-சேய் நலப் பணிகள் இத் திட்டத்தின் கீழ் மிகச் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. முத் தடுப்பு ஊசி, வைட்டமின் ஏ மருந்து குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. கருவுற்ற தாய்மார்களுக்கு இரத்த சோகை ஏற்படாமலிருக்க இரும்புச் சத்து மாத்திரைகள் தரப்படுகின்றன. குழந்தைகளுக்குச் சத்துணவும் வழங்கப்படுகிறது. பிறந்த குழந்தைகளைக் காக்க இப்பணிகள் உதவுகின்றன.

நடப்பு 76-77-ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் குறிப்பிடத் தக்க ஆண்டு என்று சொல்லலாம். இவ்வாண்டு ஏப்ரல் திங்களில் தான் தேசீய மக்கள் தொகைக் கொள்கை அறிவிக்கப்பட்டது. குடும்ப நலச் சிகிச்சை செய்து கொள்வோருக்கு ஈட்டுத் தொகை உயர்வு, திருமண வயதை உயர்த்துதல், பெண்கள் முன்னேற்றத்திற்கு உரியன செய்வது, குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களுக்கு 8 சதவிகிதத் தொகை வழங்குதல் ஆகியவை அக்கொள்கையின் முக்கியப் பகுதிகளாகும்.

தேசீய மக்கள் தொகைக் கொள்கையை அறிவித்த இந்திய அரசு, மாநிலங்களுக்கான இலக்கையும் அறிவித்துள்ளது. சிறப்பாகத் தமிழ்நாடு நடப்பு ஆண்டில், அதாவது 76-77-ல் 5 இலட்சம் பேர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை செய்து முடிக்க வேண்டுமென்று இலக்குத் தந்துள்ளது. சென்ற ஆண்டு இலக்கைப் போல் இது இரண்டு மடங்காகும்.

இந்திய அரசு தமிழ்நாட்டிற்குத் தந்துள்ள இலக்கையும் தாண்டி சாதனை ஏற்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களது தலைமையில், நல்வாழ்வு குடும்ப நலத் துறையின் அனைத்துப் பிரிவினரும், அரசுத் துறைகளைச் சார்ந்த அனைவரும் முனைந்து செயல்பட்டு வருகின்றனர். குறிப்பாகத் தொழிலாளர்கள் இடையே இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிருவாகங்கள் பலவும் தங்கள் தொழிலாளர்கள் குடும்ப நலச் சிகிச்சை ஏற்ருல், அரசு அளிக்கும் ஈட்டுத் தொகையோடு கூட ஊக்கத் தொகை அளித்து ஊக்குவித்து வருகின்றன. சிறப்பாகத் தமிழ்நாடு அரசு குடும்ப நல ஊக்குவிப்புச் சலுகைகளையும் சலுகை மறுப்பையும் இப்போது அறிவித்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் தமிழ்நாடு முழுவதும் எடுக்கப்பட்ட குடும்ப நல இரு வார விழா, திட்டச் செயலாக்கத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. பொதுக் கூட்டங்கள், கவியரங்குகள், பட்டி மன்றங்கள், நாடகங்கள், இசை நிகழ்ச்சி



கள், அளவான குடும்பத்தின் அவசியத்தை உணர்த்தும் கருத்துக்களை மக்களிடையே பரவ உறுதுணையாக அமைந்தன. திட்ட இலக்கை எட்ட இந்த இரு வார விழா பெரிய துணையாக இருந்தது.

கருச் சிதைவு சட்டப்படி குற்றமல்ல. கருச் சிதைவு மருத்துவ மனைகளில் இலவசமாகச் செய்யப்படுகிறது. கருத் தரித்த 12 வாரங்களுக்குள் கருச் சிதைவு செய்து கொள்வது நலம். கருச் சிதைவு செய்து கொள்வோர் குடும்ப நலச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்பதில்லை.

தமிழ்நாடு, நடப்பு ஆண்டில் 5 இலட்சம் குடும்ப நலச் சிகிச்சைகள் செய்து முடிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. செப்டம்பர், இறுதியில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், அரசுத் தலைமைச் செயலாளர் அறிவித்தது போல் தமிழ்நாட்டில் இது வரை ஏறத்தாழஇரண்டுஇலட்சம் குடும்ப நலச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் செய்ய வேண்டியது மூன்று இலட்சம். அனைவரும் முயன்று முனைப்போடு செயல்பட்டால் வெற்றி கிட்டும்.

இறுதியாக ஒன்று. இத்திட்ட வெற்றிக்கு மருத்துவர்களின் துணை இன்றியமையாததாகும். அதை வலியுறுத்த நினைத்த நமது பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்கள் ''வறுமையை ஒழிக்கும் நமது போராட்டத்தில் நமக்குக் கைகொடுத்து உதவிடும் நண்பர்களாக இருப்பவர்கள் விஞ்ஞானிகளும் மருத்துவர்களுமேயாவர். மருத்துவர்களின் பணி இன்று பெருமளவு தேவைப்படுகிறது. மக்களின் மரணத்தைத் தள்ளிப் போடுவதற்கு மட்டுமல்லாது, பிறப்பைத் தவிர்ப்பதற்கும் இவர்கள் பணி தேவைப்படுகிறது' என்று கூறியுள்ளார். எனவே சமுதாயத்தின் அனைத்துப் பகுதியினரின் ஒத்துழைப்பாலும் பக்குவமாகப் பயன்படுத்திக் கொண்டு மருத்துவர்களும் மற்ற அனைவரும் குடும்ப நலத் திட்டச் செயலாக்கத்தில் வெற்றி ஈட்டித் தர வேண்டும்.

**'வளரும் தமிழகம்' என்ற தலைப்பில் சென்னை வானொலி நிலையத்தில் 3-10-1976ஆம் நாள் ஆற்றிய உரை.**

## மாற்று அறுவைச் சிகிச்சை மகிழ்விற்கு வித்திட்டது

சேலத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நடுப்பட்டி என்ற கிராமத்தில் திருமதி பாயம்மாள் வாழ்ந்து வருகிறார். அவ்வூர் விவசாயியின் மனைவியான அவர், சில வருடங்களுக்கு முன் தன்னுடைய நான்காவது குழந்தை பிறந்த பிறகு அறுவைச் சிகிச்சையினை ஏற்றுக் கொண்டார். பின்னர் அவரின் ஒரே மகன் திடீரென்று இறந்து விட்டான். அதன் பின் பாயம்மாவும் கிராமத்தில் உள்ள மற்றவரும், குடும்ப நலத்திட்டத்தினைக் குறை கூறித் தூற்ற ஆரம்பித்தனர். அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் களப் பணியாளராகப் பணியாற்றும் திரு. நல்லவேதி இதனைக் கேள்வியுற்றதும், அத்தம்பதியர்க்கு ஆறுதல் கூறினர். அத்துடன், மாற்று அறுவைச் சிகிச்சை (Recanalisation) செய்து கொள்வதன் மூலம், மறுபடியும் குழந்தை பெறும் வாய்ப்பு உள்ளது என்றும் உறுதி கூறினர். ஆரம்பத்தில் பாயம்மாவிற்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால், குடும்பநல ஊழியர்களின் விடாமுயற்சியினாலும், அவர்கள் அளித்த உறுதியினாலும், மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள பாயம்மா ஒப்புக் கொண்டார். மாவட்ட மருத்துவ அலுவலர் இம்மாற்று அறுவைச் சிகிச்சையினை வெற்றிகரமாகச் செய்தார். சில மாதங்களுக்குப் பின் பாயம்மா கருவுற்றார். இச்செய்தியினைக் கேட்டு மகிழ்வுற்ற குடும்பநல ஊழியர்கள், பாயம்மாவிற்கு சுகப் பிரசவம் நிகழ, சிறந்த மருத்துவ கவனிப்புக் கிடைக்கும்படி செய்தனர். அனைவர் மனமும் மகிழத்தக்க விதத்தில், பாயம்மாவிற்கு ஆண் குழந்தை பிறந்தது.

இந்நிகழ்ச்சி, மாவட்டம் முழுவதும் பரவி, மக்களிடையே குடும்பநலத் திட்டத்தின்பால் நம்பிக்கையை வளர்த்தது; மக்கள் கொண்ட தவறான கருத்தினையும் போக்கியது. தற்போது சேலம் மாவட்டத்தில், பெண்கள் பெருவாரியாக அறுவைச் சிகிச்சையினை மேற்கொள்ள முன் வந்துகொண்டிருப்பதில் எவ்வித வியப்பும் இல்லை அல்லவா?





தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன் லால் சுகாதியா அவர்கள் தலைமையில் மத்திய அரசின் உள்துறை அமைச்சர் திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களின் மாநாட்டை சென்னை, இராஜாஜி அரங்கில் 28.9.1976 அன்று துவக்கி வைத்து உரையாற்றினார்.

# படமும் செய்தியும்

அமரகவி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிடும் ''ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!'' என்ற ஒலி—ஒளிக் காட்சியை **(Sound and Light Show)**, சென்னை இராஜாஜி அரங்கின் முன்புறத்தில் 28.9.1976 அன்று மத்திய அரசின் செய்தி ஒலி பரப்புத்துறை அமைச்சர் திரு. வி. சி. சுக்லா அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைத்தார். அக்காட்சியைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்களும் ஆர்வத்தோடு காணுவதைப் படம் விளக்குகிறது.







இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. பி. டி. ஜட்டி அவர்கள், காந்தி ஜெயந்தி விழாவைத் துவக்கி வைப்பதற்காக 2.10.1976 அன்று சென்னைக்கு வருகை தந்தார். அவரை மீனம்பாக்கம் விமான நிலயத்தில் தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், அவரது துணைவியாரும், உயர் அலுவலர்களும் வரவேற்றனர்.

காந்தி ஜெயந்தி விழாவை முன்னிட்டு, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த பொருட்காட்சியை இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. பி. டி. ஜட்டி அவர்கள் திறந்து வைத்தார்.







பிஜி அரசாங்கத்தின் செய்தி அமைச்சர் திரு. ஜோன் பி. நய்சாரா அவர்கள் 21.9.1976 அன்று சென்னைக்கு வருகைதந்தார். அவரைக் கௌரவிக்கத் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்கள் ஒரு விருந்து நடத்தினார். திரு. நய்சாரா அவர்களுக்கு, திருமதி. தவே அவர்கள் கலையழகு மிக்க தஞ்சாவூர்த் தட்டு ஒன்றையும், தமிழ்நாடு பற்றிய நூல்களையும் பரிசாக வழங்கினார்.



தானே முன்வந்து ரத்ததானம் செய்யும் முகாமைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் 4.10.1976 அன்று, தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைத்தார். அம்முகாமில் தமிழ்நாடு அரசின் நல்வாழ்வுத் துறை செயலாளர் திரு. பி. முராரி அவர்கள் முதலாவதாக ரத்ததானம் செய்தார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 5.10.1976 அன்று, திருச்சியில் உள்ள மண்டலப் பொறியியல் கல்லூரியில் மாணவர் சங்கத்தைத் துவக்கி வைத்ததுடன், மண்டலப் பொறியியல் கல்லூரியில் ஒரு தென்னங் கன்றை நட்டுத் தண்ணீர் ஊற்றினர்.





தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது, ஒரத்தநாட்டில் நடைபெற்று வரும் வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். குழாய்க்கிணறு அமைப்பதற்காக விசைத்துளைக் கருவி செயல்படுவதை ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார்.

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கல்லணையைப் பார்வையிட்டார். உடனிருப்பவர் தமிழ்நாடு பொதுப் பணித்துறையின் தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்).








தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 4-10-1976 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் வனவிலங்கு வாரவிழாவைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

இந்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் பி. சிவராமன் அவர்கள், கிண்டியிலுள்ள வேளாண் இல்லத்தில், 'மக்கரோணி' தொழிற்சாலையை 9-10-1976 அன்று துவக்கி வைத்தார்.





காவிரியாற்றின் கழிமுகப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பகுதிகளைத் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் பார்வையிட்டார். வேளாண்மைத்துறை இயக்குநரும், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரும் உடனிருந்தனர்.






தஞ்சாவூரில் 5.10.1976 அன்று நடைபெற்ற ஒரு விழாவில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்களை வழங்கினார்.

“ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சிக்குச் சமுதாய—பொருளாதாரத் திட்டமிடுதல்” என்ற கருத்தரங்கு தமிழ்நாடு திட்டக்குழுவினால் 8.10.1976 அன்று சென்னை இராஜாஜி அரங்கில் நடத்தப்பெற்றது. அக்கருத்தரங்கை, தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில், இந்திய அரசின் திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் பி. சிவராமன் அவர்கள் துவக்கி வைத்து, உரையாற்றினார். ஆளுநரின் ஆலோசகர் திரு பி. கே. தவே அவர்களும் அக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்.






ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள், சென்னை சூளைமேட்டில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் 11-10-1976 அன்று மாற்று முறைக் கல்வி (Non-formal education) நிலையத்தைத் துவக்கி வைத்தார். அவ்விழாவில் முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினார்.



# தேசீய மக்கள் தொகைக் கொள்கை


வெ. நாமதேவன் பி.ஏ.,

துணை இயக்குநர் (குடும்பநல விளம்பரம்),

மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலத்துறை.


மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்காக உலக நாடுகள் எல்லாம் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தத் தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் மிகுந்த தொலை நோக்கோடு 1952-ஆம் ஆண்டே தேசீயத் திட்டமாக அறிவித்துக் குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்தத் துவங்கிய நாடு இந்தியா! உலக நிலப் பரப்பில் 2.4 சதவிகித அளவே நிலப்பரப்புடைய இந்தியா, உலக மக்கள் தொகையில் 15 சத விகித அளவு மக்கள் தொகையை உடையதாக இருக்கிறது. இப்போது நமது நாட்டின் மக்கள் தொகை 61 கோடியையும் தாண்டி விட்டதாகக் கூறப்படுகிறது. இந்தியாவில் மாதந் தோறும் 10 இலட்சம் மக்கள் கூடுதலாகி வருகிறார்கள் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. நாடு விடுதலை அடைந்த பிறகு 25 கோடி மக்கள் கூடுதலாகியிருக்கிறார்கள். இது இந்தியாவைப் போல் ஆறு மடங்கு அதிகமான நிலப் பரப்புடைய சோவியத் ரஷ்யாவின் மக்கள் தொகைக்கு ஒப்பானதாகும்! இவ்வளவு வேகமான வகையில் பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த இந்திய அரசு 100 சதவிகித அளவு நிதி உதவியை மாநிலங்களுக்கு வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்திய அரசின் வழிப் படுத்தலுக்கு இணங்க தமிழ்நாடு, தனக்கேயுரிய முறையில் இத்திட்டத்தை முறையாகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தை அனைத்து மாநிலங்களிலும் சீராக, முனைப்போடு செயல்படுத்துவதற்கென இந்திய அரசு தேசீய மக்கள் தொகைக் கொள்கையை அறிவித்துள்ளது. இப்படிப்பட்ட தேசீய மக்கள் தொகைக் கொள்கையை உலக நாடுகளிலேயே முதன் முதலாக அறிவித்துள்ள நாடு இந்தியா எனவே!

## பிறப்பு விகிதம் குறைக்கப்படும் !

இக் கொள்கையினைப் பற்றி அறிவிப்பதற்கு முன், குடும்ப நலத் திட்டம் குறித்த பொது மக்களின் கருத்துக்கள், பிரச்சினையின்பால் உள்ள உண்மைகள் ஆகியவை பற்றியெல்லாம் முழுமையாகவும், மிகுந்த கவனத்துடனும் அரசு ஆய்ந்து முடிவெடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில் 1,000-க்கு 35 ஆக இருந்த பிறப்பு விகிதத்தை ஆறாவது திட்ட கால முடிவில் 25 ஆகக் குறைக்க வேண்டுமென்பதற்கு இக்கொள்கை துணை செய்யும் என கருதப்படுகிறது. 1984-ஆம் ஆண்டு வாக்கில், நமது நாட்டு மக்கள் தொகை வளர்ச்சி 1.4 சதவிகிதமாகக் குறைக்கப்படும் என நம்பப்படுகிறது.

## திருமண வயது உயர்த்தப்படும் !

தேசீய மக்கள் தொகைக் கொள்கை ஆண், மற்றும் பெண்களுக்கான திருமண வயதை முறையே 21 ஆகவும், 18 ஆகவும் உயர்த்த முடிவு செய்து அதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்படும் என அறிவித்துள்ளது. இப்படித் திருமண வயதை உயர்த்துவது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க உதவுவதோடு, மக்கள் பொறுப்புள்ள பெற்றோர்களாக வாழவும் வழி வகுக்கும். தாய்—சேய் நலம் காக்கவும் இது பெருந்துணையாக அமையும். பெண்கள் சிறு வயதிலேயே திருமணம் செய்து, கருத்தரிப்பதால் தாய்மார்களும், குழந்தைகளும் இறக்கும் நிலை அதிகமாக இருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். தேசீய மக்கள் தொகைக் கொள்கை திருமண வயதை உயர்த்த வழி செய்திருப்பதால் இப்படிப்பட்ட நிலைகளெல்லாம் தவிர்க்கப்படும் என நம்பலாம்.

## மக்கள் தொகை குறைந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையாது !

அடுத்து மாநிலங்கள் ஆர்வம் குன்றாது இத்திட்டத்தைச் செயல்

படுத்தும் வகையில் ஒரு திட்டத்தையும் இக் கொள்கை அறிவித்துள்ளது. குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி, பிறப்பு விகிதத்தைக் குறைத்த மாநிலங்கள், நாடாளுமன்றத்தில், சட்ட மன்றத்தில் தங்கள் மாநிலத்திற்குரிய பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இழக்க நேரிடும் என்றும், சிறப்பாகச் செயல்படுத்தாத மாநிலங்களுக்குரிய பிரதிநிதிகளின் எண்ணிக்கை கூடிவிடுமோ என்றும் ஒரு ஐயம் இருந்தது. அதைப் போக்க தேசிய மக்கள் தொகைக் கொள்கை வழி கண்டுள்ளது. அதன்படி 2001-ஆம் ஆண்டு வரை, 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலேயே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நிலை நிறுத்தப்படும். 1981 அல்லது 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையில் இம்மன்றங்களின் எண்ணிக்கை குறைக்கப்படவோ, கூட்டப்படவோ மாட்டாது என்பது அதன் பொருளாகும். இதற்குரிய அரசியல் சட்டத் திருத்தங்கள் நடப்பு ஆண்டில் கொண்டு வரப்படும். குடும்பநலத் திட்டத்தில் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் இன்னும் முனைப்போடு செயல்பட இது வகை செய்துள்ளது எனலாம்.

**ஈட்டுத்தொகை உயர்த்தப்படும் !**

மேலும் குடும்ப நலச் சிகிச்சை செய்து கொள்வோருக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகை உயர்த்தி வழங்கப்படும் என இக் கொள்கை அறிவித்துள்ளது. அந்த அடிப்படையில், இரண்டும் அதற்குக் குறைவாகவும் குழந்தைகள் உடையோர் குடும்ப நலச் சிகிச்சை செய்து கொண்டால் ஈட்டுத் தொகை ரூ. 100, மூன்று குழந்தைகள் உடையோர் செய்து கொண்டால் ஈட்டுத் தொகை ரூ. 80, நான்கும் அதற்கு மேற்பட்ட குழந்தைகள் இருப்பவர் செய்து கொண்டால் ஈட்டுத் தொகை ரூ. 60 எனவும் வழங்கப்படும் என்று தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது.

**மாநிலங்கள் ஊக்குவிக்கப்படும் !**

சிறப்பாக, மாநிலங்களுக்குரிய மத்திய நிதி உதவி முதலானவையும், 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கு அடிப்படையிலேயே 2001-ஆம் ஆண்டு வரை அளிக்கப்படும் எனத் தேசிய மக்கள் தொகை கூறுகிறது. அத்தோடு, மாநிலத் திட்டங்களுக்கென்று மத்திய அரசு நிதி உதவி அளிக்கும்போது, குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கென்றே 8 சதவிகிதத் தொகை வழங்கப்படும் என அக் கொள்கை தெரிவிப்பது மாநிலங்கள் இத்திட்டச் செயலாக்கத்தில் ஊக்கம் பெற உறு துணையாக அமைகிறது எனலாம்.

**பெண்களின் கல்வி அறிவைப் பெருக்கப்படும் !**

கல்வி யறிவின்மைக்கும் கருத்தரித்தலுக்கும் கருத்தொருமிப்பு அதிகமாகையால் பெண் கல்வி மிக மிக அவசியமாகிறது. பொதுவாகப் பெண் கல்வி மிகுந்துள்ள பகுதிகளில் கருத்தரிப்போர் தொகை தானாகவே குறைந்து விடுகிறது. எனவே பெண் கல்வியை ஓங்கச் செய்ய, குறிப்பாக நடுத்தரக் கல்விக்கு மேல் பெண்களின் கல்வி அறிவைப் பெருக்குவதற்கு உரியவை அனைத்தும் செய்யப்படும் எனத் தேசிய மக்கள் தொகைக் கொள்கை கூறுகிறது. தாய்—சேய் நலம் ஓங்க இம் முயற்சி பெரிதும் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்கள் தொகையில் கல்வியை பள்ளிகளில் அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளில் மத்திய நல்வாழ்வு-குடும்ப நலத்துறை அமைச்சகம் கல்வியமைச்சகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என இக்கொள்கை அறிவிப்பின் வாயிலாக அறிகிறோம்.

**சிறுகுடும்ப நெறியைப் பரப்புவோருக்கு ஊக்கத்தொகை அளிக்கப்படும் !**

அரசின் அத்துணை துறைகளும் தங்கள் திட்டப் பணிகளோடு கூட குடும்ப நலத் திட்டத்தையும் இணைத்துப் பணியாற்ற வேண்டுமென இக் கொள்கை வலியுறுத்துகிறது. குடும்ப நலச் சிகிச்சை ஏற்போருக்கு ஈட்டுத் தொகை வழங்குவதுபோல், இத்திட்டச் செயலாக்கத்திற்குச் சிறப்பாகப் பணியாற்றும் பல்வேறு பிரிவினருக்கும் 'குழுவாரி ஊக்கத் தொகை' வழங்க வேண்டுமென அரசு கருதுவதாக இக் கொள்கை அறிவிக்கிறது. இதனால் மருத்துவர்கள், மாவட்ட, ஊராட்சி, ஒன்றி அமைப்புக்கள், பல்வேறு நிலைகளில் இருக்கும் ஆசிரியர்கள், கூட்டுறவு அமைப்புக்கள், தொழிலாளர்கள் ஆகியோரும் பிறரும் 'சிறு குடும்ப நெறியை' மக்கள் ஏற்கச் செய்யும் பணியில் முனைப்போடு ஈடுபடுவார்கள் என எதிர் நோக்கலாம்.

இந்திய அரசு அறிவித்துள்ள தேசிய மக்கள் தொகைக் கொள்கை காரணமாக குடும்ப நலத் திட்டம் மக்களிடையே அன்றாட வாழ்வு முறையாக உருப்பெற்று, சமுதாயத் திட்டமாக மலர்ந்து வருகிறது என்பது உண்மை!

**அளவான குடும்பம் !**

**வளமான வாழ்வு ! !**

## குடும்ப நலம் காப்போம்!

"......நமக்குள்ள பிரச்சினைகளில் மக்கள் பெருக்கம் ஒன்று. எனவே நகரத்தில் இருப்பவர்களும் சரி, கிராமப்புறங்களில் வசிப்போரும் சரி, ஒவ்வொருவரும் இந்தத் திட்டத்தில் தம் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும். இதன் குறிக்கோள் மக்கள் தொகையைக் குறைப்பது மட்டுமல்ல; குடும்ப நலமும் இதில் இணைந்துள்ளது. பெற்றோர்கள் தங்கள் வசதிகளைக் கொண்டு பிள்ளைகளுக்குச் சரியான கல்வி புகட்ட வேண்டும். அவர்களுடைய உணவு, உடை, மற்றும் இதரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

—இந்திரா காந்தி



# வனவிலங்கு [பாது காப்பு] சட்டம்---1972

—எஸ். ஏ. ரஹ்மதுல்லா, ஐ.எப்.எஸ்.,
தலைமை வனவிலங்குக் காப்பாளர்,
தமிழ்நாடு.



**வி**லங்குகள், பறவைகள், பாம்பு இனங்கள், நீர் நிலைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான விரிவான வனவிலங்குப் பாதுகாப்பு மத்திய சட்டம் 1974 ஜனவரி 1-ஆம் தேதி தமிழ்நாட்டில் அமலுக்கு வந்தது. இச்சட்டத்தின் கீழ் உள்ள விதிகள் 1976 ஜனவரியில் அறிவிக்கப்பட்டன.

1882-ஆம் ஆண்டின் சென்னை காடுகள் சட்டத்தின் 21 (ஹெச்) பிரிவின்கீழ் ரிசர்வ்டு காடுகளில் வேட்டையாடுவது முறைப்படுத்தப்பட்டது. அச்சட்டத்தின் விதிகள் வேட்டை விளையாட்டுக்கான விலங்குகள், பறவைகள், ஆகியவற்றின் அளவுகள், இனம், வேட்டை நடத்தப்படுவதற்கான பருவம், பயன்படுத்துவதற்குரிய துப்பாக்கிகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டதுடன், பரண் கட்டி வேட்டையாடுவதும், காடு, ஏரி, குளம், ஓடை ஆகியவைகளில் வேட்டையாடுவதும், பொறி வைத்தோ, விஷம், வெடி மருந்துகள் மூலமோ வேட்டையாடுவதும் கூடாது என்றும் விதித்துள்ளது. 'ரிசர்வ்டு' நிலங்களில் இதே போன்ற வேட்டை விளையாட்டுக்காகவும், வனத்துறை சட்டத்தின் கீழ், விதிமுறைகள் சட்டத்தின் கீழ், விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த விதிமுறைகளை வருவாய்த் துறை அமல்படுத்துகிறது. 'ரிசர்வ்' காடுகள், 'ரிசர்வ்' நிலப் பகுதிகள் ஆகிய இடங்கள் தவிர வேறு பகுதிகளில் யானைகள் போன்ற விலங்குகளை வேட்டையாடுவது தொடர்பாக சிறப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. வேட்டை விளையாட்டுக்கள் பெருமளவில் இருந்து அந்த நிலைமையில் பல பறவைகள், விலங்குகள் விரைவில் அழிந்து அவற்றின் இனமே அரிதாகிவிடும் என்ற சூழ்நிலையில் மேற்படி சட்டங்கள் இயற்றப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் —விலங்கினங்கள் பெருமளவில் இருந்த ஒரு பகுதியில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த விலங்குகளின் எண்ணிக்கையுடன் அப்பகுதியில் இன்றுள்ள விலங்குகளின் எண்ணிக்கையைஒப்பிட்டுப் பார்த்தால் அது குறைந்து வந்திருப்பது தெளிவாகும். எனவே தான், இயற்கைப் பாதுகாவலர்கள் இந்நிலைமை குறித்து அபாயக் குரல் எழுப்பினர். இதையடுத்து 1955-ல் இந்திய வன விலங்கு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. அந்த வாரியத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு விலங்கினங்களும் பறவைகளும் 3 வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

**அவையாவன**

1. அபாயத்துக்கு ஆளாகியுள்ளவை.

2. பாதுகாப்புத் தேவைப்படும் சிறப்புத் தரத்தைச் சேர்ந்தவை.

3. பெரிய மிருகங்கள், சிறிய மிருகங்கள், சிறு சிறு பிராணிகள்.

புதிய சட்டத்தின் கீழ் அபாயத்துக்கு ஆளாகியுள்ளதாக வரையறுக்கப்பட்ட விலங்கினங்களும், பறவைகளும் முற்றிலுமாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன. மற்றவை அவற்றின் தரத்திற்கேற்ப, பாதுகாக்கப்படுகின்றன. இச்சட்டத்தின்படி பொறி வைத்து விலங்குகளைப் பிடிப்பது, உயிருடன் பிடிப்பதற்காகச் சுடுவது, அல்லது கொல்வதற்காகச் சுடுவது, உணவு விடுதிகளில் அவற்றின் இறைச்சி பயன்படுத்தப்படுவது, விலங்குகள் வைத்து வியாபாரம் செய்வது, அவற்றை வேறிடங்களுக்கு அனுப்புவது, ஏற்றுமதி செய்வது ஆகியவற்றை தலைமை வனவிலங்குக் காப்பாளர் மற்றும் வனத் துறையில் உள்ள அதிகாரம் பெற்ற அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

இச்சட்டத்தின் 3-வது அத்தியாயம் விசேஷ அனுமதியின்றி வன விலங்குகளை வேட்டையாடுவதைத் தடை செய்கிறது. அனுமதியுடன் குறிப்பிட்ட நோக்கத்துக்காக வேட்டை நடைபெற்றால் கைப்பற்றப்பட்ட அல்லது கொல்லப்பட்ட விலங்குகள் பற்றிய விவரப் பட்டியலை வைத்திருக்க வேண்டுமென்றும் அச்சட்டம் விதிக்கிறது. பெண் விலங்குகளுக்கும், குட்டிகளுக்கும் முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் 17-வது பிரிவின்படி :

1. எவரும் வனவிலங்குகளைத் தரையிலோ, நீரிலோ அல்லது வானவெளியிலோ, மோட்டார், படகு, விமானம், மூலம் வேட்டையாடக் கூடாது.

2. விமானம், மோட்டார், விசைப் படகைப் பயன்படுத்தி, அவற்றை வன விலங்கு மீது ஏற்றி நசுக்கிக் கொல்லக் கூடாது.

3. இரசாயனங்கள், வெடிமருந்துகள், வலைகள், விஷம், விஷ ஆயுதங்கள், பொறி ஆகியவற்றின் மூலம் வன விலங்குகளை வேட்டையாடக் கூடாது. வன விலங்குகளைப் பிடிக்க உரிமம் பெற்றோருக்கு இது பொருந்தாது.

4. வேட்டையாடுவதற்காகச் செயற்கை விளக்குகளைப் பயன்படுத்தக்கூடாது. பிற மிருகங்களைத் தின்னும் மிருகங்களை வேட்டையாட உரிமம் பெற்றிருந்தால் இது பொருந்தாது.

5. இரவில் வன விலங்குகளை வேட்டையாடக் கூடாது.

6. நீர் நிலைகள், ஓடைகள் ஆகியவற்றில் நீர் அருந்தும் விலங்குகளையும் நீர் நிலைகளை நோக்கிச் செல்லும் விலங்குகளையும் வேட்டையாடக் கூடாது. இது நீர் நிலைகளில் வசிக்கும் பறவை இனங்களுக்குப் பொருந்தாது என்று விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி விதிகள் சாதாரண காக்கைகள், குள்ள நரி போன்ற சிறு பிராணிகளுக்குப் பொருந்தாது.

இச்சட்டத்தின் கீழ் சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், வேட்டையாடுவதற்கான 'ரிசர்வ்' பகுதிகள், தடை விதிக்கப்பட்ட பகுதிகள் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள், ஆகியவை பற்றிய விதிகள் அவற்றினுள் பிறர் செல்வதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அவற்றுக்கு அருகில் வசிப்பவர்கள் தீவிபத்து, ஆயுதம் எடுத்துச் செல்வது, புல் அறுப்பு ஆகியவை குறித்துப்

பொறுப்புணர்ச்சியுடன் பாதுகாவலர்களாக இருக்க வேண்டும்.

சட்டத்தின் 5-வது பிரிவு, வன விலங்குகள் வியாபாரம் செய்யப்படுவதை தடை செய்கிறது. இதன் 39-வது பிரிவின்படி எல்லா வன விலங்குகளும், அவற்றின் மாமிசம், தோல் போன்றவைகளும் அரசாங்கத்தின் சொத்தாகும். எனவே, தலைமை வன விலங்குக் காப்பாளரிடமிருந்து உரிமைச் சான்றிதழ் இல்லாமல் வன விலங்குகளை உயிருடனே, இறந்ததாகவோ வைத்திருப்பது குற்றமாகும்.

இச்சட்டத்தின் 43-வது பிரிவின் கீழ் வன விலங்குகளை வேறிடத்துக்கு அனுப்புவது, ஏற்றுமதி செய்வது ஆகியவற்றுக்குக் கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இவற்றை விற்பது, வேறிடங்களுக்கு அனுப்புவது ஆகியவை அனுமதி பெற்று நடத்தப்பட வேண்டும். இது சம்பந்தமான கணக்குகள் தலைமை வன விலங்குக் காப்பாளரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

44-வது பிரிவின்படி உரிமம் பெற்றிருந்தாலன்றி,

1. வனவிலங்கு பொருட்கள் தொடர்பான வியாபாரத்தில் எவரும் ஈடுபடக் கூடாது.

2. அத்தகைய விலங்குகளின் மாமிசத்தை உணவு விடுதிகளில் சமைப்பதோ பரிமாறுவதோ கூடாது.

### குற்றங்களைக் கண்டுபிடிப்பதும் தடுப்பதும்

இச்சட்டத்தின் 50-வது பிரிவு சில அதிகாரிகளுக்கு, சட்டத்தை மீறுவோரின் வீடுகளில் அல்லது வாகனங்களில் நுழைந்து சோதனை நடத்திப் பொருட்களைப் பறிமுதல் செய்யவும், சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யவும் வகை செய்கிறது. 51-வது பிரிவின்படியான தண்டனை கடுமையானது. குற்றமிழைப்போருக்கு 6 ஆண்டு வரை சிறை தண்டனையும், ரூ. 2 ஆயிரம் வரை அபராதமும் விதிக்கப்படும். வன விலங்குகள் தொடர்பான சில குற்றங்கள் தண்டனையை குறைக்க முடியாத குற்றங்களாகும்.

சட்டத்தை அமல்படுத்துவதில் மக்கள் தரும் ஒத்துழைப்பு நமது காடுகளையும், வன விலங்குகளையும் காப்பதுடன் வன விலங்குகள், பறவை இனங்களின் தொகை அதிகரிக்கவும் உதவும். தேசியச் சொத்தான வன விலங்குகள் மூலம் அவ்வப்போது குறிப்பிடத்தக்க அளவு அந்நியச் செலாவணி கிடைப்பதுடன், சுற்றுலா, பெருகவும் உதவும்.



## உங்களுக்குத் தெரியுமா ?

### 1. குயில் ஒரு சோம்பேறி!

"குக்கூ'' ''குக்கூ'' என்று இனிமையாகக் கூவுவது ஆண் குயில்தான்! இக் குரலுக்கு நேர்மாறானது இதன் குணம். மிகவும் சோம்பேறி. தனது கூட்டினைத் தானே கட்டுவதில்லை. தன் குஞ்சுகளைத் தானே வளர்ப்பதுமில்லை. காக்கையின் கூட்டில் முட்டையிடுகிறது. இரு பறவைகளின் முட்டைகளும் ஒரே மாதிரி இருப்பதாலும், ஒரே காலத்தில் (ஏப்ரல்—ஆகஸ்ட்) முட்டையிடுவதாலும், காக்கைகள் குயில் முட்டைகளையும் சேர்த்து அடை காக்கும். ஆண் குயில் காக்கைக் கூட்டைக் கண்டுபிடிக்கும். அங்கு உட்கார்ந்து கூச்சலிடும். சப்தம் தாளாமல், காக்கை குயில் மீது பாயும். ஆனால் குயில் வெகு தூரத்திற்குப் பறந்து காக்கைகளை அலைக்கழிக்கும். இதற்குள் பெண் குயில் காக்கைக் கூட்டினுள் புகுந்து முட்டையிடும். முட்டையிட்ட பிறகு பெண் குயில் இதன் அடையாளமாக ஒரு குரல் கொடுக்கும். இதனை அறிந்த ஆண் குயில் வேகத்தை அதிகரித்து பறந்துவிடும். இச்சத்தத்தை அறியாத காக்கை குயில் முட்டையை அடைகாத்து உரிய காலத்தில் குஞ்சு பொறித்து அவற்றை வளர்க்கும். இறக்கை முளைத்தவுடன் குயில் குஞ்சுகள் பறந்து விடும்!

### 2. மூன்று முறை பறந்த கவுதாரியைப் பிடிப்பது எளிது!

சாம்பல் நிறக் கவுதாரி, கறுப்பு நிறக் கவுதாரி என்ற இரு வகைகள். முன்னதுதான் சண்டையிடும். முட்டையிலிருந்து வெளிவந்தவுடன், இவை ஓடிச் சாட ஆரம்பித்துவிடும். கவுதாரி நீண்ட நேரம் பறப்பதில்லை. சிறிது நேரம் பறந்ததும் ஓய்வெடுக்கும். மறுபடியும் சிறிது நேரம் பறக்கும். இறக்கைகளை விட கால்களையே அது அதிகம் பயன்படுத்துகிறது. வேகமாக ஓட வல்லது. பறந்தால் களைத்து விடும். மும்முறை பறந்த கௌதாரியைப் பிடிப்பது எளிது என்றும் கூறுவார்கள்.

# மலைச்சாதி மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சி!



இன்றுள்ள சூழ்நிலையில் தொழிற்கல்வி ஒவ்வொரு மாணவருக்கும் தேவைப்படுகிறது. பள்ளிக் கல்வியுடன் தொழிற் கல்வியைக் கட்டாயமாக்கலாமா என்று அரசு ஆய்வு செய்து வருகிறது. எனவே, தொழிற்கல்வி ஒரு நாட்டின் கல்வித் துறையில் தனி இடம் பெறுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு வகைகளில் செய்து வரும் உதவிகளை, மலைச்சாதி மக்களுக்கும் அரசு தொடருகிறது. மலைச்சாதி மாணவர்கள் கல்வி பெறப் பல்வேறு சலுகைகளை அளித்துவருவதுடன், அவர்களுக்குத் தொழிற் கல்வியையும் வழங்குவதற்குத் தமிழ்நாடு அரசு முனைந்து பணியாற்றுகிறது.

மலைச்சாதிப் பையன்களையும் பெண்களையும் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதற்கு, இந்த ஆண்டு, தமிழ்நாடு அரசு சிறப்பு முனைப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. அதன் பொருட்டு, கடந்த ஜூலை திங்கள் 6-ஆம் நாளன்று, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர், நீலகிரி மாவட்டத்தில் கூனூருக்குச் சென்று, மலைச்சாதி ஆண்களையும் பெண்களையும் பேட்டிகண்டு, ஏறக்குறைய 56 பேர்களை, பல்வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ப்பதற்குத் தேர்ந்தெடுத்தார். கோத்தகிரியில் புகழ் பெற்று வரும், மலைச்சாதி மக்களுக்குக் கடந்த 30 ஆண்டுகளாகத் தொண்டு செய்தமைக்காகப் பத்மஸ்ரீ விருது பெற்றவரும், தடுப்பு முறையிலும் சமூக முறையிலும் மருந்து கண்டு பிடித்தமைக்காக பி. சி. ராய் பதக்கம் பெற்றவருமான டாக்டர் நரசிம்மன், இந்த பேட்டியின்போது உறுதுணை புரிந்தார். மற்றொரு சமூகநல ஊழியரும் இந்தப் பேட்டிக்கு ஒத்தாசை செய்தார். அவர், திரு இராசாமி அடிகளார் ஆவார்! சிறந்த கல்வியாளராகத் திகழும் இவர் அரிசன மலைச்சாதி மக்களுக்கு நீலகிரியில் இலவசப் பள்ளியையும், பள்ளி விடுதியையும் நடத்தி வருபவர்.

இந்தப் பேட்டிக்குச் சில நாட்களுக்கு முன்னதாக, நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தைச் சேர்ந்த சமூக நலத் துறை ஊழியர்கள், நீலகிரியிலுள்ள மலைச்சாதிப் பையன்களையும் பெண்களையும் சந்தித்துத் தொழிற் பயிற்சி போன்ற கல்வி முறைக்கு மனுச் செய்யும்படி கேட்டுக் கொண்டனர்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்ககத்தைச் சார்ந்த ஊழியர்கள் மலைப் பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள இளம் வயதினருக்குத் தொழிற் பயிற்சி சம்பந்தப்பட்ட தகவல்களைத் தெரிவித்தனர். தமிழ்நாட்டில் 30 இடங்களில் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன என்றும், அவற்றில் பல்வேறு தொழிற் பயிற்சிகள் பொருத்துதல், எலக்டிரீசியன், வயர்மென், ரேடியோ மெகானிக், மோட்டார் மெகானிக், ரெபிரிஜிரேட்டர் மெகானிக், தச்சுத் தொழில், கருமார்த் தொழில், டிராக்டர் மெகானிக், வெல்டிங் போன்ற பல்வேறு வகைப் பொறியியல் தொழில் கல்வி கற்றுத் தரப்படுகின்றது என்ற விவரத்தை இளம் மலைசாதியினருக்குத் தெரிவித்தனர். துணி வெட்டுதல், துணி தைத்தல், நூல் வேலைப்பாடு செய்தல், பின்னுதல், தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி, அலுவலக நடைமுறைப் பயிற்சி, ரேடியோ மெக்கானிசம், இயந்திர மெக்கானிசம் ஆகிய தொழிற்படிப்புகள் சென்னையில் உள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் கற்றுத் தரப்படுகின்றன என்ற விவரத்தை மலைச்சாதிப் பெண்களுக்குத் தெரிவித்தனர்.

இந்த பேட்டி வெற்றிகரமாக நடைபெற்றது என்றுதான் குறிப்பிட வேண்டும். ஏனென்றால் கடந்த ஜூலை 6-ஆம் நாளன்று கூனூரில் நடந்த இந்த பேட்டியின்போது 48 பையன்களும் 8 பெண்களும் வருகை தந்தார்கள்! இவர்கள் எல்லாம், அங்குள்ள தோடர், கோதர், இருளர், குறும்பர், கட்டுநாயக்கர், மற்றும் பனியர் வகுப்பைச் சேர்ந்த

வர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். முடிவில், பல்வேறு பயிற்சிகளில் கல்வி பெறுவதற்கு 33 பையன்களும், 8 பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 33 பையன்களில் இருவர் கோயம்புத்தூரில் உள்ள தொழிற் பயிற்சி நிறுவனத்திலும், மீதி 31 பேர் கூனூரில் உள்ள தொழிற்பயிற்சி நிறுவனத்திலும் சேருவதற்கு விரும்பினர். அவர்களது விருப்பம் நிறைவேற்றி வைக்கப்பட்டது. மலைச்சாதிப் பெண்கள் சென்னையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இந்தப் பையன்களும் பெண்களும் ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து பல்வேறு வகைப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பயிற்சியைப் பொறுத்து, ஓராண்டுக்கு அல்லது ஈராண்டுக்கு உதவித் தொகையையும், பயிற்சி முடித்த பின்னர் தொழில் முறை சர்டிபிகேட்டையும் அவர்கள் பெறுவார்கள். இந்த சர்டிபிகேட்டுகள், நகர்ப்புறத் தொழில் துறையில் அவர்களைத் தேர்ச்சி பெற்றவர்களாக ஆக்குகின்றன; சுயவேலையை உருவாக்கிக் கொள்ள அவர்களுக்கு வழிவகை புரிகின்றன. இந்த மலைச்சாதிப் பையன்களையும், பெண்களையும் தேர்ந்தெடுத்த போது, அவர்களில்சிலர், நீலகிரிப் பள்ளிகளிலே ஏற்கெனவே பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் என்பது தெரியவந்தது. ஒரு சிலர் விஷயத்தில்தான் குறைந்தபட்சக் கல்வியான எஸ். எஸ். எல். சி. யை விட ஒரு வகுப்புக் குறைவாகப் படித்திருந்தால் போதும் என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டது. தொழிற்பயிற்சி நிறுவனத்தில் அளிக்கப்படும் சிறப்புப் பயிற்சிகளின் மூலம் இந்தத் தகுதிக் குறைவு, சமாளிக்கப்படுகிறது.



தொழிற் பயிற்சியில் சேரவிரும்பிய மலைச்சாதி மாணவர்களையும், மாணவிகளையும் பேட்டி காணும் காட்சி.

இந்தப் பேட்டிக்கு வந்திருந்த பையன்களில் சிலர் நவீன பாணியில் ஆடை அணிந்திருந்தனர். ஆனால், ஆண், பெண் உட்பட இந்த 56 பேர்களில் ஒருவர்கூட சென்னை நகரத்தைப் பார்த்ததில்லை! இவர்களில் ஒரே ஒரு பையன் மட்டும் கோயம்புத்தூரைப் பார்த்திருக்கிறான். ஒரே ஒரு பெண் மட்டும் பெங்களூரையோ, மைசூரையோ பார்த்திருக்கிறாள். அனைவரும், தங்களது சொந்த மலைப்பகுதி மொழியுடன் தமிழ் மொழியை மிகச் சரளமாகப் பேசினர். இந்தப் பெண்களும் ஆண்களும் தங்கள் பயிற்சியைத் தொடங்குவதற்கு மிகவும் ஆர்வத்துடன் காணப்பட்டார்கள். பயிற்சியில் சேர விரும்பிய கெட்டிக்காரனை ஒரு பையன் மட்டும், தனது தந்தை பயிற்சிக்கு அனுப்பச் சம்மதிக்கவில்லை என்று தெரிவித்தான். அதனால், பேட்டிகாணச் சென்றிருந்த குழுவின் உறுப்பினர் அனைவரும் பேட்டி முடிந்தபின் மலைப்பகுதி கிராமத்திற்குச் சென்று, அந்தப் பையனின் தகப்பனாரைச் சந்தித்துப் பேசி, மகனைத் தொழிற் கல்வி நிலையத்துக்கு அனுப்புவதற்கு ஒப்புக்கொள்ள வைத்தனர். தேர்ந்தெடுக்கப் பெற்ற பையன்களில் மூவர், கொத்தடிமைகளாக இருந்திருக்க வேண்டும் அல்லது அவர்களுடைய தந்தையார்களாலோ நெருங்கிய உறவினர்களாலோ சில காலத்திற்கு முன்பு அவர்கள் கொத்தடிமைகளாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புரிந்தது.

தொழிற் பயிற்சி நிறுவனங்களில் மலைச்சாதி இளைஞர்களும் இளம்பெண்களும் சேர்த்துக் கொள்ளப்படுவது இதுதான் முதல் முறையாகும். இம்முறை இனிமேல் தொடரும் எனத் தெரிகிறது.

தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு மற்றும், சேலம் மாவட்டங்களில் உள்ள மலைச்சாதிப் பையன்களையும் பெண்களையும் தொழிற் பயிற்சியில் சேர்ப்பதற்கு, வேலை வாய்ப்பு மற்றும் தொழிற் பயிற்சித்துறை இயக்குநர் தக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகிறார். இதன் தொடர்பாக அவர் மேற்சொன்ன மாவட்டங்களுக்கும் விரைவில் செல்ல இருக்கிறார்.

**மொத்தத்தில், மலைச்சாதியினர் இனி நல்வாழ்வு பெறுவது உறுதி.**

—எஸ். சண்முகசுந்தரம்

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் திரு டி. கே. ஒசா, டாக்டர் நரசிம்மன், திரு இராமசாமி அடிகளார் ஆகியோருடன் தொழிற் பயிற்சியில் சேர விரும்பிய மலைச்சாதிப் பெண்களும், அவர்களுடைய உறவினரும்.**





# வறட்சியால் வாடிடும் மக்களுக்கு வாழ்வளிக்கும் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்!

—ச. கா. பத்மநாபன்,
கோட்ட வேளாண்மைப் பொறியாளர் (இயந்திரம்),
கோயம்புத்தூர்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டம், வறட்சியால் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பெரிதும் உதவுகிறது. கோவை மாவட்டத்தில் முக்கியமாக தாராபுரம் வட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்களுக்கு, இத்திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் குறிக்கோள்கள்**

1. விவசாய விளை நிலங்களில், நீர் வளம் மற்றும் நில வளம் குன்றாத நிலங்களில், நிரந்தரமாகப் பயனுள்ளவையாக இருக்க, நிலத்திற்கேற்பத் தகுந்த வேளாண்மை முறைகளைக் கைக்கொள்வதே மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

2. மக்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து உதவுதல்.

இத்திட்டத்தின் கீழ் சம உயர வரப்புகள் (contour bunds) நிலச் சரிவுக்கு குறுக்கே போடப்படுகிறது. சம உயர வரப்பின் குறுக்கு வெட்டுப் பரப்பளவு 0.56 சதுர மீட்டர். அதாவது வரப்பு 'டிரபீசியம்' வடிவில் உள்ளது. வரப்பின் மேல் அகலம் 0.5 மீட்டரும், கீழ் அகலம் 2.00 மீட்டரும், உயரம் 0.45 மீட்டரும் ஆகும். இந்த வரப்புகள் அமைக்க நிறைய ஆட்கள் தேவைப்படுகிறார்கள்.

இதே மாதிரிக் கசிவுக் குட்டைகள் (Percolation Ponds) கட்டுவதால், குட்டைக்குக் கீழுள்ளபகுதி கிணறுகளுக்கு ஊற்று ஏற்படுவதால், நிறைய மக்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்கப்படுகிறது.

எனவே, தமிழ்நாடு அரசு வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்க, கோவை மாவட்டத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தைத் தீவிரமாகச் செயலாக்கி வருகிறது.

**சாதனை**

தாராபுரம் உட்கோட்டத்திற்கு 2,400 எக்டேர் நிலப்பரப்பில் சம உயர வரப்புப் போட ரூபாய் 5.4 இலட்சமும், 15 கசிவுக் குட்டைகள் கட்ட ரூபாய் 3.75 இலட்சமும் ஒதுக்கப்பட்டு உள்ளது. தாராபுரம் வட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 25 கிராமங்களில் கடந்த மே மாதம் ஆரம்பித்து குறுகியகாலத்திற்குள் சுமார் 2,000 எக்டேர் நிலப் பரப்பிற்கு சுமார் ரூபாய் 2.75 இலட்சம் செலவில் சம உயர வரப்புகள் போடப்பட்டு உள்ளன. இது தவிர 15 கசிவுக் குட்டைகளை அமைக்கும் வேலைகளில், நிழலி, புத்தூர், மருதூர், மூலனூர், கெத்தல்ரேவ் ஆகிய கிராமங்களில் அமைக்கப்படும் 5 கசிவுக் குட்டைகளின் வேலை முடிவடையும் நிலையில் உள்ளது. மற்ற 10 குட்டைகளில் வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

நாள் ஒன்றுக்குச் சராசரி 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பின்



கண்டவாறு பல திறத்தினர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

1. சாதாரணமாக வேலை செய்யும் மக்கள்.

2. மழையின்மை காரணமாகவும், வறட்சியின் காரணமாகவும் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள்.

3. காலையில் தயிர், மோர் விற்று விட்டு மீதியுள்ள நேரங்களில் வேலை செய்யும் மகளிர்.

4. படித்தவர்கள்.

**அரசு தரும் மானியம்**

இந்த மண்வளப் பாதுகாப்புத் திட்ட வேலைகளுக்காக ஆகும் செலவுகளை முதலில் அரசு ஏற்றுக் கொள்கிறது. வேலை முடிந்தபின் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அரசினரால் பராமரிக்கப்படுகிறது. பிறகு செலவிடப்படும் மொத்தத் தொகையில் வறட்சி நிவாரணத்தை முன்னிட்டு 50 சதவிகிதத்தை அரசு ஏற்றுக் கொண்டு, பட்டாதாரர்களுக்கு மானியமாக வழங்குகிறது. (சாதாரணமாக 25 சதவிகிதம் கொடுக்கப்படுவதை வறட்சி காரணமாக 50 சதவிகிதம் அரசு ஏற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது). மீதமுள்ள 50 சதவிகிதத்தை பயனடைந்த பட்டாதாரர்களிடமிருந்து அரசினரால் அவ்வப்போது விதிக்கப்படும் வட்டியுடன் வேலை முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு பத்து ஆண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. எனவே, மண்வளப் பாதுகாப்புத் திட்டம், விளையும் பயிர்களில் அதிக மகசூல் கொடுத்தும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தும் உதவுவதால் மக்கள் இத்திட்டத்தின் அவசியத்தை உணர்ந்து பயனடைகிறார்கள்.

## ஜனநாயகம்

ஜனநாயகத்திற்குக் கடமைப்பட்டிருக்கிறோம். எல்லா மக்களுக்கும், ஜனநாயகம் அர்த்தம் உள்ளதாக இருக்க அதை நாம் மாற்ற விரும்புகிறோம். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வாக்குப்பதிவு செய்வது மட்டுமே ஜனநாயகமாகி விடாது. சாதாரண மனிதன் தனது பகுதி அபிவிருத்தி சம்பந்தமாக எழுப்பப்படும் விஷயங்கள் வெளிப்படவேண்டும் என நாம் கருதுகிறோம். இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கவே முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. நமது நாடாளுமன்ற முறைதான் இந்தியாவுக்குச் சரியானது என நாம் கருதுகிறோம். அதில் சில திருத்தங்கள் தேவைப்படலாம். ஆனால் மொத்தத்தில் அதுதான் சரியானது.

சித்தாந்த ரீதியில் ஒருவரிடம் அதிக அளவுக்கு அதிகாரம் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை நடைமுறையில் சுலபமாகப் பயன்படுத்திவிட முடியாது. அவற்றைப் பயன்படுத்த முதலமைச்சர்களின் உதவி தேவைப்படுகின்றது. மாநில முதலமைச்சர்கள் தங்கள் மாநிலங்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவர்களால் முதலமைச்சர் பதவியில் நீடிக்க முடியாது. மக்களின் ஆதரவு கிடைக்காவிட்டால் எனது கட்சிக்கு நான் தேவைப்பட மாட்டேன். கட்சிக்கு நான் தேவையில்லாவிட்டால், நான் கட்சியில் இருக்கமுடியாது. ஆகையால் ஒவ்வொரு செயலும் மற்றொரு செயலைச் சார்ந்து இருக்கின்றது. ஆகையால் இந்தியா, ஜனநாயக முறையில்தான் வளம்டைந்து சிறக்க முடியும்!

—இந்திரா காந்தி.




# பிளாஸ்டிக் பொருள்களை உருவாக்கப் பயிற்சி தரும் நிலையம்!

—எஸ். பாலசுந்தர்,
இயக்குநர்,
சிப்பெட்.

உலகத்தில் சராசரியாக ஒரு மனிதன் பத்து கிலோகிராம் 'பிளாஸ்டிக்' பொருள்களை உபயோகிக்கிறான். ஆனால் ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் போன்ற முற்போக்கு நாடுகளில் ஒரு நபரால் ஆண்டுக்கு ஐம்பது கிலோ கிராம்'பிளாஸ்டிக்'உபயோகிக்கப் படுகிறது. இந்தியாவிலோ, 0.2 கிலோ மட்டும்தான் தற்பொழுது உபயோகிக்கப்படுகிறது. வருங் காலத்தில் இது படிப்படியாய் அதிகரிப்பது உறுதி.

### தேவை வளர்கிறது

பிளாஸ்டிக்கை ஏதேனும் ஒரு பொருளுக்குப் பதிலாகத்தான் பயன்படுத்துவது என்ற காலம் மாறிப் போய் விட்டது. அதனுடைய தனிப்பட்ட சிறப்பான குணாதிசயங்களினால் தொழில் துறையில் அதிகமாக உபயோகிக்கப்படும் பல பொருட்களுக்கும் தொழில்களுக்கும். 'பிளாஸ்டிக் தற்பொழுது இன்றியமையாததாகிவிட்டது. வரை படம் தீட்டி, தொழில் திட்டம் கொடுப்பவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்! புரட்சியான, புதுமையான கருத்துகளுக்குப் பிளாஸ்டிக் உருவகம் தர முடிவதுதான் இதன் காரணம். பிளாஸ்டிக் அதிக இலகுவானது; அமிலங்கள் இதை அரிக்க முடியாது; எஃகுப் பொருட்களைப் போல் துருப் பிடிக்காது; எந்த வடிவத்திலும் தேவையான வர்ணங்களில் தயாரிக்கலாம்.

### பயிற்சி நிலையம்

நமது நாட்டின் வளர்ந்து வரும் பிளாஸ்டிக் பொருள்களின் தேவையை ஈடு செய்ய, பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழிற் கருவிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சி அளிப்பது மிகவும் இன்றியமையாததாகும். எனவேதான், ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டப்படி (UNDP), 1968-69-ல் உலகத் தொழிற் சங்கத்தின் (ILO) உதவியால், மத்திய அரசாங்கத்தின் பெட்ரோலியத் துறையின் சார்பில், புகழ்பெற்ற கிண்டி தொழிற் பேட்டையில் 'சிப்பெட்' எனப் படும், பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழிற்கருவிகள் பற்றிய




‘சிப்பெட்’ பயிற்சி நிலையத்தில் நவீன இயந்திரங்களைக் கொண்டு பிளாஸ்டிக் தொழிலில் நல்ல பயிற்சி அளிக்கப்படுகிறது.

பயிற்சி தரும் மத்திய நிறுவனம் (Central Institute of Plastic Engineering and Tools) அமைக்கப்பட்டது. பிளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அச்சுகளை வரைந்து உருவாக்குவதும், அச்சுகளைத் தொழிற் பட்டறையில் தயாரிப்பதற்குப் பயிற்சி அளிப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். இதைத் தவிர, குறுகிய காலத்தில் அச்சுகளுக்கு மெருகு ஏற்றுதல், மற்றும் பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிப்புக் கலைகள் போன்ற பல நுட்பமான வேலைகளுக்கு இந்நிறுவனத்தில் பிரத்தியேகமான பயிற்சி தரப்படுகிறது. **தென் கிழக்கு ஆசியாவில் ஜப்பானைத் தவிர, இவ்விதமான பயிற்சி தரப்படும் நிறுவனம் இது ஒன்றே ஒன்றுதான்!**

எழில் கொஞ்சும் சூழ்நிலையில் இதன் கட்டடம், தமிழக அரசு அளித்த 8 ஏக்கர் நிலப்பரப்பில், கம்பீரமாக அமைந்துள்ளது. அனுபவம் முதிர்ந்த தொழில் நுட்ப அலுவலர் ஒருவரைத் தமிழக அரசு இந்த நிறுவனத்தின் இயக்குநராகத் தந்துள்ளது.

இந் நிறுவனம், பதிவு பெற்ற தனித்து இயங்கும் நிறுவனமாகும். இதன் ஆட்சிக் குழுவிலே தலைவரைத் தவிர மத்திய அரசின் சார்பில் ஆறு உறுப்பினர்கள் உள்ளனர். தமிழக அரசின் தொழிற் துறைச் செயலாளரும், தேசிய பிளாஸ்டிக் - ரப்பர் நிறுவனத்தின் தலைவரும், பிளாஸ்டிக் தொழிலில் ஈடுபட்டுள்ள ஐந்து முக்கியமான பிரதிநிதிகளும் இந்த நிறுவனத்தின் இயக்குநரும், ஆட்சிக் குழுவின் மற்ற உறுப்பினர்களும் ஆவர்.

1968-ஆம் ஆண்டு முதல் 1973-ஆம் ஆண்டு வரையிலான ஐந்து ஆண்டுக் காலம், இந்த நிறுவனத்தின் ‘பிராஜக்ட் காலம்’ என்று குறிப்பிடலாம். ஐக்கிய நாடுகளின் உதவியில், நான்கு வெளி நாட்டு நிபுணர்கள், முதன் நான்கு ஆண்டுகளுக்கு இங்குப் பணி புரிந்து, இந்நிறுவனத்திலுள்ள பொறியாளர்களுக்குப் பயிற்சி கொடுத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர்களுக்கு வெளிநாட்டுத் தொழிற்சாலைகளிலும் ஓராண்டுக் காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

**பிளாஸ்டிக் தொழிலின் வளர்ச்சி**

கடந்த 30 ஆண்டுகளாக இந்தியாவில் பிளாஸ்டிக் தொழில் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வருகிறது. 1974-ஆம் ஆண்டில் மட்டும் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் டன்கள் பிளாஸ்டிக் மூலப் பொருள்கள் தயாரிக்கப்பட்டன. 1977-78-ல், இது, இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் டன்களை எட்டி விடும்!

**இலவசப் பயிற்சி**

அச்சுகள் (Moulds) வரைபடத் திட்டப் பயிற்சியும், அச்சுகள் தயாரிப்புப் பயிற்சியும் இலவசமாக இந்நிறுவனத்தில் கொடுக்கப்படுகிறது. இந்தியாவின் பல

மாநிலங்களிலிருந்து வந்து படிப்பவர்களுக்கு இந்நிறுவன விடுதியில் இட வசதி இலவசமாகவும், உணவுச் செலவை அவர்களே பகிர்ந்து கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பயிற்சியைத் தவிர சிறு தொழில் நிறுவனங்களுக்கும், பொதுமக்களுக்கும் ''சிப்பெட்'' இலவசமாக தொழில்நுட்ப ஆலோசனை வழங்குகிறது. தொழிற்சாலைகளின் விருப்பத்திற்கேற்ப, இந்தியாவின் முக்கியமான நகரங்களில் திட்டமிட்டுக் குறுகிய கால, உபயோகமான பயிற்சி முகாம்களை ''சிப்பெட்'' நடத்துகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில், கீழ்க்குறிக்கப்பட்ட நபர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது :

| ஆண்டு | பயிற்சி பெற்றோர் |
|---|---|
| 1968-73 | 406 பேர்கள் |
| 1973-74 | 416 பேர்கள் |
| 1974-75 | 504 பேர்கள் |
| 1975-76 | 511 பேர்கள் |

**தொழில் நுட்ப ஆலோசனைகள் பெற்றோர்**

| ஆண்டு | | ஆலோசனை பெற்றோர் |
|---|---|---|
| 1974-75 | ... | 160 பேர்கள் |
| 1975-76 | ... | 217 பேர்கள் |

**முக்கிய உதவிகள்**

இந்த நிறுவனம் கீழ்க்குறிக்கப்பட்ட நிறுவனங்களின் மாணவர்களுக்குச் செயல்முறைப் பயிற்சி கொடுத்து உதவுகிறது :



**செயல்முறைப் பயிற்சி**

(அ) கான்பூரிலுள்ள 'ஹார்கோர்ட் பட்லர் டெக்னலஜிகல் இன்ஸ்டிடியூட்' விருந்து வரும் 'பிளாஸ்டிக் டெக்னலஜி' பட்டதாரிகள்.

(ஆ) பம்பாய்ப் பல்கலைக் கழகத்திலிருந்து வரும் பிளாஸ்டிக் பொறியியல் பட்டதாரிகள்.

(இ) கிண்டி, பொறியியல் கல்லூரியிலிருந்து வரும் ''பொறியியல் பொருட்கள் உற்பத்தி'' வகுப்பு மாணவர்கள்.

(ஈ) இணைப்புப் பெட்டி இரயில் தொழிற்சாலையின் தொழிலாளர்கள்.

**பொருள் தயாரிக்கும் அச்சு உற்பத்தி வேலைகள்**

கீழ்க்கண்ட நிறுவனங்களுக்குத் தேவையான அதி நுட்பமான அச்சுகள் தயாரிக்கப்படுகின்றன.

(அ) தென்னிந்திய இரயில் தொழிற்சாலை.

(ஆ) இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலை.

(இ) எலெக்ட்ரானிக்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா.

உலகச் சுகாதார நிறுவனத்தின் கீழ், 'ரிச்சர்ட்சன் அண்ட் க்ரூடாஸ்' கம்பெனியின் தயாரிப்புக்காக சில அச்சுகள் மற்றும் சில முக்கியமான ஸ்தாபனங்களுக்கு பிளாஸ்டிக் பொருள்கள் உருவாக்கப்படுகின்றன.

**நிறுவனத்தின் இலவசக்காட்சி**

இவ்வாண்டு ஜூலைத் திங்கள் 22-ஆம் நாள் நடைபெற்ற இலவசக் காட்சியில், சுமார் 2,000 கல்லூரி மாணவர்களும், உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் இந்நிறுவனத்தின் பயிற்சி முறைகளையும், பிளாஸ்டிக் தயாரிப்பு முறைகளையும் கண்டு களித்தனர். 1977-ஆம் ஆண்டு முதல் வெளிநாட்டு மாணவர்களும் இங்கு பயிற்சி பெற வசதிகள் செய்யப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் உதவியால் அடுத்த ஆண்டில் பிளாஸ்டிக் பொருட்களைப் பரிசோதிக்கும் நிலையமொன்று இந்த நிறுவனத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

இந்தியாவில் இத்துறையில் பிரசித்தி பெற்ற ஒரே நிறுவனம் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது தமிழர்களின் பாக்கியம் எனக் கூறலாம். இந்திய நாட்டின் தொழிலதிபர்கள் அனைவரும் இங்கு தரும் பயிற்சி வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் தொழில்களை வெற்றிகரமாக நடத்துவார்கள் என்று நம்புகிறோம்.

சிப்பெட் குளத்திலே வாத்துகள் நீந்தி விளையாடுகின்றன.



# குடும்பநலத் திட்டத்திற்கு மதம் தடையாக இல்லை !



## திருமதி ஹவாமா

வாலாஜாபேட்டை மருத்துவ மனையில் குடும்பநல நிரந்தர சிகிச்சை செய்து கொண்ட திருமதி ஹவாமா இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர். தன் வீட்டுக்காரருக்கு தேங்காய் வியாபாரம் என்றும், கிடைக்கின்ற வருவாய்க்குள் நல்லபடியாகக் குடும்பம் நடத்த குடும்ப நலத்திட்டம் அவசியம் என உணர்ந்து, தானே நிரந்தரக் கருத்தடை செய்து கொண்டதாகக் கூறினார். மதம் இதற்குத் தடையாக இல்லை என்றும் தானும் தன் கணவனும் கலந்து பேசி, மனம் ஒப்பி இச்சிகிச்சை செய்து கொண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## திருமதி சரோஜா

வாலாஜாபேட்டை மருத்துவ மனையில் ஆண்குழந்தை பெற்றெடுத்துள்ள இவர் கிறித்துவ மார்க்கத்தைச் சேர்ந்தவர் (பந்தகோஸ்த் பிரிவு). தனக்குப் பிறந்திருப்பது இரண்டாவது பிள்ளை என்றும், ஏழ்மையான நிலையிலுள்ள தங்களுக்கு இரண்டே குழந்தைகள் போதுமென்று கருதியே, தான் குடும்பநல நிரந்தரச் சிகிச்சை செய்து கொண்டதாகவும், மதம் இத்திட்டத்திற்கு எதிராக இல்லையென்றும் அவர் தெரிவித்தார்.



# தமிழ்நாட்டில் குடும்ப நல முனைப்பு இயக்கம்

எஸ். முத்துராமலிங்கம்

இந்திய அரசு அளித்திடும் முழு நிதி உதவியோடு தமிழ்நாட்டில் குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டம் சோமங்கலத்தில் ஊரக வளர்ச்சித் திட்டத்தைத் துவக்கி வைத்த நமது பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், 'குடும்ப நலத் திட்டத்தைச் செயல் படுத்துவதில் தமிழ்நாடு சிறந்த பணியாற்றியுள்ளது. என்றாலும் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன' என்று குறிப்பிட்டார். இருபது அம்சப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்துச் செயல் படுத்துகின்ற நமது பிரதமர் அவர்கள், அத்தனைக்கும் அடிப் படையானது குடும்பநலத் திட்டம் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். சிறப்பாக ''நாட்டினுடைய மொத்தவளர்ச்சிக்குத் தடையாக எந்தக் குழுவும் (அரசியல் மற்றும் எவ்வகையைச் சார்ந்தவையாயினும்) இயங்க அனுமதிக்க முடியாது'' (No Community no group, political or otherwise can be allowed to stand in the way of the entire nation's progress) என்று திட்ட வட்டமாகக் கருத்து அறிவித்துள்ளார். அந்த வகையில், குடும்ப நலத் திட்டம் சாதி, சமய, இன வேறுபாடுகள் ஏதுமின்றி மக்கள் அனைவராலும் ஏற்கக் கூடிய சூழ்நிலையில் உருவாகி வருகிறது.

நமது பிரதமர் அவர்களும், இந்திய நல்வாழ்வு-குடும்பநலத் துறை அமைச்சர் அவர்களும், மற்ற மற்ற மத்திய அமைச்சர்களும் சிறப்பாகக் குடியரசுத் தலைவர் அவர்களும், நமது ஆளுநர் அவர்களும் தொடர்ந்து இத்திட்டத்தை வலியுறுத்தி வருவதாலும், இளைஞர்களும், மற்ற தன்னியக்க ஸ்தாபனங்களும், ஏனைய சமுதாயப் பெரியவர்களும், இடைவிடாது சிறு குடும்ப நெறியினைப் பரப்பி வருவதாலும் இத்திட்டம் மக்கள் திட்டமாக மலர்ந்து வருகிறது.

**இலக்கு :**

தமிழ்நாடு இந்த ஆண்டு 5 இலட்சம் பேர்களைக் குடும்பநல நிரந்தரச் சிகிச்சையை ஏற்கச் செய்யவேண்டுமென இந்திய அரசு இலக்குத் தந்துள்ளது. அந்த இலக்கையும் தாண்டி 6 இலட்சம் பேர்களைக் குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை ஏற்கச் செய்யத் திட்டமிட்டுப் பணியாற்றி வருகிறது நம் மாநில அரசு.

இந்திய அரசு நம் மாநிலத்திற்கு இவ்வாண்டு தந்துள்ள இலக்கு, சென்ற ஆண்டு இலக்கைவிட இரு மடங்காகும்! இந்தியாவிலேயே பரப்பாலும் மக்கள் தொகையாலும் மிகப் பெரிய மாநிலம் எனப்படுபவைகளுக்குத் தரப்பட்டுள்ள இலக்கைக் காட்டிலும் நம் மாநிலத்திற்குத் தரப்பட்டுள்ள இலக்கு அதிகமானது ஆகும்!

**முனைப்பு இயக்கம் :**

நம் மத்திய அரசு தந்துள்ள இலக்கை எட்டுவதற்காக 'குடும்ப நல முனைப்பு' இயக்கங்களை நடத்த அரசு முடிவு செய்துள்ளது. அந்த முடிவுக்கு ஏற்ப மாவட்டங்களில் முனைப்பு இயக்கங்களும் நடந்தேறி வருகின்றன.

நல்வாழ்வு-குடும்ப நலத் துறையுடன், அனைத்துத் துறைகளும் இணைந்து செயல்பட்டு அந்தந்த மாவட்டங்களுக்கு தரப்பட்டுள்ள இலக்கையும் தாண்டி வெற்றிகள் குவிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் தலைமையில் அனைத்துத் துறையினரும் அரும்பணியாற்றி வருகின்றனர். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவை முனைப்பு இயக்கங்களை நடத்திட முறையே ரூ. 500, ரூ. 5,000க்கு மேல் போகாமல், நிதி வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதித்துள்ளது.

இலக்கு மீறிய சாதனையை இவ்வாண்டு ஏற்படுத்தவேண்டுமென்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. இத்திட்டச் செயலாக்கத்தில் அரிமா சங்கங்கள், ரோட்






டரி சங்கங்கள், ரவுண்ட் டேபிள்ஸ், மாதர் சங்கங்கள், இளைஞர் சங்கங்கள், தேசிய மாணவர் சங்கங்கள், இன்னும் வெவ்வேறு வகையில் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்ற தன்னியக்க ஸ்தாபனங்கள் ஆகிய அனைவரது ஒத்துழைப்பையும் முழுமையாக ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது அரசு!

**தொழிலாளர் ஈடுபாடு :**

குறிப்பாகத் தொழிலாளர் சமுதாயத்தை முழுமையாக இத்திட்டத்தை ஏற்கச் செய்ய வேண்டும் என்பதில் அரசு தனி அக்கறை காட்டி வருகிறது. இதன் பொருட்டு, ஆளுநர் அவர்களின் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தொழில் அதிபர்கள் கூட்டமொன்றை நடத்தி, அவரவர் தங்கள் தங்கள் தொழிலாளர்களை குடும்ப நலம் ஏற்கச் செய்வதோடு வேறு வகைகளிலும் இத்திட்டம் வெற்றி பெற உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தொழிலாளர்களை நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்ய வேண்டும் என்பதற்காக, அந்தந்த நிருவாகத்தினரும் அரசு வழங்கும் ஈட்டுத் தொகையோடு கூட, தங்கள் நிதியிலிருந்து ஊக்கத் தொகை வழங்கி தொழிலாளர்களுக்கு ஆர்வமூட்டி வருகின்றனர். இது நல்ல விளைவை ஏற்படுத்தி வருகிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பொரேஷன் நிருவாகம், திருச்சி பாய்லர் தொழிற்சாலை, திருச்சி இராணுவத் தொழிற்சாலை, திருநெல்வேலி இந்தியா சிமெண்ட்ஸ், இராஜபாளையம் மெட்ராஸ் சிமெண்ட்ஸ், டி.வி.எஸ்., சென்னை பின்னிக் கம்பெனி, சென்னை கப்பற்கூடத் தொழிலாளர் நிறுவனமும், சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகமும், பிறவும் குடும்ப நல முகாம்களை நடத்தி, தொழிலாளர்களை நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்து வருகின்றன.

**இந்தியன் வங்கி :**

வங்கிகளின் வரலாற்றிலேயே முதன் முதலாக தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுள் ஒன்றான 'இந்தியன் வங்கி' (Indian Bank) சென்னையில் பொது மக்களுக்கென குடும்ப நல முகாம் நடத்தி முடித்திருக்கிறது. இந்தியன் வங்கியின் அண்ணாநகர்க் கிளை, வைணவக் கல்லூரி மாணவர்கள் இந்தியக் குடும்ப நலச் சங்கத்தின் சென்னைக் கிளையினர் ஆகியோரது ஒத்துழைப்புடன் பொதுமக்களுக்கென இம்முகாமை ஏற்பாடு செய்து நடத்தியது. தமிழ்நாடு அரசு நல்வாழ்வு-குடும்ப நலத் துறைச் செயலாளர் திரு. பி. முராரி அவர்கள் துவக்கி வைத்த இம்முகாமில் பத்தே நாட்களில் 101 தந்தைமார்கள் நிரந்தரக் கருத்தடை ஏற்றனர். இவர்களுக்கு அரசு வழங்கிய ஈட்டுத் தொகையோடு கூட, ரூ. 40 பெறுமான பொருட்களை 'இந்தியன் வங்கி' தன் நிதியிலிருந்து வாங்கி அளித்தது. சென்னையிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்த வங்கியின் கிளைகள் அந்தந்தப் பகுதிகளிலே இப்படிப்பட்ட முகாம்களைத் தொடர்ந்து நடத்தினால் வெற்றிகள் கிட்டுவது நிச்சயம்.

மேலும் 'இந்திய வங்கியினர்' தேசிய மருத்துவர்கள் அமைப்புடன் (National Doctor's Forum) இணைந்து ''டாக்டரைச் சந்தியுங்கள்'' என்ற முகாமினை நடத்தி, நாட்டுப்புற மக்கள் மருத்துவ வசதி பெற இணைப்புப் பாலமாக இருந்து வருகின்றனர். சென்னையில் கடந்த 3-10-'76 ஆம் நாள் நடந்த விழா ஒன்றில் இந்தியத் தொழில் அமைச்சர் திரு டி. ஏ. பாய் அவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. யஷ்பால் கபூர் அவர்களும் குடும்பநலத் திட்டம் ஓங்க இந்தியன் வங்கி எடுத்து வரும் முயற்சிகளுக்காகப் பாராட்டுரை வழங்கி, மற்ற வங்கிகளும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். 20 அம்சப் பொருளாதாரமேம்பாட்டுத்திட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட வங்கிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதுபோல், குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற இந்தியன் வங்கியை முன் மாதிரியாகக் கொண்டு அனைத்து வங்கிகளும் செயல்பட முனைந்தால் நல்ல பலன் விளையும் என்பது உறுதி.

**இரு வார விழா :**

கடந்த செப்டம்பர் மாதம் இந்தியா முழுவதும் எடுக்கப்பட்ட 'குடும்ப நல இரு வார விழா' நிகழ்ச்சிகள் திட்டச் செயலாக்கத்திற்கு உறுதுணையாக இருந்தன எனலாம். தமிழ்நாட்டில் இரு வார விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. சென்னையில் மேதகு ஆளுநர் மோகன் லால் சுகாதியா அவர்கள் கலந்து கொண்ட கூட்டம்—இசை நிகழ்ச்சி, கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம், மேலவைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் நடுவராக இருக்கப் பட்டி மன்றம், திரு. கருப்பையா மூப்பனார், திரு. ஜெகவீர பாண்டியன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரும் பிறரும் கலந்து கொண்ட 'இளைஞர் நாள்' நிகழ்ச்சிகள், மத்திய சமூக நல போர்டு தலைவர் திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் கலந்து கொண்ட 'மகளிர் நாள்' நிகழ்ச்சிகள்,

திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களது குடும்ப நலக் கதா காலட்சேபம் ஆகிய நிகழ்ச்சிகள் அனைத்தும் மக்களிடையே 'சிறு குடும்ப நெறி'யைப் பரப்பப் பெரிதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. புகழ்மிக்க திரைப்பட நடிகர் நடிகைகள் கலந்து கொண்ட கூட்டங்கள், நடித்த நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், சிறப்புப் பெற்ற திரைப்பட பின்னணிப் பாடகர்கள் கலந்து கொண்ட இசை நிகழ்ச்சிகள் ஆகியவை இரு வார விழா நிகழ்ச்சிகளுக்கு மெருகூட்டின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ் விழாக்களில் கலந்து கொண்டு பயன் அடைந்தனர். சென்னையில் மட்டுமின்றி மாவட்டங்களிலும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தேறின. இவை அனைத்தும் மாநிலத்தில் நடந்து வரும் முனைப்பு இயக்கங்கள், சிறு முகாம்கள் ஆகியவற்றின் வெற்றிக்கும், பொதுவாகக் குடும்ப நலத்திட்டச் செயலாக்கத்திற்கும் பெரிதும் உதவின.

**செய்தியாளர் பயணம்:**

இவற்றோடு பத்திரிகைகள், வானொலி, டெலிவிஷன் ஆகியவை இத்திட்டத்தை மக்களிடையே பரப்பிட நல்ல ஒத்துழைப்பை நல்கி வருகின்றன. சிறப்பாக, முனைப்பியக்கம் நடைபெறும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு கடந்த 24—9—'76 ஆம் நாள் சென்னையிலிருந்து செய்தியாளர் குழு ஒன்று சென்று கண்டு வர ஏற்பாடு செய்தது அரசு! இக் குழு துலுக்கப்பாளையம் என்ற கிராமத்திற்கு முதலில் சென்று, குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை செய்து கொண்ட இஸ்லாமியத் தந்தைமார்களைச் சந்தித்து உரையாடியது. பின் காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பாணாவரம்ஆரம்ப சுகாதார நிலையம், வாலாஜாப் பேட்டை அரசு மருத்துவ மனை, வேலூரிலுள்ள அரசினர் தலைமை மருத்துவமனையான பென்ட்லண்டு மருத்துவமனை ஆகியவற்றிற்குச் சென்று நிரந்தரக் கருத்தடை ஏற்ற தந்தைமார்களையும் தாய்மார்களையும், மருத்துவர்களையும் சந்தித்து முனைப்பு இயக்கம், குடும்பநலம் பற்றிக் கேட்டறிந்தது. இறுதியாக மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து உரையாடிய பின் அக்குழுவினர் சென்னை திரும்பினர். செய்தியாளர் குழு சென்று வந்த தன் பயனாக முனைப்பு இயக்கம், குடும்ப நலம் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் விரிவாக வெளிவந்தது. மக்கள் அறிந்து கொள்ளும் நிலை ஏற்பட்டது.

**குறிப்பிடத்தக்க சாதனைகள்:**

மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டம் திருப்புத்தூரில் உள்ள கிறித்துவ மிஷன் ஆஸ்பத்திரியில் பத்தே நாட்கள் குடும்ப நல சிறு முகாம் (Mini Camp) ஒன்றை நடத்தி 2,048 பேர்களையும், இராஜபாளையத்தில் ஒன்பது நாட்கள் முகாம் நடத்தி 2,327 பேர்களையும் நிரந்தரக் கருத்தடை ஏற்கச் செய்துள்ளனர். 22-9-'76 ஆம் நாள் மட்டும் மேற்சொன்ன திருப்புத்தூர் மருத்துவ மனையில் 350 குடும்ப நல நிரந்தரச் சிகிச்சைகள் செய்து முடிக்கப்பட்டன என்பது, அம்மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் குறிப்பிடத் தக்க சாதனையாகும்.

திருச்சி மாவட்டத்தில் ஒரு புதுமை. மாவட்டத்திலுள்ள மில் சொந்தக்காரர்கள் சங்கம், வணிகர்கள் சங்கம் போன்ற பல்வேறு வகையான சங்கங்கள் — 50க்கும் மேலானவை தம் தம் பகுதிகளில் குடும்ப நல விளம்பரப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன. தனிக் கூடாரம் அமைத்து ஒலிபெருக்கி வாயிலாக குடும்ப நலச் செய்திகள் விளம்பரப் படுத்தப்படுகின்றன. அதோடு அப்பகுதிகளில் வாழும் தகுதி வாய்ந்த தம்பதிகளைச் சந்தித்து, விளக்கம் அளித்து, குடும்ப நல நிரந்தரச் சிகிச்சைக்குக் குறிப்பிட்ட மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கின்றன. நிரந்தரக் கருத்தடை ஏற்கும் ஒவ்வொருவருக்கும் அரசு வழங்கும் ஈட்டுத் தொகையோடு கூட, ரூ. 25 பெறுமான பொருட்களை அச்சங்கங்கள் தங்கள் நிதியிலிருந்து வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டத்திலும் முனைப்பு இயக்கம் நடந்து வருகிறது. இங்கு, மழையூர் ஆரம்ப சுகாதார நிலையம் 761 பேர்களுக்குக் குடும்ப நல நிரந்தரச் சிகிச்சை செய்துள்ளது. இதில் 731 சிகிச்சைகள் இரு வார விழா நடந்த செப்டம்பர் மாதத்தில் நடந்தேறின என்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் இம்மாவட்டத்திலுள்ள கோட்டைக்காடு என்ற ஊர் ரோமன் கத்தோலிக்கக் கிறித்துவர்கள் வாழும் ஊர். இவ்வூரைச் சார்ந்த 25 தந்தைமார்கள்—ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தோர் நிரந்தரக் கருத்தடை ஏற்றுள்ளனர்.

தர்மபுரி மாவட்டம் இவ்வாண்டுக்கான இலக்கையும் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது என்ற வானொலி தந்த மாநிலச் செய்தி மகிழ்ச்சியூட்டுவதாகும். மேலும் மதுரை, திருநெல்வேலி, நீலகிரி மாவட்டங்களில் முனைப்பு இயக்கங்கள் நடந்து வருகின்றன. சேலம் மாவட்டம் சிறு முகாம் நடத்தி முடித்துள்ளது. மற்ற மாவட்டங்களும் குடும்ப நலத் திட்டத்தைத் தலையாய பொறுப்பாக ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றன.

மாநிலம் முழுவதிலும் நடந்தேறி வரும் குடும்ப நல முனைப்புப் பணிகளுக்கு உறுதுணையாக குடும்ப நல இரு வார விழா அக்டோபர் 17-ஆம் நாள் முடிய நீடிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட பல்வேறு வகைப் பணிகளால் குடும்ப நலத் திட்டம் கணக்கமின்றி வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு, இலக்கு மீறிய சாதனை ஏற்படுத்தப்படும். அதன் வழி இந்திய மாநிலங்களுள் சிறந்த மாநிலம் என்ற பெயரைத் தமிழ்நாடு பெறும் என எதிர் நோக்கலாம்.



# குழந்தைக்குத் தேவை சத்தான உணவு
# பயிருக்குத் தேவை விஜய்

குழந்தையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் சத்துணவைப்போலவே பயிர்களும் நன்கு வளர்ந்து முழுப் பலனையும் தர தழை, மணி, சாம்பல் சத்துக்கள் அவசியம்.

ஆனால் நெற்பயிருக்கு தழைச்சத்தைத்தரும் யூரியாவை மட்டும் இட்டால போதுமானது எனக் கருதக்கூடும். அவ்வாறு யூரியாமட்டும் இட்டால் பயிர்கள் பூச்சிகளால தாக்கப்படும். வறட்சியைத் தாங்காது. மேலும் நாளடைவில் மண்ணின் தன்மைகெட்டு விளைச்சலும் குறையும்.

தழைச்சத்துடன் மணி, சாம்பல் சத்துக்களை இடுவதுதான் லாபகரமானது என ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன:—

நெல் (ஏக்கருக்கு)

| உரம் | சாகுபடி செலவு ரூ. | விளைச்சல் (மூட்டை 75 கிலோ) | வருவாய் (1 மூட்டை 60 ரூ. விகிதம்) |
|---|---|---|---|
| 40 கிலோ தழைச்சத்து மட்டும் | 1040 | 18. | 1080 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து | 1180 | 23 | 1380 |
| 40 கிலோ தழைச்சத்துடன் 20 கிலோ மணிச்சத்து 20 கிலோ சாம்பல்சத்து | 1215 | 30 | 1800 |

இவ்வாறு மூன்று சத்துக்களையும் இடும் போது கூடுதல் செலவு ரூ. 175க்கு அதிக வருவாய் ரூ. 720 கிடைக்கிறது.

அதிக வருவாய் தரும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை சமச்சீர் அளவில் கொண்டது விஜய் 17-17-17. இத்துடன் விஜய் யூரியாவையும், உங்கள் நெற்பயிருக்கு உபயோகித்து அதிகப்பயன் பெறுங்கள்.

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்:
ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், திருச்சி 620 017






MFL-1162



# வன உயிரினங்களைப் பாதுகாத்து நாட்டின் வளம் பெருக்குவோம்!

சா. விசுவநாதன்,
உதவி வனப் பாதுகாவலர்
(வன விலங்குப் பிரிவு)

'Wild Life' என்ற ஆங்கிலச் சொல்லிற்கு வன விலங்கு என்ற தமிழ்ச் சொல்லைத்தான் நாம் பயன்படுத்துகிறோம். ஆனால் இச் சொல்லிற்கு ''வன உயிரினம்'' என்று கூறினால் சாலச் சிறந்ததாயிருக்கும். ''Wild Life'' என்ற சொல் வனத்திலுள்ள தேனீக்கள், வண்ணாத்திப் பூச்சிகள் போன்றவற்றிலிருந்து பெரிய பறவைகளையும், மீன், திமிங்கலம் போன்ற நீர்வாழ் பிராணிகளையும், ஆமை, முதலை போன்ற நீர்-நில வாழ் பிராணிகளையும், எலி முதல் காண்டாமிருகம் வரையுள்ள பெரிய விலங்குகளையும், காட்டில் இயற்கையாக உள்ள தாவர இனங்களையும் தன்னுள்ளே கொண்டுள்ளது. இவற்றிற்கு தொன்று தொட்டு, நமது இதிகாச புராணங்களிலும், சரித்திர சாஸ்திரங்களிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அசோகர் காலத்திலேயே வன விலங்குகட்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு உள்ளது. சில வகைக் காடுகளைப் பாதுகாப்பதற்காக 'அபயாரண்யம்' என்ற வகைக் காடுகள் ஏற்படுத்தப்பட்டன. வேட்டையாடுதலில் அதிக நாட்டம் கொண்ட மொகலாயர்கள் காலத்திலும் வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் முற்பகுதியில் கூட இத்தகைய பாதுகாப்புகள் தொடர்ந்தன. இக்காலத்தில்தான் இயற்கைச் செல்வத்தின் மீது ஆராய்ச்சியாளர்கள் அக்கறை கொண்டனர். பல்வேறு புள்ளினங்கள் பற்றியும், விலங்கினங்கள் பற்றியும் அவற்றின் இருப்பிடம், பழக்க வழக்கங்கள் ஆகியவை பற்றியும் இயற்கை வல்லுனர்கள் ஆராய்ந்தார்கள். இவை ஒரு புறம் நடக்க, மற்றொரு புறம் நடந்தது என்ன?

## வேட்டையினால் விளைந்த விபரீதம்!

நாகரிகம் வளர்ந்தது! மக்கள் தொகை வளர்ந்தது! தொழில்கள் பெருகின. பல காடுகளில் செல்லும் சிற்றாறுகளிலும் அணைகள் கட்டப்பட்டன. மனிதர்கள் காடுகளை அழித்தனர். விவசாயம் செய்தனர். வளரும் தேவைக்கேற்ப பெரிய மரங்கள் வெட்டப்பட்டன. வன விலங்குகளின் இருப்பிடம் அழிய ஆரம்பித்தவுடன், தங்க இடமின்றி இவையும் மறைய ஆரம்பித்தன. இது மட்டுமா? ஆதி மனிதர்கள், கற்களால் அடித்து வேட்டையாடிய காலம் போனது. வில்லம்பு கொண்டும் ஈட்டி கொண்டும் வேட்டையாடினர். இவ்வாறு செய்தது அவர்களது வீரத்தைக் காட்டின. சில சமயங்களில் அடிபட்ட மிருகங்களுடன் வேட்டைக்காரன் கட்டிப் புரண்டும் சண்டையிட்டுள்ளான். ஆனால் காலம் வளர வளர, நாகரிகம் பெருகப் பெருக, வசதிகள் வளர வளர இம்முறையும் வளர்ந்தது. வாகனங்கள், அதிக சக்தியுள்ள துப்பாக்கிகள் (தொலை நோக்குக் கருவி கொண்டவை), பிரகாசமான விளக்கு (Search Light) போன்றவைகளுடன், ஜீப்பில் உட்கார்ந்தவாறே மிருகங்களை பிரகாசமான விளக்கின் மூலம் ஒரு நிலைப்படுத்திச் சுட்டுக் கொன்றான். வசதி அதிகமானவுடன் வேட்டையாடுதல் மிக எளிதாய் விட்டது. எனவே, பெருமையடைய வேண்டும் என்ற நோக்கிலேயே பலர் வேட்டையாடினர். சர்குஜா மன்னர் தனது காலத்தில் 1,100 புலிகளைக் கொன்றதாகத் தெரிகிறது. இதைத் தவிரவும் சிறிய மிருகங்களை அழித்ததால், பெரிய விலங்குகள் சரியான உணவின்றியும் அழிந்தன. மன்னர்களும் மற்றும் பலரும் பெருமைக்காக வேட்டையாடிய போது மற்றவர்கள் விலங்குப் பொருள்களான தோல், கொம்பு, பல் முதலியவற்றை விற்பதற்காக வேட்டையாடினர்.

திரு. எஃப். பி. சைமன் என்பவர் தனது 21 வருட வாழ்க்கை

யில், 600 புலிகளைக் கொன்றுள்ளார். அஸ்ஸாமில் ஒரு ராணுவப் பொறியாளர் அநேகமாக ஒவ்வொரு நாளும் ஒரு எருமையையோ, ஒரு காண்டா மிருகத்தையோ சுட்டுள்ளார். ஒரு ரயில்வே அதிகாரி 1850-லிருந்து 1854-க்குள் 100 புலிகளைக் கொன்றுள்ளாராம். இப்பெருமையால் தற்போது புலி ஒரு அபூர்வ விலங்காகி விட்டது.

கிர் காட்டில் ஒருவர் 80 சிங்கங்களை வேட்டையாடி உள்ளார். 10 நாட்களுக்குள் 14 சிங்கங்கள் வேட்டையாடப் பட்டுள்ளன. அதனல் தற்போது இந்தியாவிலேயே கிர் காட்டில்தான், சுமார் 180 சிங்கங்கள் உள்ளன.



எறும்புத் தின்னி

இது தவிர 2-வது உலகப் போரின்போது இராணுவப் பிரிவுகள் காட்டிற்குள்ளேயே முகாம் செய்திருந்தனர். இராணுவ முகாம்! கையில் துப்பாக்கி! சுற்றிலும் மிருகங்கள்! கேட்கவும் வேண்டுமா! பல மிருகங்கள் சுலபமாக விரைவில் அழிந்தன. இதன் பின்னர் உணவு உற்பத்திக்காகக் காடுகள் அழிக்கப்பட்டன. காடுகளைச் சுற்றியுள்ளவர்களுக்கு பயிர்ப் பாதுகாப்புக்காக, துப்பாக்கி உரிமங்கள் வழங்கப்பட்டன. ஏற்கனவேயே காடுகள் அழிந்ததால் போதிய உணவின்றி விலங்குகள் ஆங்காங்கு பயிரை அழிக்கின்றன என்ற காரணத்தை கொண்டு, இந்த உரிமங்களுடன் வேட்டை பெருகிற்று. விலங்குகள் அழிந்தன! இவ்வாறு வன விலங்குகள் கடந்த 150 அல்லது 200 ஆண்டுகளுக்குள் வெகுவாகக் குறைந்து, சிறுத்தை போன்ற சில இனங்கள் அழிந்தே போயிற்று. சில வகைக் குரங்கினங்கள் (Lion tailed Macaque), புலி, சிங்கம், ஓநாய், காண்டா மிருகங்கள், முறுக்கு மான் போன்றமிருகங்கள் அதிசயமாய்ப் போய்விட்டன.

### வனவிலங்குகளைப் பாதுகாக்கப் படிப்படியாய் சட்டங்கள் இயற்றப் பட்டன !

இவற்றைப் பாதுகாப்பதற்காக முதன் முதலில் 1878-ல் இந்திய வனச் சட்டத்தில் வகை செய்தனர். 1879-ஆம்வருடத்தில் யானைகளைப் பாதுகாக்கத் தனிச் சட்டம் உருவாயிற்று. 1882-ஆம் வருடத்திய சென்னை வனச் சட்டத்தில் உரிமமின்றி வேட்டையாடுதலைத் தடுக்கவும், நீல்கை மான், மலபார் அணில், கஸ்தூரி மான், முறுக்கு மான், மயில் போன்றவற்றை வேட்டையாடத் தடை செய்யப்பட்டது. 1887-ல் பறவைகள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. 1912-ல் இது சில வகை விலங்குகள் மற்றும் பறவைகள் பாதுகாப்புச் சட்டமாக மாறியது. இதில்தான் சில வகை மிருகங்கள் மற்றும் பறவைகள் சில காலங்களில் வேட்டையாடப்படக் கூடாது என்று வலியுறுத்தப்பட்டது. இதன் பின்னர் சில வகை மிருகங்களைக் காட்டில் விட்டு வளர்க்கப்பட்டது. 1927-ல் வன விலங்குகள் மற்றும் அவற்றின் பொருள்களின் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டது. 1935-ல் மத்திய மாநில அரசு, மற்றும் வனத் துறை, மண்ணூல் துறை அலுவலர்கள், இயற்கை வல்லுநர்கள் ஆகியோர்கள் கலந்து கொண்ட அகில இந்திய வன விலங்குப் பாதுகாப்புக் கூட்டம் நடைபெற்றது. இதன் பின்னர் வன விலங்குகளின் பாதுகாப்பில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. 1952-ல் இந்திய வன விலங்கு வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இதில் பல வல்லுநர்கள் அங்கத்தினராயினர். இக்குழு, வேட்டையாடுதலைத் தவிர்த்தலால் மட்டும் வன விலங்குகள் அழித்தலைத் தடை செய்ய முடியாது என்று தீர்மானித்தது.

ஆங்காங்கே தேசியப் பூங்காவும், புகலிடங்களும் ஏற்படுத்தத் தீர்மானித்தனர். தேசியப் பூங்கா அல்லது புகலிடங்களில் வேட்டையாடுதல் தடை செய்யப்படுவதுடன், அவற்றில் விலங்குகட்கான உணவு, நீர், உப்பு நக்கி, முதலியவைகளும் ஏற்படுத்தப்பட்டன. சுற்றுலாவினர் வந்து தங்குவதற்கான வசதிகளும், சென்று பார்ப்பதற்கு வாகன வசதிகளும் செய்யப்பட்டன.

### உரிமம் இன்றி வேட்டையாடக் கூடாது !

பலவித ஆராய்ச்சியாளர்களின் கருத்துக்கள் கோரப்பட்டன. கூடிய வரையில் அவை செயல்படுத்தப்பட்டன. வேட்டையாடச் சட்டங்களில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972-ல் வன விலங்குகள் எந்த இடத்திலும் உரிமம் இன்றி வேட்டையாடுதலைத் தடுக்கிறது. மிருகங்களைப் பல வகைகளாகப் பிரித்து ஒவ்வொரு வகைக்கும் பல கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டது. முதல் வகை மிருகங்களின் தோல், கொம்பு போன்ற பொருள்களைவைத்திருப்போர் கூட இதற்கான அனுமதியைப் பெற வேண்டும்.

### நமது கடமை

வெவ்வேறு வகையான தட்பவெப்பச் சூழ்நிலை உள்ள நமது நாட்டில் இயற்கைச் செல்வங்கள் பரந்துள்ளன. காடுகளும், விலங்குகளும் ஒன்றிற்கொன்று அதிக சம்பந்தமுள்ளவை. வன விலங்குகளைப் பாதுகாப்பது வனங்களைப் பாதுகாப்பதற் கொப்பாகும். மிருகங்களைப் பாதுகாப்பதால் நாட்டின் இயற்கைச் செல்வம் பெருகும். புகலிடங்களையும், தேசியப் பூங்காக்களையும் பேணுதலால் சுற்றுலா அதிகரிக்கும். பறவைகளால் விதைகள் பரப்பப்பட்டு அதிக மரம் வளர்கிறது. வண்டுகள் மகரந்தச் சேர்க்கையைத் தூண்டுகிறது. விலங்கு பொருட்கள் அதிக மதிப்புள்ளது. மிருகங்களையும் விற்கும் போது அதிகத் தொகை கிடைக்கிறது. சுற்றுலாவினல் நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்கிறது. வேட்டை உரிமம் மூலமும், உரிமத் தொகை மற்றும் வேட்டை விளையாட்டுக்கு உரிமம் பெற்றவர்கள் செலவழிக்கும் தொகை மூலமும் பல்வேறு தொழில் வளர வாய்ப்பளிக்கிறது. எனவே வன விலங்குகளை நன்முறையில் பாதுகாத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் உதவ வேண்டும்.



# மறக்க முடியாத நினைவுகள்....

சி. யோகீஸ்வர மூர்த்தி

சென்னையில் வன விலங்கு வாரத்தின் தொடக்க விழா தமிழ் நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் தலைமை தாங்க நமது மேதகு ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் துவக்கி வைக்க 4.10.76 அன்று நடைபெற்றது. விழா முடிவின்போது என்னுடைய படமான "புகைப்படக் கருவியின் மூலம் வனவிலங்குகள்" (Through the eyes of a wild life Photographer) என்ற திரைப்படம் காட்டப் பட்டது.

இந்தத் திரைப்படம் எடுக்கும் போது நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் கூறுகின்றேன். இந்தப் படத்தின் முக்கியமான காட்சி பல யானைகள் கூட்டமாக விளையாடிக் கொண்டிருப்பது. இந்தக் காட்சியை எடுப்பதற்காக நானும், எனது மனைவியும், மகனும் தேக்கடி சென்றிருந்தோம். நான் சென்றிருந்த சமயம் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. இருந்தாலும் எனக்கு ஒரு நம்பிக்கை. மழை நின்றவுடன் படம் எடுக்கலாம் என்று. ஆனால் அன்று மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்ததால் மழையுடனேயே அந்தக் காட்சியை எடுக்க நானும் என்னுடைய மனைவியும் மகனும் மற்றும் கேரள வனத் துறை அதிகாரி திரு. ஜோசப் அவர்களும் தாக்கர் என்ற மற்றொருவரும் விசைப்படகில் புறப்பட்டோம்.

திடீரென்று ஒரு யானை கரையில் தென்பட்டது. அதைக் கண்டதும் படகைக் கரையில் நிறுத்தி என்னுடைய மனைவியையும் மகனையும் படகிலேயே இருக்க வைத்து விட்டு நானும் திரு. ஜோசப் அவர்களும், தாக்கரும் யானை சென்ற வழியே எனது புகைப்படக் கருவியை எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தோம்.

சிறிது தூரம் சென்றவுடன் இரண்டு மலைகளுக்கு இடையேயுள்ள அடர்ந்த புதர்கள் நிறைந்த பள்ளத்தாக்கில் நூற்றுக்கணக்கான யானைகள் தங்கள் குட்டிகளுடன் விளையாடிக் கொண்டு இருந்தன. இந்தக் கண்கொள்ளாக்காட்சியை நெடுந்தொலைவில் நின்று பார்த்தோம். பள்ளத்தாக்கில் நேரிடையாகச் சென்றால் எங்களைக் கண்டவுடன் அந்த யானைகள் ஓடிவிடும் என்று கருதி பக்கத்தில் உள்ள மலையில் ஏறி பின் அங்கிருந்து கீழே இறங்கிப் புதர்கள் நிறைந்த இடத்தில் இருந்து அந்தக் காட்சியை எடுக்க வேண்டும் என்பது எங்களுடைய எண்ணம். உடனே நாங்கள் அந்த இடத்தை விட்டுபுறப்பட்டு இடது புறம் இருக்கும் மலையின் உச்சியை அடைந்தோம். காற்று வலப்புறம் இருந்து அடித்துக் கொண்டிருந்ததால் மனித வாடையை யானைகள் நுகர முடியாது.

மலை உச்சியில் இருந்து பார்க்கும்போது யானைகள் கூட்ட



மாகப் பாதாளத்தில் இருந்தது தெரிந்தது. மழை பெய்த சமய மாகையால் மலைச்சரிவு வழுக்கி விடும் என்று கூறி என்னைத் தடுத்தார் நண்பர் ஜோசப் அவர்கள். ஆனால் நான் எடுத்த காரியத்தை முடிக்காமல் விடக் கூடாது என்று கருதி நான் மட்டும் கீழே இறங்கி சென்றேன். மெதுவாக கீழே இறங்கி மூங்கில் புதரை அடைந்தேன். எனக்கும் யானைக் கூட்டத்திற்கும் இடையேயுள்ள தூரம் சுமார் 15 அடிகள்தாம் இருக்கும். அழகான இளங் குட்டிகள் தமது தாயிடம் பால் குடித்துக் கொண்டிருந்தன. தாய் யானை தனது குட்டிகளோடு விளையாடிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் ஆண்டவன் கிருபையால் மழையும் நின்று வெய்யில் அடிக்க ஆரம்பித்தது. உடனே அந்தக் காட்சிகளை என்னிடம் இருந்த 200 அடி ஃபிலிம்மை வைத்துத் திரைப்படமாக எடுத்தேன். கையிலுள்ள ஃபிலிம் எல்லாம் தீர்ந்து விட்டது. ஆனால் அந்த இனிய காட்சியை விட்டுச் செல்ல மனம் இல்லாததனால் அதை ரசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு சிறிய யானைக் குட்டி புதரிலிருக்கும் என்னைக் கண்டு எனது அருகில் வந்து விட்டது. இதைப் பார்த்த அந்தக் குட்டியின் தாய் நான் அந்தக் குட்டிக்கு ஏதேனும் தீங்கு செய்து விடுவேன் என்று கருதி கோபத்தால் துதிக்கையை சுருட்டிக் கொண்டு சத்தம் போட்டு ஓடி வந்தது. அதைக் கண்டதும் புகைப்படக் கருவியோடு பாய்ந்து மேலே ஓடினேன். அப்போது அந்த யானை நான் முதலில் படம் எடுத்த மூங்கில் புதரை அழித்து விட்டு என்னைத் துரத்தியது. சிறிது தூரம் சென்றவுடன் பாறை வழுக்கிச் சேற்றில் விழுந்தேன். அப்பொழுதுதான் மரணத் தறுவாயில் இருக்கும் நிலைமையை என்னால் அறிய முடிந்தது. அப்பொழுது என்னைத் துரத்தி வந்த யானை சுமார் 10 அடி தூரம் தள்ளி நின்று முன் மாதிரியே துதிக்கையைச் சுருட்டிக் கொண்டு காதை விறைப்பாக வைத்துக் கொண்டு சத்தம் போட்டு தன் காலால் அங்கிருக்கும் சேற்றை என் மேல் எறிந்துவிட்டு திரும்பித் தன் குட்டியை நோக்கி ஓடி விட்டது. அந்த நேரத்தில் பல கீனமாய் இருந்த என்னைக் கண்ட யானை என்னைக் கொல்லாமல் பெருந் தன்மையுடன் விட்டுச் சென்றது.

நான் கீழே விழுந்து கிடப்பதையும் யானை என் அருகில் இருப்பதையும் மேலேயிருந்து பார்த்த இருவரும் நான் யானையால் கொல்லப்பட்டு விட்டேன் என்று கருதி வனத்துறை அதிகாரி ஜோசப் அவர்கள் தாக்கரிடம் அலுவலகத்தில் இருந்து ஸ்ட்ரெச்சர்களையும் நான்கு ஆட்களையும் அழைத்து வரச் சொல்லி அனுப்பினார். பின்னால் அவர் என் மனைவி, மகன் இருக்கும் இடத்திற்குச் சென்று நீங்கள் இந்தப் படகில் சென்று ஓய்வு விடுதியில் இருங்கள். உங்கள் கணவர் இப்பொழுது வந்து விடுவார் என்று கூறினார். ஆனால் என் மனைவி அதை மறுத்து, 'என் கணவர் கூடவே செல்கிறேன்' என்று கூறினாள். அப்பொழுது தான் ஜோசப் அவர்கள் என் மகனைத் தனியே அழைத்துச் சென்று, 'உன் தந்தைக்குச் சிறு விபத்து ஒன்று ஏற்பட்டுவிட்டது' என்று கூறினார். இதைக் கேட்டதும் எனது மகன் கதறி அழுது கொண்டே என் மனைவியிடம் கூறினான். இதைக் கேட்டதும் என் மனைவியும் அழ ஆரம்பித்தாள். அந்த நேரத்தில் உடம்பெல்லாம் சேற்றுடனும் புகைப் படக் கருவியுடனும் மலை உச்சிக்கு வந்து சேர்ந்தேன். இதைப் பார்த்ததும் ஜோசப் அவர்கள் கட்டித் தழுவிக் கொண்டார். அப்போது அவர் ''நீங்கள் யானையால் கொல்லப்பட்டு வீட்டீர்கள் என்று நினைத்தேன்'' என்று கூறினார். அதற்கு நான், ''நான் மனிதர்களால் கொல்லப்படுவேனேயன்றி வன விலங்குகளால் கொல்லப்பட மாட்டேன்'' என்று கூறினேன்.

இதுவே என் வாழ்க்கையில் கண்ட அதிர்ச்சியூட்டும் சம்பவம் ஆகும். ஆனால் அதே நேரத்தில் வன விலங்குகளின் பெருந்தன்மையைக் கண்கூடாகக் காண முடிந்தது.

## உங்களுக்குத் தெரியுமா ?

### மலைப்பாம்பின் முட்டைகள் வாத்து முட்டையை விடப் பெரியவை !

பாம்பு வகைகளிலேயே மிகவும் நீளமானது மலைப்பாம்பு. 17 அடி முதல் 20 அடி வரை நீளமிருக்கும். அடர்த்தியான காடுகளில் பாறை பகுதிகளிலும் ஆற்றின் ஓரங்களிலும் இவை வாழ்கின்றன. இந்தியா, இலங்கை, பர்மா, மலேயா, சயாம், ஆப்ரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இவை காணப்படும். இது இரவில்தான் நடமாடும். ஒரே நேரத்தில் 100 முட்டைகள் கூட இடும். முட்டைகள் வாத்து முட்டைகளைவிட பெரியவை. 2 மாதத்திற்குமேல் அடை காக்கும். முட்டையிலிருந்து வெளி வரும் குஞ்சு சுமார் 2 அடி நீளம் இருக்கும். இது சோம்பலாகவும், நிதானமாகவும் இருக்கும். மனிதர்கள் சூழ்ந்து கொண்டால் கூட பரபரப்பு அடையாது. முதுமலையில் ஒரு மலைப்பாம்பு ஒரு புள்ளிமானை விழுங்கியுள்ளது. மற்றொரு பாம்பு ஒரு காட்டெருமைக் கன்றை விழுங்கியுள்ளது. இறகுகள், ரோமம் ஆகியவற்றுடன் இவை விழுங்கிவிடும். இதன் தாடைகள் நன்றாக அகன்று விரியக் கூடியவை. இதன் பற்கள் தொண்டையை நோக்கி வளைந்துள்ளன. எனவே, இரையாகப்பிடிக்கப்பட்ட பிராணி துள்ளத் துள்ள, பற்களில் அது நன்றாக மாட்டிக் கொள்ளும். உடல் தோல் வேண்டுமான அளவு விரியும் தன்மை யுள்ளது. விலா எலும்புகள் மிகத் தளக்கமாக உள்ளன. பிடித்த இரையை வளைத்துச் சுற்றி அதைக்கொன்று உண்ணத் தொடங்கும். வயிறு நிறையத் தின்ற பின் ஒரே இடத்தில் அசைவற்று நீண்ட நாள் சுருண்டு படுத்துக்கிடக்கும். கிண்டியில் ஒரு மலைப்பாம்பு ஒரு கோழியையும் மற்றொரு மலைப் பாம்பையும் ஒரே நேரத்தில் விழுங்கியுள்ளது.

தொகுப்பு: சா. விசுவநாதன்.


அரசின் நடவடிக்கைகளினால்
அத்தியாவசியப் பண்டங்களின்
விலைகள்
கட்டுப்படுத்தப்பட்டுள்ளன !
இந்தியப் பொருளாதார நிலை
கணிசமான அளவு
உயர்ந்துள்ளது.
அரசின் பணி இது !
நாட்டிற்கு உங்கள் பங்கு என்ன ?
வளமான வாழ்வு பெற அளவான குடும்பம் அவசியம் அல்லவா !
இரண்டே பெறுக ! இனிதே வாழ்க !!
குடும்பநலத்துறை,
தமிழ்நாடு அரசு.